# செல்வாக்கு

விசுவாசிக்க மாத்திரம் செய்யுங்கள், விசுவாசிக்க மாத்திரம் செய்யுங்கள்,
எல்லாக் காரியங்களும் கூடும், விசுவாசிக்க மாத்திரம் செய்யுங்கள்;
விசுவாசிக்க மாத்திரம் செய்யுங்கள், விசுவாசிக்க மாத்திரம் செய்யுங்கள்,
எல்லாக் காரியங்களும் கூடும், விசுவாசிக்க மாத்திரம் செய்யுங்கள்.

நாம் நம்முடைய தலைகளைத் தாழ்த்துவோமாக.

2 எங்கள் பரலோகப் பிதாவே, விசுவாசிக்க மாத்திரமே செய்யுங்கள் என்ற இந்தப் பாடலுக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம்! எங்களுடைய கர்த்தர் காக்காய் வலிப்பினால் பாதிக்கப்பட்டிருந்த அந்தப் பையனிடம் வருவதை பார்த்தபோது, “நீ விசுவாசித்தால், என்னால் கூடும், ஏனென்றால் விசுவாசிக்கிறவர்களுக்கு எல்லாம் கூடும்” என்றார். கர்த்தாவே, இன்றிரவு எங்கள் அவிசுவாசத்திற்கு உதவி செய்யும் என்பதே எங்களுடைய ஜெபமாயுள்ளது. எங்களோடு உள்ள உம்முடைய பிரசன்னத்திற்காகவும், உம்மை விசுவாசித்து உம்மை நேசிக்கிற ஜனங்களுக்காகவும் நாங்கள் உமக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். இப்பொழுது அறிந்து கொள்ள, நாங்கள் இருப்போம் என்று அல்ல, ஆனால் இப்பொழுது நாங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னதங்களில் உயர்த்தப்பட்டு, இன்றிரவு எங்களுடைய இராஜாவுடன் உட்கார்ந்து கொண்டு, ஏற்கனவே அவரோடு சரியான நிலையில் அமர்ந்து கொண்டிருக்கிறோம். ஓ, நாங்கள் அவரில் வைத்துள்ள இந்த நம்பிக்கைக்காக நாங்கள் எவ்வளவாய் உமக்கு நன்றி செலுத்துகிறோம், அவருடைய வாக்குத்தத்தங்கள், அது ஒருபோதும் தவறிப்போக முடியாது என்பதையும், அது எப்பொழுதுமே உண்மையாயிருக்கிறது என்பதையும் அறிந்திருக்கிறோம். இன்றிரவு நீர் எங்களைச் சந்திப்பீராக என்று நாங்கள் ஜெபிக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை எடுத்து, எங்கள் தேவைக்கேற்ப அதை எங்களுடைய இருதயங்களில் பகிர்ந்தளித்து, நாங்கள் இன்றிரவு புறப்பட்டு எங்களுடைய வீடுகளுக்குச் செல்லும்போது, நாங்கள் ஓர் இரவு எம்மாவூரிலிருந்து வந்தவர்கள், “வழியிலே அவர் நம்முடனே பேசினபோது, நம்முடைய இருதயங்கள் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா?” என்று கூறினது போலக் கூறுவோமாக. நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

3 அமரலாம். கிறிஸ்துவுக்கு சொந்தமான காரியங்களைக் குறித்து உங்களிடத்தில் பேசவும், உங்களோடு ஐக்கியங்கொள்ளவும், இன்றிரவு மீண்டும் இங்கு வருவதற்கு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நாம் இங்கிருப்பதன் நோக்கம் வேறெந்த நோக்கமுமல்ல, அதைச் செய்யவேயன்றி, அவருடைய வார்த்தையைச் சுற்றி ஐக்கியங்கொள்ள வேண்டுமென்பதேயாகும்.

4 ஒவ்வொரு இரவும் நான் உங்களை மிகவும் தாமதமாக வைத்திருப்பதற்காக வருந்துகிறேன். யாரோ ஒருவர் என்னிடத்தில், “ஜனங்கள் இங்கே சபையிலிருந்து எட்டு முப்பது அல்லது ஒன்பது மணிக்கு வீட்டிற்குச் சென்று விடுவார்கள்” என்றார். ஆனால் நான்—நான் ஒரு தென்பகுதிக்காரன், கொஞ்சம் மெதுவானவன் என்பதை, நீங்கள் அறிவீர்கள். என்னால் அவ்வளவு வேகமாக யோசிக்க முடியாது. நான் அதனோடு என்னுடைய நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

5 ஆனால் என்னுடைய அருமையான ஒத்துழைப்புக்காக நான் நிச்சயமாகவே நன்றியுள்ளவனாயிருக்கிறேன்—தேவன் மேல் விசுவாசம் கொண்டுள்ள ஜனங்களாகிய உங்களிடத்திலிருந்து நான் அதைப் பெற்றுக் கொள்கிறேன். உங்களுடைய—உங்களுடைய அருமையான ஒத்துழைப்பு, பரிசுத்த ஆவியானவர் ஜனங்களின் மத்தியில் அசைவாட அதை மிகவும் எளிதாக்குகிறது. இதை நான் எல்லா இடங்களிலும் காண விரும்புகிறேன், நான்—நான் விரும்புகிறேன், அங்கே விசுவாசிக்கிற ஜனங்களை நீங்கள் கண்டறிய முடியும். தேவன் என்ன செய்தாலும் அது ஒரு பொருட்டல்ல, அவர் எவ்வளவுதான் ஒரு வரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் அது ஒரு பொருட்டல்ல, நீங்கள் அதை விசுவாசிக்க வேண்டும், பாருங்கள், ஏனென்றால் நீங்கள் அதை விசுவாசித்தாலொழிய அது பயனற்றதாயிருக்கும்.

6 இயேசு ஒரு சமயம், வேறொரு தேசத்திலிருந்து வந்தபோது, அவருடைய சொந்த தேசத்திற்கு வந்தார். அவர்கள், “அப்படிப்பட்ட ஒரு இடத்தில் நீர் *இன்ன-இன்னதை* செய்ததாக நாங்கள் கேள்விப்பட்டோம்” என்றனர், ஆனால் அவரால் அநேக வல்லமையான கிரியைகளைச் செய்ய முடியவில்லை. இப்பொழுது நாம் அதை அந்தவிதமாகக் கூற விரும்பவில்லை, ஆனால் அந்த விதமாகவே வேதம் அதைக் கூறுகிறது, அதாவது அவரால் செய்ய முடிந்தது…“அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம், அவரால் அநேக வல்லமையான கிரியைகளைச் செய்ய முடியவில்லை.”

7 தேவனுடைய வல்லமை அதில் உள்ள உங்களுடைய விசுவாசத்தோடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பார்த்தீர்களா? அது பெற்றுள்ள ஒரே எல்லை உங்களுடைய விசுவாசமாயுள்ளது. மேலும்…அதை விசுவாசிக்கிறவர்களுக்கு எல்லாம் கூடும். பார்த்தீர்களா? பரலோகத்தில் ஒரு மகத்தான தேவன் உண்டு, நாம் மாத்திரம் தொடர்பு கொள்ள முடிந்தால், அவரிடம் செல்லும் நேரடித்

தொடர்புபோல, எல்லாக் காரியங்களும் கூடும். பார்த்தீர்களா? ஆனால் நாம் அவரோடு தொடர்பு கொள்ள வேண்டும், எங்கும் எந்தத் தடையும் இல்லாமல், நமக்கும் தேவனுக்கும் இடையே ஒரு தெளிவான இணைப்பு இருக்க வேண்டும். அப்பொழுது அவர், “நீ இந்த மலையைப் பார்த்து, ‘பெயர்ந்து போ’ என்று சொல்லி, உன் இருதயத்தில் சந்தேகப்படாமல் இருந்தால், ஆனால் நீங்கள் கூறினதை விசுவாசியுங்கள்” என்றார். இப்பொழுது, நீங்கள் அதை ஏமாற்ற முடியாது. சாத்தான் எளிதில் ஏமாற்றப்படுவதில்லை, அதனால் உங்களால் அதை ஏமாற்ற முடியாது. ஆனால் நீங்கள் அதை உண்மையாக அறிந்து கொள்ளும்போது, அப்பொழுது அது சம்பவிக்க வேண்டும், பாருங்கள், அது சம்பவிக்க வேண்டும்.

8 எனவே நாங்கள் இங்கிருந்து, அவரைத் தொழுது கொள்கிறோம், அவர் எங்களுடைய ஆத்துமாக்களுக்கு பதினாயிரம் பேரிலும் அழகானவர், சிறந்தவர். இன்றிரவு, இந்த அருமையான ஐக்கியத்தின் நேரத்தில் உங்களோடு இங்கே அமர்ந்திருப்பதற்கு நாங்கள் நிச்சயமாகவே மகிழ்ச்சியடைகிறோம்.

9 இப்பொழுது, வார்த்தையை வாசிக்க விரும்புகிற நீங்கள், அல்லது இடங்களைக் குறித்துக்கொள்கிறவர்களே. இன்றிரவு நான் தெய்வீக சுகமளித்தலின் பேரில் அதிகமாகப் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன், எனவே நான் இன்றிரவு பொருளை ஒருவிதமாகச் சற்று மாற்றினேன் என்று எண்ணினேன். அதை முற்றிலுமாக மாற்றவில்லை, ஆனால் அதிலிருந்து கொண்டு வருகிறேன். ஏனென்றால் நீங்கள் வேதாகமத்தில் உள்ள ஒரு வார்த்தையையும் மாற்ற முடியாது, ஏனென்றால் அது மற்ற வார்த்தைகளோடு ஒத்துப்போகிறது. வேதவாக்கியங்கள் யாவும் ஒன்றாக இணைகின்றன. அது ஒரு—ஒரு…

10 மன்னிக்கவும், இது அவதூறாகத் தென்பட்டால், நான் அதை அந்தவிதமாகப் பொருட்படுத்திக் கூறமாட்டேன். ஆனால் அது ஒரு புதிர் போன்றது என்பதை, நீங்கள் அறிவீர்கள். நாம் வழக்கமாகப் பழைய புதிர்களை வெட்டி—அடுத்து, அதன்பின்னர் நாங்கள் அமர்ந்து, அவைகளை எப்படி ஒன்றாக இணைப்பது என்று ஆராய்வோம். அதன்பிறகு, அந்தப் புதிர் சரியாக அமைய, நாம் ஒன்றிணைக்க முயற்சிக்கும் பொருளின் படத்தை ஓரமாக வைத்திருக்க வேண்டியிருக்கும். நீங்கள் அவ்வாறு செய்யவில்லையென்றால், நீங்கள்—நீங்கள் அதை ஒருபோதும் செய்து முடித்திருக்கமாட்டீர்கள்.

11 இப்பொழுது அந்த விதமாகத்தான் வேதம் உள்ளது. அது ஞானிகளின் கண்களுக்கும், கல்விமான்களின் கண்களுக்கும் மறைக்கப்பட இந்தவிதமாக வெட்டப்பட்டிருக்கிறது; பாருங்கள், அவர்கள் பரிசேயர்களைப் போன்ற சாமர்த்தியமான மேதைகள். இயேசு தேவனை (அதை) அவர்களுடைய கண்களுக்கு

அவர் மறைத்து, கற்றுக் கொள்ளக்கூடிய பாலகருக்கு அதை வெளிப்படுத்துவார் என்று தேவனுக்கு நன்றி செலுத்தினார்.

12 இப்பொழுது நீங்கள் உங்களுடைய மாதிரியை விரும்பினால், உங்களுடைய மாதிரியை ஒதுக்கி வைத்துவிட்டு, வேதவாக்கியம் எவைகளுடன் இணைந்து செல்கிறது என்பதைக் காண விரும்பினால், இயேசுவை இங்கே வைத்து, அவரைக் கவனித்துக் கொண்டே சென்று, அவரை வேதாகமத்தில் பொருத்தி விடுங்கள். நீங்கள் முழு காரியத்தையும் சரியாக வெளியே கொண்டு வந்துள்ளீர்கள், ஏனெனில் அது இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடாய் உள்ளது. புதிய மற்றும் பழைய ஏற்பாடு, இரண்டுமே இயேசுவைக் குறித்து பேசுகின்றன, பாருங்கள், தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து, ஏனெனில் (அவரே) இந்த மீட்பின் புஸ்தகம். அவர் வார்த்தையாயிருந்தார், அவர் வார்த்தையாயிருக்கிறார், அது அவராகத்தான் இருக்க வேண்டியதாயுள்ளது, நீங்கள் பாருங்கள். எனவே இந்த முழு மீட்பின் புஸ்தகமும் உள்ளது, அது இயேசு கிறிஸ்து, தேவனால் பொருத்தமாக; மானிட வர்க்கத்திற்கான மீட்பு, சுகமளித்தல் மற்றும் ஒவ்வொரு காரியத்தின் வாக்குத்தத்தங்களோடும் ஒன்று சேர்த்துள்ளது. பார்த்தீர்களா? இப்பொழுது உங்களுக்கு அது புரிகிறதா? இந்தப் புத்தகம் தேவனால் ஒன்று சேர்த்து வைக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவாகும். பார்த்தீர்களா? அவர் ஒரு மானிடராக வந்து நம்மை மீட்டார், ஒவ்வொரு வாக்குத்தத்தமும் அவருக்குள் இருக்கிறது, உங்களுக்காக உள்ளது, ஏனென்றால் அவர் மீட்பராயிருக்கிறார்.

13 தீர்க்கதரிசியாகிய எசாயாவின் புத்தகத்தில் உள்ள 6-ம் அதிகாரமான எசாயாவை நாம் வாசிக்கும்போது, நமது சூழலுக்குத் தேவையானவற்றைப் பெறுவதற்காக, இன்று இரவு பழைய ஏற்பாட்டைப் திருப்புவோம்.

14 நான் ஏசாயாவின் எழுத்துக்களை விரும்புகிறேன். அவன் ஒரு மகத்தான தீர்க்கதரிசியாயிருந்தான். ஏசாயா முழு வேதாகமத்தையும், அதற்கு ஒரு முன்னுரை போல எழுதினான் என்பதை நீங்கள் எப்போதாவது அறிவீர்களா? அவன் அதைச் செய்தான். ஏசாயா சிருஷ்டிப்பில் துவங்குகிறான், புஸ்தகத்தின் மத்தியில் யோவான் ஸ்நானனைப் பற்றியும், கடைசியில் ஆயிர வருட அரசாட்சிக்கும் வருகிறான். எனவே அவன்…வேதாகமத்தில் அறுபத்தாறு புத்தகங்களும், ஏசாயாவில் அறுபத்தாறு அதிகாரங்களும் உள்ளன, எனவே அது நிச்சயமாகவே முழு வேதாகமத்திற்கும் ஒரு முன்நிழலாய் உள்ளது.

15 இப்பொழுது நாம் 6-ம் அதிகாரத்திலிருந்து வாசிப்போம்.

> *உசியா…மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக்கண்டேன்; அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது.*

*சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள்; அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன; அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து;*

*ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின்* ***கர்த்தர்*** *பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்.*

*கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைந்து, ஆலயம் புகையினால் நிறைந்தது.*

*அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின்* ***கர்த்தராகிய*** *ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன்.*

*அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து, தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து, என்னிடத்தில் பறந்து வந்து,*

*அதினால் என் வாயைத் தொட்டு: இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது என்றான்.*

*பின்பு: யாரை நான் அனுப்புவேன்,* யாரை...*அல்லது யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற* தேவனுடைய...*ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்.*

16 நாம் அதை அவ்வாறு அழைக்க வேண்டுமானால், *செல்வாக்கு* என்ற பொருளின் பேரில் நான் ஒரு பாடப் பொருளை எடுக்க விரும்புகிறேன். செல்வாக்கு என்பது ஒரு மகத்தான காரியம். “நாம் எல்லா மனுஷராலும் வாசிக்கப்பட்டு, எழுதப்பட்ட நிருபங்களாயிருக்கிறோம்” என்று வேதத்தில், நமக்குக் கூறப்பட்டுள்ளது.

17 கிறிஸ்தவர்களாகிய நாம், ஒவ்வொரு மனிதனிடமும் முற்றிலும் நேர்மையாக இருப்பதற்காக, நாம் என்ன செய்கிறோம், என்ன கூறுகிறோம் என்பதை எப்பொழுதுமே கவனிக்க வேண்டும். உங்களால், உங்களுடைய சக மனிதனுடன் நேர்மையாயிருக்க முடியவில்லையென்றால், நீங்கள் நிச்சயமாகத் தேவனோடு நேர்மையாயிருக்கமாட்டீர்கள். ஆகையால் நாம் எப்படி தேவனுக்கு சேவை செய்வது என்பது, ஒருவருக்கொருவர் சேவை செய்வதன் மூலமே ஆகும். நான் உங்களோடு எவ்வளவு நேர்மையாயிருப்பேனோ, அவ்வளவு நேர்மையாக நான்

தேவனோடு இருப்பேன். அந்தவிதமாகத்தான் உங்களுக்கும் எனக்கு உள்ளது. நம்முடைய எல்லா பரிவர்த்தனைகளிலும் நாம் ஒருவருக்கொருவர் நேர்மையாயிருக்க வேண்டும்.

18 யாரோ ஒருவர் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் அதை நினைக்காமலிருக்கலாம், ஆனால் கண்கள் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கின்றன. உங்களுடைய வாழ்க்கை யாரோ ஒருவருக்கு தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒருக்கால் அது ஒரு சிறு பிள்ளையாயிருக்கலாம், அந்தக் குழந்தை வளர்ந்து மற்றொரு ஃபின்னியாகவோ அல்லது மூடியாகவோ அல்லது மற்றவர்களாகவோ இருக்கலாம். நமக்குத் தெரியாது. ஆனால் உங்களுடைய—உங்களுடைய வாழ்க்கை யாரோ ஒருவரின் மீது தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

19 இன்றிரவு நம்முடைய அமைப்பு இதன் பேரிலான ஒரு மகத்தான அமைப்பாய் உள்ளது, ஏனென்றால் இதை இந்தப் பிற்பகலில் வாசிக்கும்போது, நான் ஆய்ந்து படித்துக் கொண்டிருந்தபோது, தேவன் எவ்வளவு மகத்தானவர் என்று நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

20 இன்று காலை, நானும் என்னுடைய மகனும் அந்தத் தெருமுனையைச் சுற்றி நடந்து கொண்டிருந்தபோது, அங்கே ஏராளமான ஜனங்கள் இருந்தனர். நாங்கள் டைம்ஸ் ஸ்கொயரை சுற்றிப் பார்த்தோம், ஏனென்றால் அவர்கள் அதை இடிக்கப் போவதாகக் கூறினர். கட்டு-…பணியானது ஏற்கனவே துவங்கிவிட்டது என்று நான் நினைக்கிறேன். எனவே நான் அதைப் பார்த்துக் கொண்டிருந்தேன், நாங்கள் சில புகைப்படங்கள் எடுத்துக்கொண்டிருந்தோம். ஜனங்கள், கூட்டம்! நான் என் மகன் பில்லியிடம் கூறினேன், நான், “அவர்கள் யாவரும் எங்கே போகிறார்கள்? இதில் என்ன அவசரம்? இதோ அவர்கள் நமக்குக் கீழே ஓடிக்கொண்டிருக்கிறார்கள்; இங்கே, ஒரு ஓட்டம்; நமக்கு மேலே, ஒரு ஓடுதல். நான்…எல்லோரும் அவ்வளவு அவசரமாக எங்கே போய்க்கொண்டிருக்கிறார்கள்?” என்று கேட்டேன்.

21 நாங்கள் நிற்கையில், நாங்கள், “தேவன் எப்படி ஒவ்வொரு நபரின் சிந்தனைகளையும் அறிந்துகொள்ள முடியும்? மேலும், பூமியில் கோடிக்கணக்கானோர் இருந்தும், நீங்கள் கண் சிமிட்டும் ஒவ்வொரு முறையும் தேவனுக்குத் தெரிகிறது என்பது எப்படி சாத்தியம்?” அவர் எல்லையற்றவர்.

22 நீங்கள் அதை அறிந்துகொள்ள விரும்பினால், அதைத் திருப்திபடுத்தவே, அது எப்போதாவது உங்கள் சிந்தையில் தோன்றுமானால், வெளியே சென்று நட்சத்திரங்களை நோக்கிப் பார்த்து, எப்படி அவர் அவைகள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறார் என்று வியப்புற்றால், அப்பொழுது இது என்ன ஒரு சிறு வேலையாக இருக்கும் என்று நீங்கள் பார்க்கலாம். அந்த

நட்சத்திரங்கள், நீங்கள் நூற்று இருபது மில்லியன் ஒளி ஆண்டுகள் விண்வெளியைக் காணும்போது, ஒரு கண்ணாடி வழியாக; ஒளியானது எவ்வளவு வேகமாகப் பயணிக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள், ஏன், நீங்கள் நியூயார்க் மாநிலத்தைச் சுற்றி ஒன்பது என்ற எண்களை வரிசையாக ஓடவிட்டாலும், அதை மைல்களில் பிரிக்க முடியாது. அதற்கு அப்பால் இந்தப் பக்கத்தில் உள்ள அத்தனை நட்சத்திரங்களும் உள்ளன, அங்கே கலிபோர்னியாவில் உள்ள பாலோமர் மலையிலும், மவுண்ட் வில்சன் மலையிலும், அதைக் காணலாம்.

23 அவர் எவ்வளவு மகத்தானவராயிருக்கிறார் என்றும், அவர் எப்படி பூமியை வைத்திருக்கிறார் என்றும் சிந்தித்துப் பாருங்கள்! இந்தப் பூமி அல்லது அந்த நட்சத்திரங்களில் ஒன்று அதனுடைய இடத்தை விட்டு நகர்ந்து, கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தாலும், அது இந்தப் பூமியை பாதிக்கும். அந்த முழு சூரிய குடும்பமும் அதனுடைய இடத்தில் அப்படியே இருக்க வேண்டும். மேலும், பாருங்கள், தேவன் உண்டாக்கின ஒவ்வொரு காரியமும், அதைப் போன்று தேவனுக்கு கீழ்ப்படிகிறது. ஆனால் தேவன் மனிதனை உண்டாக்கினபோது, நீங்கள் பாருங்கள், மனிதன் அவரைவிட அதிகமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது போலிருக்கிறது; அது, நாம் மாத்திரமே அந்த இடத்தில் இருக்கவில்லை. அவைகள் அந்த இடத்தில் தரித்திருக்கின்றன. அவைகள் ஒன்றோடொன்று ஒருங்கிணைக்கப்பட வேண்டிய இடத்தில் தரித்திருக்க வேண்டும்.

24 உதாரணமாக, சந்திரன், சந்திரன் எப்பொழுதாவது அதனுடைய இடத்தை விட்டு நகருமானால், இன்னும் ஒரு சில நிமிடங்களில், பூமியானது தண்ணீரினால் நிறைந்திருக்கும். பாருங்கள், சந்திரன் சமுத்திரத்தை கண்காணிக்கும் நாயைப் போன்றது. “அது கடந்து போகாதபடிக்கு அவர் அதின் எல்லைகளை வகுத்தார்.” சந்திரன் பூமியிலிருந்து திரும்பும்போது, இங்கே அலைகள் உள்ளே வருகின்றன. சந்திரன் அதைப் பிடிக்கவில்லையென்றால், அது பூமியை மூடிவிடும். பார்த்தீர்களா? எனவே சந்திரன் நின்றுவிடுகிறது—அவன் தன்னுடைய முதுகைத் திருப்பிப் பூமியின் மறுபக்கத்தை சுற்றிப் பார்க்கிறான், மேலும்—மேலும் இதோ தண்ணீர் மிகவும் வேகமாக வந்து கொண்டிருக்கிறது, அதன்பின்னர் அவன் திரும்புகிறான். அவன் யெகோவாவின் ஊழியக்காரன். சமுத்திரம் மீண்டும் அதனுடைய இடத்திற்குத் திரும்பிச் செல்கிறது, ஏனென்றால் அது யெகோவாவின் பரிபூரண அசைவைக் காண்கிறது.

25 ஓ, கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர்களாக, சபையில் உள்ள நம்மால் இந்த விதமாக இசைந்து செயல்பட முடிந்தால், நீங்கள் ஒரு மகத்தான, வல்லமையுள்ள ஜீவனுள்ள தேவனுடைய சபையை, ஒரே வரிசையில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். அது அற்புதமாயிருக்கவில்லையா? சரீரத்தின்

ஒவ்வொரு அங்கத்தினரும் அதனுடைய இடத்திற்கு சரியாகச் செயல்பட, ஒவ்வொரு வரமும் அதனுடைய இடத்திற்கு ஒவ்வொரு வரமும் மற்றவருக்கு உதவி செய்வது, ஒவ்வொரு அங்கத்தினரும் மற்றவருக்கு உதவி செய்வதும் அற்புதமாயிருக்கும். அதைத்தான் நாம் காண விரும்புகிறோம். ஆனால் என்றோ ஒரு நாள் நாம் அதைக் காண்போம், அது சரியாக இருக்கும்.

26 இப்பொழுது, இந்த வாலிப நபர், உசியா, ராஜாவாயிருந்தான். ஆனால் அவன் ராஜாவாவதற்கு முன்பு…அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்தில் ஒரு இராஜாவாக இருந்தான். அவன் ஒரு மேய்க்கும் பையனாயிருந்தான்; அவன் வெளிப்புறத்தை விரும்பினான். அவன் ஏசாயாவின் வாழ்க்கையில்—ஒரு பெரிய தாக்கமாய் இருந்தான். ஏசாயா ஒரு வாலிப நபராகவும் கூட, ஒரு வாலிப தீர்க்கதரிசியாயிருந்தான். நீங்கள் இந்தச் சம்பவத்தைப் படியுங்கள், நீங்கள் இரண்டாம் நாளாகமம் 26-ம் அதிகாரத்தை எடுத்துக் கொள்ள விரும்பினால், அது உங்களுக்குச் சொல்லும், எப்படியாய் பதினாறு வயதில், நீதிமானாகிய அவனுடைய தகப்பனாரின் மரணத்திற்குப் பிறகு, அவன் ஆனான்…அவர்கள் அவனை எடுத்து இஸ்ரவேலின்மேல் ராஜாவாக்கினார்கள். அவன் பதினாறு வயதிலேயே அரசாளத் துவங்கினான். அவன் தன்னுடைய பெற்றோரின் செல்வாக்கைக் கண்டிருந்தான்; அவனுடைய தாயார் ஒரு தேவபக்தியுள்ள ஸ்திரீயாயிருந்தாள், அவனுடைய தகப்பனாரும் அவனுக்கு முன்பாக ஒரு தேவபக்தியுள்ள மனிதனாயிருந்தான். மேலும், அதில், அது சரியானதைச் செய்யும்படியான தூண்டுதலை குழந்தைக்கு அளித்தது.

27 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். இன்றைக்கு தேசம் முழுவதிலும் நமக்கு இப்படிப்பட்ட இளம் குற்றவாளிகளின் குற்ற அலை ஒன்று பரவியுள்ளது என்று நான் நினைக்கிறேன், ஆனால், உண்மையில், இது வீட்டில்தான் தொடங்கியது என்று நான் நினைக்கிறேன். பெற்றோர்கள் கைவிடத் தொடங்கினார்கள் என்று நான்—நான் நினைக்கிறேன். அந்தப் பிள்ளை ஒரு நல்ல, பண்டைய நாகரீகமான, தேவபக்தியுள்ள வீட்டில் வளர்க்கப்பட்டிருந்தால்; அது முடிந்துவிடும் என்று நான் கூறவில்லை, நிச்சயமாக முடியாது, ஆனால் அது நிச்சயமாகவே அந்தக் குழந்தைக்குச் சரியான விதமான தாக்கத்தை அளிக்கும். நான் நினைப்பதுண்டு, அநேக சமயங்களில், அதாவது, வீடுகளில் தவறாக வளர்க்கப்பட்ட பிள்ளைகளும், தெருவில் விரட்டப்பட்டவர்களும், மேலும் தாய் ஒரு மதுபானக் கூடத்தில் அல்லது…மற்றும் தந்தை, மற்றும் பலர் இருக்கும்போது, அவர்கள் தமக்காக மட்டும் வாழ்கிறார்கள். அவர்கள் இந்தக் குழந்தையைக் கவனித்துக் கொள்வதில்லை. மற்றொரு காரியம் என்னவெனில், அவர்கள் அதை நேசித்து, அதை ஏற்றுக்கொள்ளும்படி அதற்குப் பாசத்தை கொடுப்பதில்லை. அது இளமையாக இருக்கிறது. நீங்கள் அதை நேசிக்கவும், மரியாதை

செய்யவும், வேதத்தை வாசிக்கவும் போதிக்க வேண்டும்.

28 நான் சூசன்னா வெஸ்லியைக் குறித்து நினைக்கிறேன். அவளுக்குப் பதினேழு பிள்ளைகள் இருந்தனர் என்று நான் நினைக்கிறேன். அது சரி என்றே நான் நினைக்கிறேன். ஆனால் அவள் ஒவ்வொரு நாளும் ஜெபிக்க இரண்டு அல்லது அதற்கு மேலும் நேரங்களை ஒதுக்கினாள். அவளுடைய ஆடையின் முனையில், சிறு பையன்கள் முழங்காற்படியிட்டு, உலகத்தின் போக்கையே மாற்றியமைத்த ஒரு ஜானும், சார்லஸூம் தோன்றி, அந்நாளில் உலகத்தை இரட்சித்தனர். அவளுக்கு ஒரு சலவை இயந்திரமும், ஒரு உலர்த்தியும், இன்றைக்கு உள்ளது போல, ஒரு பாத்திரம் கழுவும் கருவி, அல்லது ஒரு பணிப்பெண்ணோ இருக்கவில்லை. காரியம் என்னவெனில்…அவள் தானே எல்லாவற்றையும் செய்தாள், ஆனால் அதே சமயத்தில் அவளால் நேரத்தைக் கண்டறிய முடிந்தது ஏனென்றால் அவள் சில பிள்ளைகளுக்குத் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தாள், அது முடிவிலே உலகத்தின் பாதையையே மாற்றினது. அது பண்டைய நாகரீக தாய், பண்டைய நாகரீக இல்லம், அங்கே ஜெபமும், வேதாகமத்தின் புரிந்துகொள்ளுதலும் உள்ளது என்று நான் நினைக்கிறேன்.

29 ஆபிரகாம் லிங்கன் தன்னுடைய குறிப்பிட்ட வயது வரையில் தன்னுடைய வாழ்நாளில் ஒரு புத்தகத்தையும் சொந்தமாக வைத்திருக்கவில்லை என்று நான் நினைக்கிறேன், ஆனால் வேதாகமமும், அது *ஃபாக்ஸ் என்பவரின் இரத்த சாட்சிகளின் புத்தகமாக* இருக்கும் என்று நான் நினைக்கிறேன், நான்…மற்றொரு புத்தகமாயிருக்கலாம், அது *மோட்சப் பயணம்* என்ற புத்தகம் என்று நான் நினைக்கிறேன், அது *மோட்சப் பயணம்,* மற்றும்— மற்றும் வேதாகமமாகும். அது எப்படிப்பட்ட ஒரு குணாதிசயத்தை உருவாக்கியது என்று நீங்கள் பார்த்தீர்களா?

30 நான் உங்களுடைய வீட்டிற்குச் சென்று, உங்களுடைய சுவற்றில் என்னவிதமான புகைப்படங்கள் உள்ளன என்று பார்க்கட்டும். நான் உங்களுடைய வீட்டிற்கு அல்லது உங்களுடைய அலுவலகத்திற்குச் சென்று, என்ன விதமான இசை இசைக்கப்படுகிறது என்பதைப் பார்க்கட்டும். பார்த்தீர்களா? நீங்கள் என்ன வாசிக்கிறீர்கள், நீங்கள் எதை நோக்கிப் பார்க்கிறீர்கள், உங்கள் உட்புறத்தில் என்ன உள்ளது என்பதை என்னால் உங்களுக்கு நன்றாகக் கூற முடியும், பாருங்கள், ஏனென்றால் அது அதையே போஷிக்கிறது. பார்த்தீர்களா? மேலும், ஓ, ஒரு வீட்டிற்கு, நாம் ஒரு வீட்டை மிகவும் அழகானதாக ஆக்கினால், பிள்ளைகள் ஓடிப்போக விரும்பமாட்டார்கள். அவர்களுக்கென அதிகமான காரியங்களைச் செய்யுங்கள், அங்கே அவர்கள் வரவேற்கப்படுவதையும், வீட்டில் அருமையாகவும், வசதியாகவும் உணருகிறார்கள். அங்கே, வீட்டிற்கு, அவர்கள் அங்குச் செல்லும் வரை அவர்களால் காத்திருக்க முடியாது.

அந்தவிதமாகவே வீடும் இருக்க வேண்டும்.

31 அந்த விதமான ஒரு வீட்டில் தான் உசியா வளர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன், தேவபக்தியுள்ள அவனுடைய பெற்றோரின் செல்வாக்கின் நிமித்தமாகவே. அவன் ராஜாவானவுடனே, அவன் எல்லா பிரபலமான கருத்துக்களையும், எல்லா அரசியல் வேறுபாடுகளையும் புறக்கணித்துவிட்டான், மேலும் அவன் ஒரு விஷயத்தில் உறுதியாக இருந்தான்: எப்படியாயினும் அவன் தேவனுக்கு சேவை செய்வான்! நமக்கு இது போன்ற இன்னும் சில அரசியல்வாதிகள் தேவை. அவன்—அவன் தேவனை சேவிக்கப் போகிறான் என்று தீர்மானித்திருந்தான், ஏனென்றால் அந்தவிதமாக அவன் வளர்க்கப்பட்டான், அவனுடைய தகப்பனார் அவனுக்குச் சரியான தாக்கத்தை அளிக்க, அதனால் அவன்—அவன் தேவனை சேவித்து ஜீவிக்க முடிந்தது.

32 சாலமோனின் இராஜ்ஜியத்திற்கு அடுத்தபடியாக, அவனுடைய இராஜ்ஜியம் மிகப் பெரியதாக இருந்தது என்று நான் நம்புகிறேன். சாலமோனின் இராஜ்ஜியத்திற்கு அடுத்தபடியாக அது குறிப்பிடப்பட்டுள்ளது என்று நான் நினைக்கிறேன். தேவன் அவனை எப்படியாய் ஆசீர்வதித்தார்!

33 மேலும், அக்காலத்தில் ஆலயத்திலோ அல்லது அந்த நாட்டிலோ இருந்த இளம் தீர்க்கதரிசியான எசாயாவின் மீது இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவன் எப்படிப் பார்க்கப்பட்டான் என்பதையும், சரியான நிலைப்பாட்டை எடுத்து, சரியானதைச் செய்து, சரியான நோக்கத்தையும் குறிக்கோளையும் கொண்டு, அதைச் சரியாகச் செய்த ஒரு மனிதனை தேவன் எப்படி ஆசீர்வதிப்பார் என்பதையும் அவன் கண்டான்.

34 சில நேரங்களில் அது பலனளிக்கவில்லை என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அது நிச்சயமாகவே பலனளிக்கிறது. அதற்குப் பலன் அளிக்க வேண்டும். நீங்கள் ஒரே நேரத்தில் கிழக்குக்கும் மேற்குக்கும் சென்று கொண்டிருக்க முடியாது. நீங்கள் ஒரே நேரத்தில் வலப்பக்கமும் இடப்புறமும் செல்ல முடியாது. நீங்கள் வேறு வழியில் சென்று கொண்டிருப்பதாக நீங்கள் நினைக்கலாம், ஆனால் நீங்கள் அவ்வாறு செல்லவில்லை. எனவே நீங்கள் உங்களுடைய—உங்களுடைய சிந்தையையும், கண்களையும், நோக்கங்களையும், குறிக்கோள்களையும், ஜீவியத்தில் பொருத்துவீர்களானால், சரியான காரியத்தின் பேரில், நீங்கள் சரியான காரியத்தின் பேரில் வர வேண்டும். நீங்கள் தவறிப்போக முடியாது. பார்த்தீர்களா? அதுதான் ஒரே வழி. நீங்கள் எவ்வளவுதான் மறுபக்கம் செல்லச் சோதிக்கப்பட்டாலும், அதிலிருந்து உங்களுடைய தலையைத் திருப்பி, சரியானதைச் செய்யுங்கள். நீங்கள்—நீங்கள் செய்வது சரிதான் என்று உங்களுக்குத் தெரியும்; நீங்கள் நன்றாக உணருகிறீர்கள், நீங்கள் நன்றாக இருக்கிறீர்கள். அதற்குரியதெல்லாம் அவ்வளவுதான், நீங்கள் பெற்றுக் கொண்டீர்கள்…நீங்கள் சரியாக

வெளியே வரப்போகிறீர்கள். நீங்கள் மேற்கு நோக்கிச் செல்லத் துவங்கினால், நீங்கள்—நீங்கள் வடக்கே செல்லப் போவதில்லை, நீங்கள் போகப் போகிறீர்கள்…நீங்கள் மேற்கு நோக்கிச் செல்லப் போகிறீர்கள். அது சரியானதிலும் தவறானதிலும் அதேவிதமாகவே உள்ளது.

35 ஏசாயா இதைக் கண்டான், தேவன் அவனை ஆசீர்வதித்ததை அவன் கண்டான். எப்படியாய் அவன்…எல்லா தேசங்களிலும் சுற்றிலும், அவனுடைய கீர்த்தி எகிப்திற்குள் சென்றது. எப்படியாய் தேசங்கள் அவனோடு போரிட விரும்பவில்லை, தேவன் அவனோடு இருந்தார் என்பதை அவர்கள்—அவர்கள் கண்டனர். எனவே அவன்…அவர்கள் அவனுக்குச் சமாதான பலிகளையும், ஆட்டு மந்தைகளையும் அனுப்பி, மேலும் காரியங்களையும், சமாதானத்தை உண்டாக்குவதற்காக அதையெல்லாம் அவனிடம் கொடுத்தார்கள். அவன் ஒரு நல்ல மனிதனாக இருந்தான்.

36 ஒரு தேசமோ, அல்லது ஒரு ஜனமோ, அல்லது ஒரு சபையோ, அல்லது ஒரு தனிப்பட்ட நபரோ, குறை கூறுபவர்கள் உங்களை எவ்வளவுதான் குறை கூறினாலும், சரியானதைச் செய்யுங்கள். அவர்கள் தங்களுடைய இருதயத்தில் உங்கள்பேரில் ஒரு மரியாதை வைத்துள்ளனர். அது உண்மையென்று நான் கண்டறிந்தேன். பார்த்தீர்களா? நேர்மையாயும், உத்தமமாயும் இருங்கள். ஜனங்கள் அதை மதிப்பார்கள். அவர்கள் தவறாயிருந்தாலும், அவர்கள் அதை இன்னமும் மதிக்கிறார்கள், நீங்கள் பாருங்கள், ஏனென்றால் அது—அது மானிட வர்க்கம். நாம் யாவரும் மானிடர்களாயிருக்கிறோம், சரி, தவறு என்று ஒன்று உண்டு என்பதை நாம்—நாம் அறிந்திருக்கிறோம், நாம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

37 மேலும்—மேலும் உசியா இந்தத் தரத்தை நிலைநிறுத்தினான். நான் கூறியுள்ளது போல, ஏசாயா தீர்க்கதரிசிக்கு அவன் ஒரு பெரிய தாக்கமாக இருந்தான்.

38 மற்ற அநேக ஜனங்கள் செய்வது போலவே, உசியாவும் அந்த அபாயகரமான தவறை செய்தான். அவன் பாதுகாப்பை உணர்ந்தபோது, அவன் முழு காரியமும் தன்னுடைய கரத்தில் இருப்பதை உணர்ந்தான், அவன் தன்னுடைய ஆவியில் உயர்த்தப்பட்டான். அவன் பெருமைக்குரியவனாக உயர்த்தப்பட்டான். இப்பொழுது நம் எல்லோருக்கும் ஒரு உண்மையான முன்மாதிரி உண்டு.

39 உங்களுக்குத் தெரியும், அதுதான் தொல்லையாக இருந்து வருகிறது. நான்—நான் கிறிஸ்தவர்களிடமும், போதகர்களிடமும் பேசிக்கொண்டிருக்கிறேன், நான்—நான் இந்தக் காரியங்களைக் குறித்து நேர்மையாயிருக்க விரும்புகிறேன். மேலும், அந்த இடத்தில்தான் அநேக ஊழியக்காரர்கள் தவறு

செய்கிறார்கள். ஊழியக்காரர்களைப் பற்றியும், அவர்கள் செய்யும் செயல்களைப் பற்றியும், அவர்களில் சிலர் செய்யக்கூடாத காரியங்களைச் செய்வதைப் பற்றியும் நாம் பலமுறை கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்கள் நல்ல மனிதர்கள் என்றும், கர்த்தரால் உபயோகப்படுத்தப்பட்ட ஒரு அற்புதமான கிறிஸ்தவர்கள் என்றும் நான் சில நேரங்களில் நினைக்கிறேன். அதன்பின்னர் முடிவிலே அவர்கள் தங்களைச் சுற்றி ஒரு சிறு இராஜ்ஜியத்தைக் கட்டியெழுப்புகிறார்கள், அல்லது ஏராளமான செல்வாக்கைப் பெற்று, அநேக ஜனங்கள் தங்களுடைய கூட்டங்களில் கலந்து கொண்டு, அவர்கள் கவனக்குறைவாக ஆகும் வரை, ஒருவிதமாக உயர்த்தப்படுகிறார்கள். ஜனங்கள் அவர்களைக் கைதட்டி எழும்பி நின்று பாராட்டுகிறார்கள், நாம்—நாம் உண்மையாகவே அதைச் செய்யக் கூடாது. நாம், நினைவிருக்கட்டும், நாம் யாவரும்…

40 நமக்கு மத்தியில் பெரிய ஜனங்கள் கிடையாது. நீங்கள் பாருங்கள், தேவன் நம்மில் சிலருக்கு ஒரு காரியத்தையும், சிலருக்கு மற்றொன்றையும் உண்டாக்கினால், நாம்—நாம் எல்லோரும் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். ஏன், அவர் என்னை ஒரு விரல், ஒரு கண், முதலியவற்றால் உண்டாக்கினார். பாருங்கள், நாம் ஒருவரையொருவர் பாராட்ட வேண்டும், அதன்பின்னர் பெரிதாக உணர முயற்சிக்கக் கூடாது. ஏனென்றால் நாம் யாவரும் ஒன்று சேர்ந்து ஒரே தேவனோடு இணைக்கப்பட்டிருக்கிறோம், பாருங்கள், நாம் யாவரும் ஒரே மரத்திலிருந்து வந்தவர்கள். பார்த்தீர்களா?

41 இப்பொழுது அநேக சமயங்களில் போதகர்கள் சற்று பாதுகாப்பாய் உணருகிறார்கள் என்பதையும், அவர்கள் தொடர்ந்து வழிநடத்திச் செல்லும்போது, முதலாவது காரியம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா, அவர்கள் செய்யக்கூடாத காரியங்களை அவர்கள் செய்வார்கள் என்பதையும் நாம் கண்டறிகிறோம். மேலும், பல சமயங்களில், நீதிமான்களும் நல்லவர்களும் அளவுக்கு அதிகமாகச் சமூக நிகழ்வுகளில் ஈடுபடுவார்கள் என்றும், பெரிய விருந்துகளுக்குச் செல்ல விரும்புவார்கள் என்றும், அதன்பிறகு, எப்போதாவது ஒருமுறை சிறிதளவு மது அருந்த அழைப்பார்கள் என்றும், அதன் மூலம் உலகப் பற்றுகளில் சிக்கிக்கொள்வார்கள் என்றும் நாம் அறிவோம். இன்றைக்கு நம்முடைய சபைகளோடுள்ள காரியமும் அதுதான் என்று நான் நினைக்கிறேன். நம்முடைய பெந்தேகோஸ்தே அசைவுடன் உள்ள காரியமும் அதுதான் என்று நான் நினைக்கிறேன்.

42 இப்பொழுது நான் இதை முதலில் தெளிவாகக் கூறட்டும். பார்த்தீர்களா? பெந்தேகோஸ்தே சபையைக் குறித்த காரியங்களை நான் கூறுவதை நீங்கள் கேட்கிறீர்கள். நான் பெந்தேகோஸ்தேகாரன். பார்த்தீர்களா? ஆனால், இங்கே, இன்றிரவு, நியூயார்க்கில் பெந்தேகோஸ்தே ஜனங்களே இல்லாமற்போனால், நான் இந்தச் செய்தியைப் பிரசங்கிக்க எங்கே போவேன்? பார்த்தீர்களா?

பெந்தேகோஸ்தே ஜனங்களை நான் பாராட்டுகிறேன். அவர்கள் என்னுடைய சகோதர சகோதரிகள்.

43 ஆனால் அதே சமயத்தில் என் சகோதரனுக்கும், என்னுடைய பிள்ளைக்கும், அல்லது என்னுடைய மனைவிக்கும், அல்லது அது என்னவாயிருந்தாலும், நான் ஏதோ ஒரு காரியத்தைத் தவறாய் காணும்போது, அது சரியே. ஒரு சரியான பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளைத் திருத்துவார்.

44 நம்முடைய சபையோடுள்ள பிரச்சனை என்னவென்றால், நாம் மற்றவர்களைப் போலவே ஆக அதிகமாக முயற்சிப்பதாக நான் நினைக்கிறேன். புரிகிறதா? நாம் மற்றவர்களைப் போல் நடந்து கொள்ள முயற்சிக்கிறோம், நீங்கள் பாருங்கள், மேலும்—மேலும் நாம் அவர்களுடைய பழக்க வழக்கங்களை எடுத்துக் கொள்ளத் துவங்குகிறோம். முதல் காரியம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா, அது வழக்கமாக...

45 அவர்களுடைய துவக்கத்தில் இருந்த பெந்தேகோஸ்தே ஜனங்கள் எனக்கு ஞாபகமில்லை, உண்மையாகவே, அவர்கள் அநேக ஆண்டுகளுக்கு முன்பு, அஸூசா தெருவிலிருந்து இந்தக் கடைசி அசைவில், ஆனால் நான் அதைக் குறித்த வரலாற்றை எடுத்துக் கொண்டேன். நான்—நான் அநேக புத்தகங்களைப் படித்திருக்கிறேன், சில வயோதிகர்களிடம் பேசியிருக்கிறேன். லூசியானாவில் உள்ள ஷ்ரீவ்போர்ட்டில் உள்ள ஒருவரோடு இப்பொழுது ஒரு கூட்டம் நடத்த ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம், அவர் அங்கே இருப்பார், அசூசா தெருவில் இருந்த முதல் மனிதர்களில் ஒருவராக இருந்தார். அதன்பின்னர் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்தத் தேசத்தில் பெந்தெகொஸ்தேயின் துவக்கமாக இருந்தது என்று நான் நினைக்கிறேன். நான் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள மக்பெர்ஸன் ஆலயத்தில், ஏஞ்சலஸ் ஆலயத்தில் பொன்விழா, இப்பொழுது, நீங்கள் பாருங்கள், ஐம்பதாம் பெந்தெகொஸ்தே வருடத்தின் பொன்விழாவைக் குறித்துப் பிரசங்கித்தேன்.

46 ஆனால் அது முதற்கொண்டு, அநேக சிறு காரியங்கள் சபைக்குள் ஊடுருவிவிட்டன, ஏனென்றால் சபையானது ஒவ்வொரு நாளும் உலகத்தோடு நெருங்கிப் பழக வேண்டியிருக்கிறது. இப்பொழுது, நம்முடைய சகோதரிகளிடத்திற்கு, பாருங்கள், நம்முடைய சகோதரர்களிடத்திற்கு, இதற்கு மீண்டும் வரவேண்டுமென்று நான் பொருட்படுத்திக் கூறவில்லை. அநேக சமயங்களில், அது அநேக ஆண்டுகளுக்கு முன்பு, அது வழக்கமாகத் தவறாயிருந்தது (நான் அன்றிரவு கூறினது போல) நம்முடைய சகோதரிகள் தங்களுடைய தலைமுடியை கத்தரித்துக் கொள்வதற்கு. அவர்கள் அதையும் மற்ற காரியங்களையும் செய்யக் கூடாது என்பது வழக்கமாக ஒரு—ஒரு பெந்தேகோஸ்தே விவகாரமாயிருந்தது. ஆனால் அது

என்ன? இப்பொழுது நாம் நாட்டின் பல்வேறு பாகங்களுக்குச் சென்று, நம்முடைய பெந்தேகோஸ்தே சகோதரிகள் வட்ட வடிவ சிகை அலங்காரமாகக் கத்தரித்துக்கொண்டிருப்பதை நாம் கண்டறிகிறோம், உங்களுக்குத் தெரியும், அவர்களுக்கு அது போன்ற பெரிய சிகை அலங்காரங்கள். நீங்கள் அதைக் குறித்து அவர்களிடம் கூறலாம். அவர்கள் ஒப்பனைப் பொருட்களைப் உபயோகிக்கிறார்கள். அவர்கள்—அவர்கள் ஆண்களைப் போன்ற ஆடைகளை அணிகின்றனர்.

47 நீங்களோ, “இப்பொழுது, சகோதரன் பிரான்ஹாம், நீர் ஸ்திரீகளை குறை கூறிக் கொண்டிருக்கிறீர்” என்று கூறுகிறீர்கள்.

48 இப்போது ஒரு நிமிடம் பொறுங்கள், நான் ஆண்களைப் பற்றிப் பேசுகிறேன். தன்னுடைய மனைவி அதைச் செய்ய அனுமதிக்கும் சகோதரன், அவன் தன்னுடைய வீட்டின் மேல் அதிக ஆளுகை செய்பவன் அல்ல. புரிகிறதா? பார்த்தீர்களா? புரிகிறதா?

49 நீங்கள் அதைச் செய்யக் கூடாது. ஆனால் அது என்ன? நாம் மற்றவர்களோடு நெருங்கிப் பழகியிருக்கிறோம், ஏதோ ஒரு சிறு பலவீனமானவர் ஏதோ ஒரு வேதபாட கருத்தரங்கு அல்லது பள்ளியிலிருந்து வந்து, அதைக் குறித்து ஒரு வித்தியாசமான கருத்தை உடையவர்களாயிருக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு பரிபூரண உதாரணம் மாத்திரமே உண்டு, அது வேதாகமத்திற்கு திரும்பிச் செல்லுதலாய் உள்ளது. வேதம் அதைக் கண்டிக்கிறது, பாருங்கள். அது சரியல்ல.

50 அதன்பின்னர் நாம் மற்ற காரியங்களைக் கண்டறிகிறோம். முன்பெல்லாம் பரிசுத்த ஜனங்கள் படக்காட்சி மூலமோ அல்லது திரைப்படங்களையோ பார்ப்பது தவறு என்று சொல்வார்கள், உங்களுக்குத் தெரியுமா. இப்பொழுது அவர்கள் எல்லா நேரத்திலும் செல்கின்றனர். பார்த்தீர்களா? அதன்பின்னர் சாத்தான் உங்களுக்கு ஒரு ஏமாற்று வேலையைச் செய்தான், தொலைக்காட்சியை உங்கள் வீட்டிற்குள்ளேயே கொண்டு வந்து, பாருங்கள், அதை அங்கே பொருத்திவிட்டான். ஆனால் இந்தக் காரியங்கள் யாவும், அது வழக்கமாகத் தவறாக இருந்து வந்தது.

51 சரி, அது என்ன? பாருங்கள், அது மெல்ல மெல்ல உள்ளே வருகிறது, முதல் காரியம் உங்களுக்குத் தெரியுமா, அது அப்படியே உங்களைக் கவர்ந்திழுக்கிறது. அது உங்களைச் சுற்றி வளரும் ஒரு திராட்சைச் செடியைப் போன்றது. இப்பொழுது, நீங்கள் அந்தத் திராட்சைச் செடியை உங்களிடத்திலிருந்து விலக்கி வைப்பீர்களானால், பாருங்கள், இயேசுவைச் சுற்றி சுற்றிக் கொண்டே, வார்த்தையைச் சுற்றி, அதனோடு தரித்திருந்தால், பாருங்கள், நீங்கள் சரியாக வளருவீர்கள். அது கோணலானதாய், அது உங்களைச் சாலையிலிருந்து விலக்கி இழுக்கிறது. கிறிஸ்து உங்களை மேலே இழுக்கிறார். அது உங்களைப் பக்கவாட்டிற்கு இழுக்கிறது.

52 அதன்பின்னர் நீங்கள் ஒரு ஊழியக்காரனுடைய மனைவியைப் போன்ற ஒரு ஸ்திரீயை, அல்லது ஒரு ஊழியக்காரனைப் போன்ற ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்யத் துவங்குவதை நீங்கள் காண்கிறீர்கள், அவருடைய முழு சபையும், “பாருங்கள், நம்முடைய போதகர் அதைச் செய்கிறார். போதகரின் மனைவி அதைச் செய்கிறாள். நாம் ஏன் இதைச் செய்யக் கூடாது?” என்கின்றனர். பாருங்கள், நீங்கள் யாரோ ஒருவருக்கு தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள், நீங்கள் அவர்களுக்குச் சரியான பாதையை நோக்கியும், சரியானதைச் செய்ய வேண்டிய காரியங்களை நோக்கியவாறு சரியாகத் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்களா என்ற நிச்சயமுடையவர்களாயிருங்கள்.

53 இப்பொழுது நாம் கண்டறிகிறோம், நீங்கள் உயர்த்தப்படும்போது, நீங்கள் உங்களை உயர்த்தும்போது, அப்பொழுது நீங்கள் உங்களுடைய பாதையில் வீழ்ச்சியடைகிறீர்கள், பாருங்கள்.

54 இப்பொழுது இந்த உசியா, அவன் மேலே உயர்த்தப்பட்டான், ஏனென்றால் அவன் பாதுகாப்பாய் உணர்ந்தான், அவனைச் சுற்றியிருந்த யாவரும், அவன்—அவன் தன்னுடைய தேசத்தை உடையவனாயிருந்தான், அது நன்கு பராமரிக்கப்பட்டு, தேவன் அவனை ஆசீர்வதித்திருந்தார். அவன் பெரிய திராட்சைத் தோட்டங்களையும், ஆடு மாடுகளையும், மேலும்—மேலும் சுரங்கங்களையும், ஐசுவரியமுள்ள எல்லாவற்றையும் உடையவனாயிருந்தான். எல்லா தேசங்களும் அவனோடு சமாதானமாயிருந்தன. எனவே அவன்—அவன் தனக்கு விருப்பமான எந்தக் காரியத்தையும் தன்னால் செய்ய முடியும் என்று எண்ணி பெருமைப்பட்டுக் கொள்ளுமளவிற்கு அவன்—அவன் உயர்த்தப்பட்டான்.

55 அவன் ஒரு ஊழியக்காரரின் ஸ்தானத்தை எடுத்துக்கொள்ள முயற்சிக்கும் அளவிற்கு அவன் மிகவும் உயர்த்தப்பட்டான். அவன் தேவாலயத்துக்குள் சென்று, தூபகலசத்தை எடுத்துக்கொண்டு, பீடத்தண்டைக்குச் சென்றான். அவன் அதைச் செய்தபோது, ஆசாரியன் அவனைப் பின்தொடர்ந்து ஓடி, அவன் அதைச் செய்யக் கூடாது என்று அவனிடத்தில் கூறினான். அவன் திருத்தப்பட்டபோது, அவன் தாழ்மையாய் இருந்திருக்க வேண்டியதற்குப் பதிலாக… அவன் உயர்த்தப்படுவதற்கு முன்பு, அவன், “அது உண்மை, இதைச் செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை—இல்லை” என்று கூறியிருப்பான், மேலும், தூபக்கலசத்தைக் கீழே இறக்கி வைத்திருப்பான் அல்லது அந்த ஊழியத்திற்காக மட்டுமே பிரதிஷ்டை செய்யப்பட்டவனுமாகிய ஆசாரியனாகிய ஆரோனிடம் கொடுத்திருப்பான்.

56 நான் இங்குள்ள இந்த முழு சுவிசேஷ வர்த்தக புருஷர்களோடு நிறைய பிரயாணம் செய்கிறேன். அவர்களில் அநேகர் இப்பொழுது

இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுடைய காலைச் சிற்றுண்டி நேரத்தில் சனி, சனிக்கிழமை காலை ஏதோ ஒரு இடத்தில் பேச வேண்டும்...என்ன? ஸ்டேட்லர் ஹோட்டல் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் ஏற்கனவே காலை உணவுக்காக ஆயிரத்து எழுநூறு பயணச் சீட்டுகள் விற்றுவிட்டதாகக் கூறினர்.

57 ஆகையால், அண்மையில், நான் அவர்களோடு பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் வர்த்தக புருஷர்களை மேடையின் மேல் அழைத்து, அவர்களுடைய உரையை எடுத்துக்கொண்டு, சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தனர். அதற்கு நான், “அது தவறு” என்றேன். அது நிச்சயமாகத் தவறானதாகும். பிரசங்கிகளாகிய நமக்கு அதை நேராகக் கடைப்பிடிப்பது போதிய கடினமாயுள்ளது; அப்படிப்பட்ட ஒரு காரியத்திற்கு நியமிக்கப்படாத ஒரு தொழிலதிபரை எடுத்துக்கொள்வது எப்படி முடியும், நீங்கள் சிறு கருத்துக்கள் போன்றவற்றை கொண்டு வருகிறீர்கள். நான், “நீங்கள் அதைச் செய்யக் கூடாது” என்றேன்.

58 மற்ற நபரின் ஸ்தானத்தை ஒருபோதும் எடுத்துக்கொள்ள முயற்சிக்காதீர்கள். தேவன் உங்களை ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக உண்டுபண்ணினார், நீங்கள் அதில் நிலைத்திருங்கள். நிச்சயமாக. நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ, அப்படியே நிலைத்திருங்கள். மற்றவர்களைப் போலப் பாவனை செய்ய முயற்சிக்காதீர்கள். அதுதான் தேவன் உலகத்திற்கு அனுப்பும் வரங்களை எப்பொழுதும் பாழாக்குகிறது. நாம் அநேக மாம்சபிரகாரமான ஆள்மாறாட்டங்களைக் கண்டறிகிறோம், மற்ற ஒன்றைப் பின்பற்ற முயற்சிக்கிற ஒருவரை நாம் காண்கிறோம்.

59 அவர்கள் பெண் ஊழியக்காரர்களிடத்தில் கூறினது போல, திருமதி மக்பெர்ஸன் வாழ்ந்து கொண்டிருந்தபோது, ஒவ்வொரு ஊழியக்கார ஸ்திரீயும் அவள் அணிந்திருந்தது போன்றே அந்தச் சிறகுகளை அணிந்திருந்தனர், அல்லது அது என்னவாயிருந்ததோ, அதேவிதமாகவே தங்களுடைய வேதாகமத்தையும் வைத்திருந்தனர். அவள் செய்த ஒவ்வொரு காரியத்தையும், அவர்கள் செய்தனர்.

60 நாம் இன்றைக்கு அநேக பில்லி கிரஹாம்களை உடையவர்களாயிருக்கிறோம் என்பதை நாம் கவனிக்கிறோம்! ஆனால் நீங்கள் பாருங்கள், தேவன் ஒரே ஒரு பில்லி கிரஹாமைத் தவிர வேறு யாரையும் ஒருபோதும் உண்டாக்கவில்லை. அவ்வளவுதான். அவர்...

61 பில்லி கிரஹாம், ஓரல் ராபர்ட்ஸ், அல்லது அந்தப் பிரபலமான மனிதர்களைப் போன்றே நீங்கள் முக்கியமானவர்கள். நீங்கள் உங்களுடைய ஸ்தானத்தை விட்டு வெளியேறும் வரையில் நீங்கள் அவ்வளவு முக்கியமானவர்களாயிருக்கிறீர்கள், அதன்பின்னர் நீங்கள் ஒன்றுக்குமே பிரயோஜனமற்றவர். நீங்கள்—நீங்கள்—

நீங்கள் இந்த மனிதர்களுக்கு ஒரு தடையாயிருக்கிறீர்கள், நீங்கள் உங்களுக்கும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும் ஒரு தடையாயிருக்கிறீர்கள். உங்களுடைய நிலையில் தரித்திருங்கள். பார்த்தீர்களா? பாருங்கள், தேவன் உங்களைச் சிருஷ்டித்தது போலவே நிலைத்திருங்கள், அப்பொழுது நீங்கள் சரியாகச் செயல்படுவீர்கள்.

62 பவுல், அது ஒன்றும் புதிதல்ல, பவுலும் அதேக் காரியத்தையே போதித்து, "'நான் கண்ணினால் உண்டானவன் அல்ல' என்று கை கண்ணை நோக்கிச் சொன்னால், அல்லது காது மூக்கைப் பார்த்து, 'நான்—நான் இனிமேல் ஒரு காது அல்ல, ஏனென்றால் எனக்கு மூக்கு இல்லை,'" என்று கூறினால் என்றான், அல்லது ஏதோ ஒன்று. உங்களால்—உங்களால் அதைச் செய்ய முடியாது. பாருங்கள், அவை யாவும் பொருத்தமாக ஒன்று சேர்ந்து ஒரு பெரிய குழுவாக அசைகின்றன.

63 நாம் யாரையும் பாவனை செய்ய முயற்சிக்கக் கூடாது. நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ, அப்படியே இருங்கள், பாருங்கள், அந்தவிதமாகத்தான் தேவன் உங்களை உண்டாக்கினார். நீங்கள் உங்களை ஒருபோதும் உருவாக்கிக் கொள்ளவில்லை. நினைவிருக்கட்டும், போதகர்களாகிய நாம் பில்லி கிரஹாமின் இடத்தை எடுத்துக் கொள்ள விரும்பினாலும், நம்மால் அதைச் செய்ய முடியாது, பில்லி கிரஹாமாலும் கூட நம்முடைய ஸ்தானத்தை எடுக்க முடியாது. பாருங்கள், நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய ஏதோ ஒரு காரியம் உண்டு. இங்கே ஒரு வாயிற்காப்போனாக இருக்கக்கூடிய சாதாரண சிறு நபர், ஒரு இல்லத்தரசியாக இருக்கக்கூடிய சிறிய பெண், இன்றைக்கு பூமியில் உள்ள மகத்தான ஊழியக்காரரால் உங்களுடைய ஸ்தானத்தை எடுக்க முடியாது. நீங்கள், நீங்கள் என்னவாயிருக்கிறீர்களோ, அந்தவிதமாக உங்களை உருவாக்குவதில் தேவன் ஒரு நோக்கத்தை உடையவராயிருந்தார், அவர் உங்களை உண்டாக்கின அந்த வழியில் நீங்கள் தேவனுக்கு சேவை செய்யுங்கள். பார்த்தீர்களா? நாம் அதைச் செய்தால், சக்கரங்கள் எளிதாகச் சுழலக்கூடும் என்று நான் நினைக்கிறேன். ஆம், நாம் அதைச் செய்வோமானால், அவ்வாறே இருந்து, உயர்த்தப்படாமல் இருப்போமானால். நாம் காண்கிறோம், அதற்குப் பதிலாக…

64 வேதப்பிரகாரமாக யாரோ ஒருவரிடம் ஒரு காரியத்தைக் கூறும்போது, அது சரியென்று நாம் காணும்போது, நம்மையே தாழ்த்திக் கொள்ள முயற்சிப்பதற்கு பதிலாக, "பாருங்கள், இப்பொழுது, நான்—நான் தவறாயிருக்கிறேன். நீர் என்னை மன்னியும். நான்—நான் பொருட்படுத்திக் கூறவில்லை… எனக்குத்—எனக்குத் தெரியாது, எனவே நான் அதைச் செய்வதை விட்டுவிடுகிறேன்" என்று கூறுங்கள். பாருங்கள், அப்படியானால், அதைச் செய்வதற்குப் பதிலாக, உசியா செய்தது போன்று நாம்

அநேக சமயங்களில் செய்கிறோம்; தான் கீழே அழைக்கப்பட முடியாத அளவுக்குப் பெரியவன் என்று அவன் உணர்ந்தான், பாருங்கள். நான் அநேக முறை ஊழியக்காரர்களை அந்தவிதமாகக் கண்டிருக்கிறேன், வார்த்தை, சத்தியம் என்ன என்பதைத் தங்களுக்குக் கூற முடியாத அளவுக்கு அவர்கள் தங்களை மிகவும் முக்கியமானவர்களாக உணர்ந்தனர்.

“பாருங்கள், அற்புதங்களின் நாட்கள் கடந்துவிட்டன!”

65 தேவன் எங்கே அற்புதங்களை நியமித்தார் என்பதை என்னால் உங்களுக்குக் காண்பிக்க முடியும்; இப்பொழுது அவர் அதை எங்கிருந்து எடுத்துச் சென்றார் என்று உங்களால் என்னிடம் கூற முடியாது. பார்த்தீர்களா? அவர் வரங்களை நியமித்தார்; அவர் அதை எங்கிருந்து எடுத்துச் சென்றார் என்பதை நீங்கள் ஒருபோதும் காணவில்லை. பாருங்கள், அது வேதத்தில் உள்ளது. “நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.” எவ்வளவு காலம்? “சர்வ சிருஷ்டிக்கும், அதைக் கேட்கிற யாவரும் அதைக் கேட்குமட்டும், உலகமெங்கும். விசுவாசிக்கிறவர்களை இந்த அடையாளங்கள்பின் தொடரும்.” பாருங்கள், நாம் வேறொன்றையும் பதிலியாக வைக்க முடியாது. அவர் கூறினதை அப்படியே எடுத்துக் கொள்ளுங்கள், அது சரியாகிவிடும், அது நன்றாகக் கிரியை செய்யும். ஆனால் நாம் நம்முடைய சொந்த வழிகளைப் பின்பற்ற முயற்சிக்கும் வரை…

66 அங்குதான் இஸ்ரவேல் ஜனங்கள் மிக மோசமான தவறை செய்தனர். கிருபை அவர்களுக்கு ஒரு அக்கினி ஸ்தம்பத்தை, தூதனை, ஒரு பலியை அளித்து, அவர்களை விடுவித்து, அவர்களுக்கு ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி, அந்தத் தீர்க்கதரிசியை வழி நடத்த அவர்களைப் பின்தொடர அவர்களுக்கு ஒரு அக்கினி ஸ்தம்பத்தை அனுப்பினார். அவர்கள் யாத்திராகமம் 19-ம் அதிகாரத்திற்கு வந்தபோது, அவர்கள் கிருபைக்காகப் பரிமாறிக்கொண்டபோது, அவர்கள் எப்போதும் செய்ததிலேயே மிகவும் மோசமான காரியத்தையே செய்தனர். பார்த்தீர்களா? ஆனால் அவர்கள் தாங்களாகவே ஏதோ ஒரு காரியத்தைச் செய்ய விரும்பினர்.

67 அந்தவிதமாகத்தான் நாம் இருக்கிறோம். நாம் நம்முடைய வேத பாண்டித்துவ பட்டம் பெற்றிருக்க வேண்டும். நீங்கள் அதைப் பெற்றிருக்காவிட்டால், நீங்கள் சபைக்குள் பிரவேசிக்க முடியாது. அவ்வளவுதான். எனவே, நாம் அந்தக் காரியத்தை ஆராய்ந்து, அது தேவனால் உண்டானதா என்பதைக் கண்டறிய வேண்டும்.

68 இப்பொழுது, உசியா உயர்த்தப்பட்டான் என்றும், அவன் அதை எப்படியும் செய்யப் போகிறான் என்றும் நாம் கண்டறிகிறோம். அவன் தூபகலசத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். ஆசாரியர்கள் கூறினது எந்த வித்தியாசத்தையும்

உண்டுபண்ணவில்லை, அவன் எப்படியும் உள்ளே சென்றுவிட்டான்! அது வேதத்திற்கு விரோதமாயிருந்தது. அவன் அதைச் செய்வது வேதப்பூர்வமானதல்ல.

69 நீங்களோ அல்லது நானோ வேறு யாராகிலும் பாவனை செய்வது வேதப்பூர்வமானது அல்ல. சரி. எனவே நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ, அது போன்று ஒரு நல்லவராக இருங்கள், மற்றவர்கள் உங்களைக் காணும்படியாக உங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றுங்கள். நீங்கள் ஒரு இல்லத்தரசியாக இருந்தால், ஒரு உண்மையான ஒருவராக இருங்கள், பாருங்கள். நீங்கள் ஒரு—ஒரு கணவனாக இருந்தால், ஒரு அசலானவராக இருங்கள், பாருங்கள். நீங்கள் ஒரு உதவிக்காரராக இருந்தால், ஒரு உத்தமமானவராக இருங்கள்; அல்லது ஒரு பிரசங்கியாராக, நீங்கள் யாராயிருந்தாலும் சரி. ஆனால் வேறொருவருடைய ஸ்தானத்தை எடுத்துக்கொள்ள முயற்சிக்காதீர்கள்.

70 அதன்பின்னர் வார்த்தை இதைக் குறித்து உங்களைக் கண்டிக்கும்போது, செய்யாதீர்கள்…நீங்கள் கடிந்து கொள்ளப்படுவதை உணர்ந்தால், மனந்திரும்புங்கள். சரிப்படுத்துதல், அவ்வளவுதான். செய்ய வேண்டிய ஒரே காரியம் அதுதான்.

71 ஆனால் உசியா அதைச் செய்ய விரும்பவில்லை. தேவன் அவனுக்கு இருந்தவிதமாகவே அவனை ஆசீர்வதித்தபிறகும், அதே சமயத்தில் அவன் அதைச் செய்வான் என்று அவன் உணரவில்லை. அவன் எப்படியும் அதைச் செய்யப் போகிறான் என்று அவன் எண்ணினான், ஏனென்றால் அவன் பாதுகாப்பாக இருப்பதாக உணர்ந்தான். ஆனால் அவன் அங்கே இருந்தபோது…அது அவனுக்குக் கர்த்தருடைய வார்த்தையைக் கூறிக்கொண்டிருந்த அந்த மனிதர்கள் மேலும் ஒருவிதமான கோபத்தை உண்டாக்கியது.

72 அவன் அதைச் செய்தபோது, அவன் எப்படியோ விரைந்தான், அவனுடைய முகத்தில் குஷ்டரோகம் வந்ததை நாம் கண்டோம். அவன் மரிக்கும் வரைக்கும் ஒரு குஷ்டரோகியாகவே இருந்தான். அவன் ஒருபோதும் கர்த்தருடைய வீட்டிற்குச் செல்லவே முடியவில்லை. அவன் ஒரு குஷ்டரோகியாக மரித்தான். அவன் தேவனுடைய கரத்தைக் கண்ட பிறகு, எப்படியாய் தேவன் அவனுக்கு மிகவும் நல்லவராக இருந்தார் அவர் கொண்டிருந்த காரியங்களைச் செய்தார்; அதே சமயத்தில் அந்த மனிதன் தனிமைப்படுத்தப்பட்டு, குஷ்டரோகியாக மரித்தான்.

73 இப்பொழுது நம்மால் அதைச் செய்ய முடியும். நாம் அநேக காரியங்களைக் கண்டிருக்கிறோம், ஆனால் தேவன் நம்மேல் நியாயத்தீர்ப்பைக் கொடுக்க முடியாதபடிக்கு நாம் மிகவும் பத்திரமாய் இருக்கிறோம் என்று நீங்கள் ஒருபோதும் நினைக்க வேண்டாம், பாருங்கள். புரிகிறதா?

74 நினைவிருக்கட்டும், யாரையும் போலியாகப் பாவனை செய்ய முயற்சிக்காதீர்கள். நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ அப்படியே இருங்கள். நீங்கள் பாருங்கள், தேவன் உங்களை ஒரு பெந்தேகோஸ்தேவாக உண்டாக்கினால், நீங்கள் ஒரு உண்மையான ஒன்றாயிருங்கள். தேவன்…அதைக் குறித்து வெட்கப்பட வேண்டாம். நான் ஒரு மனிதனாயிருக்க வெட்கப்படவில்லை. நான் ஒரு அமெரிக்கனாயிருக்க வெட்கப்படவில்லை. நான்—நான் ஒரு ஊழியக்காரனாயிருக்க வெட்கப்படவில்லை. நான் பிரசங்கிக்கும் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படவில்லை. ஏனெனில்…

75 நான் என்னுடைய சிந்தையை இழந்துவிட்டதாக அவர்களில் அநேகர் நினைக்கிறார்கள் என்பதை நான் அறிவேன், என்னுடைய நல்ல வயதான நீதியுள்ள தாயும் கூட, ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு மரித்துப் போனாள். நான் முதலில் பரிசுத்த ஆவியைப் பெற்றபோது, எங்கள் ஊரில் அதைக் குறித்து ஒன்றுமே அறிந்திருக்கவில்லை, நான் அப்போது சுமார் இருபது வயதான, ஒரு உள்ளூர், சிறு, வாலிப பாப்டிஸ்டு பிரசங்கியாக இருந்தேன், ஆனால் நான் பரிசுத்த ஆவியைப் பெற்றபோது, என் தாயார், “அந்தப் பையன் தன்னுடைய சிந்தையை இழந்துவிட்டான்” என்றாள். பார்த்தீர்களா? ஆனால் தாய் என்ன நினைத்தாலும் அது ஒரு பொருட்டல்ல, நான் அந்த மகத்தான விலையுயர்ந்த முத்துவைக் கண்டெடுத்திருந்தேன். அது அவளுக்கு அவ்விதமாகத் தோன்றியிருக்கலாம், ஆனால் எனக்கோ அது உண்மையாயிருந்தது. பாருங்கள், அது இருந்தது. அது நான் தேவனிடத்தில் கண்டிருந்த அசலான ஏதோ ஒன்றாய் இருந்தது.

76 ஏனென்றால், *இது* தேவனுடைய வார்த்தை என்றும், அது ஒருபோதும் மாறவே முடியாது என்றும், நான் ஒரு பையனாக இருந்தபோது, எப்பொழுதுமே விசுவாசித்தேன். இயேசு கூறினார், “வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒருபோதும் மாறுவதில்லை. அது ஒருபோதும் ஒழிந்து போகாது.” அதற்கு நீங்கள் எந்தக் காரியத்தையும் ஈடாகக் கொடுக்க முடியாது. அது அப்படியே அது எழுதப்பட்ட விதமாய் உள்ளது, அந்தவிதமாகவே நாம் அதை விசுவாசிக்கிறோம். அதிலிருந்து எதையுமே கூட்டவோ அல்லது எதையும் எடுக்கவோ வேண்டாம். உங்களுக்குத் தெரியும், வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தில், “எவனாகிலும் ஒரு வார்த்தையைக் கூட்டினால் அல்லது எதையாகிலும் எடுத்துப் போட்டால், (என்ன?) சாபம் அவன்மேல் இருக்கும்” என்று அது கூறியுள்ளது. எனவே அது இருக்கிற விதமாகவே அதை அப்படியே தரித்திருந்து, அந்த விதமாக அதை விசுவாசியுங்கள், அப்பொழுது தேவன் அதைக் கனப்படுத்துவார்.

77 இப்பொழுது அவன் உயர்த்தப்பட்ட பெருமையின் நிமித்தமாக அவன் அடிக்கப்பட்டான். அங்கே அவன் ஒருவன்தான் என்ற உணர்வு ஏற்பட்டது…அங்கு இருந்த ஒரே ஒருவன் அவன்தான், அவன் தான் விரும்பியதைச் செய்வான், அவனை வேறு யாராலும்

தடுக்க முடியாது.

78 அண்மையில், எங்களிடத்தில் ஒரு சகோதரன் இருந்தார், நான் அவருக்காக மிகவும் வருத்தப்பட்டேன். எல்லோருமே அவரை இழிவுபடுத்துவது போன்று காணப்பட்டது. அந்தச் சகோதரன் ஏதோ தவறு செய்ததாக அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள், அதைச் செய்தித்தாள் குற்றம் சாட்டியது. ஆனால் நான்—நான் அதைக் குறித்து சிந்தித்துப் பார்க்கையில், அந்த மனிதனைக் *குற்றப்படுத்த* வேண்டுமா? நான் உண்மையாகவே அவருக்கு ஆதரவாகப் பேசினேன், ஏனெனில்...நான்—நான் நிச்சயமாக அவருடன் இணங்கவில்லை. ஆனால் அந்த மனிதன் ஒரு கட்டுரையை எழுதி அதை ஒரு பத்திரிக்கையில் வெளியிட்டார். இந்த வித்தியாசமான காரியங்களையெல்லாம் இந்த மனிதன் கூறியிருந்ததாகவும், இந்தக் காரியங்களைச் செய்திருந்ததாகவும்.

79 ஒரு இரவு மினியாபோலிஸில் நடந்த ஒரு கூட்டத்தில், இந்தப் பத்திரிக்கையின் எழுத்தாளர் அங்கிருந்தார் என்று அவர்கள் என்னிடம் கூறினார்கள். அந்தக் கட்டுரை சற்று முன்னர் கிறிஸ்டியன் பத்திரிக்கையில் வந்திருந்தது, எனவே நான்...அது *கிறிஸ்டியன் டைஜஸ்ட்,* எனவே நான்...அவர்கள்—அவர்கள் அந்த மனிதனை என்னிடம் சுட்டிக் காட்டி, "அதோ அவர்தான் *அங்கே* அமர்ந்திருக்கிறார்" என்றார். அவர் இந்தக் கட்டுரையில், அந்த மனிதன் எழுதாத ஒரு புத்தகத்தை, இந்த ஊழியக்காரன் ஏதோ ஒன்றை எழுதியிருக்கிறான் என்று கூறியிருந்தார். நான் அதை அறிவேன். ஒரு பெண்மணி அந்தப் புத்தகத்தை எழுதினாள், அந்தப் பெண்மணியை நான் அறிவேன். *பிசாசுகளின் கடி.*

80 எனவே நான்—நான், "பாருங்கள், இப்பொழுது, நான் ஒரு காரியத்தைக் கூற விரும்புகிறேன். இப்பொழுது, நான் ஊழியக்காரனுடன் இணங்காமல் இருக்கலாம், ஆனால் நான் நினைக்கிறேன், இந்தப் பத்தியின் ஆசிரியர் இந்த மனிதன் இக்கட்டுரையை எழுதினார் என்று கூறுவதைக் காட்டிலும் மேலானதாக அவன் தன்னுடைய எழுத்தை ஒருபோதும் சரிபார்த்துக் கொள்ளவில்லையென்றால், அவன் அதைச் செய்யவில்லை என்பதை நான் அறிவேன், பாருங்கள், இந்த ஊழியக்காரரைக் குறித்து அவர் கூறின இன்னும் அநேகக் காரியங்கள் தவறாக இருக்குமோ என்று நான் அஞ்சுகிறேன்" என்றேன். அதன்பின்னர் நான் இதைக் கூறினேன், "ஒருவரைக் இரட்சிக்க முயற்சிப்பவருக்கு, நான் தவறு செய்தவன் என்று கண்டறிவதைக் காட்டிலும், ஒருவரைக் இரட்சிக்க முயற்சிப்பவருக்கு நான் தடையாயிருக்க விரும்பவில்லை என்பதையே விரும்புகிறேன்." ஆம்.

81 யாரோ ஒருவர் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிற காரியங்களைக் குறைகூற அல்லது இடித்துரைக்க முயற்சிப்பதைக் காட்டிலும், அவர்கள்—அவர்கள் ஒரு தவறு செய்திருந்தாலும் அல்லது ஏதோ ஒரு தவறு செய்திருந்தாலும் கூட நான் அந்த மனிதனுடைய

ஸ்தானத்தை எந்த நேரத்திலும் எடுத்துக் கொள்ளவே விரும்புவேன். எனவே நாம் கவனிக்க வேண்டும், நாம் என்ன செய்கிறோம் என்பதன் பேரில் நாம் மற்றவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்துகிறோம்.

82 அப்பொழுது இந்தக் மனிதன் இந்தக் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டபோது, அவன் பெருமையில் உயர்த்தப்பட்டபோது, அது அந்த வாலிப தீர்க்கதரிசிக்கு ஒரு பெரிய பாடமாயிருந்தது. தேவன் தம்முடைய மனிதனுக்கு அந்த இடத்திற்கே கட்டளையிடுகிறார் என்ற இது அவனுக்கு ஒரு பெரிய பாடமாயிருப்பதன் மூலம் அவன் கண்டறிந்தான். பார்த்தீர்களா? மனிதன் தனக்குத்தானே கட்டளையிட முடியாது. தேவன் தம்முடைய மனிதனுக்கு கட்டளையிடுகிறார். நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ, அப்படித்தான் தேவன் உங்களை உருவாக்குகிறார். பார்த்தீர்களா? தேவன் தம்முடைய மனிதனுக்கு கட்டளையிடுகிறார், அவன் மற்றவருடைய ஸ்தானத்தை எடுத்துக்கொள்ள முயற்சிக்கக் கூடாது. அது ஏசாயாவுக்கு ஒரு பாடமாயிருந்தது, அதாவது அவன் தன்னுடைய கண்களை மானிட வர்க்கத்தின் மேல் உதாரணமாக வைக்கக் கூடாது. அவன் தன்னுடைய கண்களைத் தேவன் மேல் வைக்க வேண்டும்.

83 இப்பொழுது அது நாம் தான். எந்த மனிதனும், எந்த மனிதனும் தவறுகளுக்கு உட்பட்டவனாயிருக்கிறான். அவன் மானிடனாயிருக்கிறபடியால் அவன் பிழைக்கு உட்பட்டிருக்கிறான். அவன் தேவனுடைய பிரமாணங்களின் மீறல்களுக்கு உட்பட்டிருக்கிறான். அவன் அநேக காரியங்களுக்கு உட்பட்டிருக்கிறான், ஏனென்றால் சாத்தான் அவனைச் சோதிக்கிறான், அவன் ஒரு சாதாரண மனிதனாயிருக்கிறான். தேவன் தம்முடைய கரங்களை உயர்த்தினால், அவன் விழுந்துவிடுவான். அவ்வளவுதான்.

ஜனங்கள், “ஓ, சாத்தானால் அதைச் செய்ய முடியாது” என்று கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்.

84 ஆம், நீங்கள் ஒரு முறை தேவன் தம்முடைய கரத்தை எடுத்துவிட அனுமதித்துவிட்டால், என்ன சம்பவிக்கிறது என்பதைக் கவனியுங்கள். அது ஒரு...நான் தொடர்ந்து, “தேவனே, அவனை அனுப்பாதேயும். என்மேல் இரக்கமாயிரும். அவனை என்னிடத்திலிருந்து விலக்கி வைத்திரும்,” என்று வேண்டிக்கொள்கிறேன், நீங்கள் பாருங்கள். எனக்குத்—எனக்குத் தேவனுடைய இரக்கம் தேவை. நம் எல்லோருக்கும் அது தேவை.

85 இப்பொழுது, ஏசாயா, அவன் அந்த நல்ல ராஜாவினுடைய கரத்தின் மேல் அதிகமாகச் சாய்ந்திருந்தான் என்பதை நாம் கண்டறிகிறோம், அவனிடத்திலிருந்து அந்தப் புயம் எடுக்கப்பட்டுவிட்டது; ராஜா மரித்துப்போய், குஷ்டரோகத்தால்

அவமானத்தில் மரித்தான். இப்பொழுது, ஏசாயா…இந்த நேரத்தில், ராஜா நீக்கப்படும்போது, பாருங்கள், அப்பொழுது அவனுடைய இளைய குமாரன் அந்த ஸ்தானத்தை வகிக்க வேண்டியவனாயிருந்தான். ஜனங்கள் ஒரு—ஒரு பயங்கரமான ஒழுக்கக்கேடான கட்டத்திற்குள் சென்றுவிட்டனர் என்பதை நாம் கண்டறிகிறோம்.

86 உண்மையான தேவபக்தியுள்ள தலைவன் இல்லாதபோது, அப்பொழுது ஜனங்கள் ஒழுக்கக்கேடுகளில் ஈடுபடத் துவங்குகின்றனர். இன்றைக்கு நம்முடைய தேசத்திலும், நம்முடைய சபைகளிலும், மற்ற காரியங்களிலும் உள்ள காரியமும் அதுதான் என்று நான் நினைக்கிறேன். நமக்குத் தேவபக்தியுள்ள தலைவர்கள், உதாரணமாக விளங்கும் ஒருவர் தேவை.

87 ஆனால் ஏசாயா மனிதரை நோக்கிப் பார்க்க முடியாது என்பதை அவர் இங்கே அறிந்து கொள்ளும்படி செய்தார். எனவே ஏசாயா, ஒரு நாள், அவன் சுற்றித் திரிந்தபோது, அவன் மிகவும் சோர்வுற்றிருக்க வேண்டும், அவன் ஒரு பெரிய பொறுப்பை உடையவனாயிருந்தான் என்பதை அறிந்து, அவன் ஜெபிக்க ஆலயத்திற்குச் சென்றான். இப்பொழுது அது நம் எல்லோருக்கும் செய்ய வேண்டிய ஒரு நல்ல காரியமாய் உள்ளது. ஜெபிக்க ஆலயத்திற்குச் செல்கிறான்.

88 அவன் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தபடியால், அவன் பீடத்தண்டையில் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, அவன் ஒரு தரிசனத்தில் ஆழ்ந்தான் என்பதை நாம் கவனிக்கிறோம். அவன் அதைச் செய்தபோது, அவன் மேலே நோக்கிப் பார்த்தான், அவன் தேவனைக் கண்டான், இராஜாவானவர் மிகவும் உயரமாய், உயர்த்தப்பட்டவராய், தம்முடைய சிங்காசனத்தில் வீற்றிருந்தார், அவருடைய வஸ்திரத் தொங்களால் அந்த இடத்தை நிரம்பியிருந்தது, நீங்கள் பாருங்கள். அப்பொழுது அவன் ஒரு உண்மையான உதாரணத்தைக் கண்டான். அவன் தன்னுடைய நம்பிக்கையை வைக்கக்கூடிய ஒருவரைக் கண்டான், அவர் ஒருபோதும் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டிருக்க முடியாது, ஒருபோதும் தவறிப்போக முடியாத ஒருவரை அவன் கண்டான். வேறு வார்த்தைகளில் கூறினால், அவர் ஏசாயாவிடம், “சரி, நீ யாரோ ஒரு மனிதன் மேல் நம்பிக்கை வைத்தாய், அது தவறிப் போனது. நீர் உன்…இந்த மனிதனை ஒரு மாதிரியாகக் காண்பித்தீர்—அவன் தவறிப்போனான். இப்பொழுது இங்கே, என்னை நோக்கிப் பார், நான் தவறிப்போகாத தேவன்” என்று கூறிக் கொண்டிருந்தார்.

89 அவருடைய ஊழியக்காரர்களாகிய நாம் அவரை நோக்கிப் பார்க்க வேண்டும் என்பதையே இன்றைக்கு நாம் செய்ய வேண்டும் என்று நான்—நான் நினைக்கிறேன். இயேசுவே நம்முடைய மாதிரியாயிருக்கிறார். நம்முடைய விசுவாசத்தின் ஆக்கியோனும், முடிக்கிறவருமாகிய அவரையே நாம் நோக்கிப் பார்க்க வேண்டும்.

90 இப்பொழுது அவன் தேவன் ஒரு சிங்காசனத்தின் மேல் உயர்த்தப்பட்டிருப்பதைக் கண்டான் என்பதை நாம் இந்தத் தரிசனத்தில் கண்டறிகிறோம். பிறகு அவன் மற்றொரு காரியத்தையும் கவனித்தான். கவனியுங்கள், அவரைச் சுற்றிலும், அவர் இருந்த ஆலயத்தில் இந்தப் பரலோக சேராபீன்கள் இருந்தனர்.

91 நீங்கள் அந்த வார்த்தையை ஆராய்ந்து பார்த்தால், அது வேதாகமத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது என்று நான் நினைக்கிறேன். அது—அது கேருபீன்கள் அல்ல, ஆனால் அது கேருபீன்களுக்குச் அடுத்தபடியாக உள்ளது. ஏதோ ஒரு தூதன் போன்ற ஒரு காரியம்; அதே சமயத்தில் அது ஒரு தூதன் அல்ல, அது ஒரு தூதன், ஆனால் அது ஒரு விசேஷித்த நபர். அவர்கள் என்னவாயிருக்கிறார்கள் என்றால், அவர்கள் வேதாகமத்தில் ஒரு பலியை எரிப்பவர்களாயிருக்கிறார்கள். அந்தப் பலி, நிச்சயமாகவே, உள்ளே கொண்டு வருகிறதோ அல்லது வழி நடத்துகிறதோ… பாவிக்காக ஒரு வழியை பரிசுத்தத்திற்கு உண்டுபண்ணுகிறது. இந்தச் சேராபீன்கள் தேவையாயிருந்த பலியை எரித்தனர், அவர்கள்—அவர்கள் சென்றது…அது அவர்களுடைய கடமையாயிருந்தது.

92 ஏசாயா தரிசனத்தில் காணப்பட்டபோது, அவர்கள் இங்கே தேவாலயத்தினூடாகப் பறந்து கொண்டிருந்தனர், ஆலயம் முழுவதும் புகையால் நிறைந்தது. அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, “சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்! பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்!” என்று கூப்பிட்டுக் கொண்டிருந்தனர். ஓ, வேறு வார்த்தைகளில் கூறினால், “விழ முடியாத ஏதோ ஒன்று உண்டு. அதுதான் உங்களுடைய உதாரணம். நோக்கிப் பார்க்க இராஜா இருக்கிறார். சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்!”

93 இவை ஆறு செட்டைகளையுடைய சிருஷ்டிகள் என்பதை நாம் இப்பொழுது கண்டறிகிறோம். இப்பொழுது ஆறு செட்டைகள் உண்டாயிருப்பதற்கான காரணத்தை நாம் ஆராயப் போகிறோம். அவைகள், அவைகள் தங்களுடைய முகத்தின் மேல் இரண்டு செட்டைகளையும், தங்களுடைய கால்களின் மேல் இரண்டு செட்டைகளையும், இரண்டு செட்டைகளோடு பறந்து கொண்டிருந்தன என்பதை நாம் கண்டறிகிறோம்.

94 இப்பொழுது முதலாவதாக, இந்தச் சிருஷ்டிகள் தேவனுடைய பிரசன்னத்தில் ஊழியம் செய்து கொண்டிருந்தன என்பதைக் கவனியுங்கள். அது அவைகளுடைய கடமையாயிருந்து, “சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்!” என்று கூப்பிட்டுக் கொண்டிருந்தன. அவருடைய பிரசன்னத்தில், அங்கே பலி வைக்கப்பட்டிருக்கையில், அவர்கள் இரவும் பகலும் கூப்பிட்டன. “சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்!”

95 நீங்கள் இங்கே ஒரு காரியத்தைக் கவனித்து, சிந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அந்தச் சேராபீன்கள் தங்களுடைய முகங்களின் மேல் இரண்டு செட்டைகளை உடையதாயிருந்தன. அவர்கள் ஏன் தங்களுடைய முகங்களை மூடிக் கொள்ள வேண்டும்? ஏனென்றால் அவர்கள் தேவனுடைய பிரசன்னத்தில் இருந்தனர். சற்று சிந்தித்துப் பாருங்கள், அவருடைய பிரசன்னத்தில் பரிசுத்த தூதர்கள் தங்களுடைய முகத்தை மறைக்க வேண்டுமானால், நம்மைக் குறித்து என்ன? தங்களுடைய முகங்களின் மேல் செட்டைகள், பயபக்தியை சுட்டிக்காட்டினது.

96 ஆனால் இன்றைக்கு பயபக்தி இல்லை என்பதை நாம் கண்டறிகிறோம். நீங்கள் பயபக்தியைக் கண்டறிய முடியாது. அவர்களுக்குத் தேவனிடத்தில் மரியாதை கிடையாது. அவர்கள் தங்களுடைய காலைக் கம்பியின் மேல் வைத்து நின்றுகொண்டு, *அமெரிக்காவை தேவன் ஆசீர்வதிப்பாராக* என்ற பாடலைப் பாடுகின்றனர். அவர்கள் செய்கிற விதம் பயங்கரமாயிருக்கிறது.

97 நான் இன்றைக்கு, ஒரு இடத்தில், ஒரு—ஒரு இடையீட்டு ரொட்டியைக் கேட்கச் சென்றிருந்தேன். அந்தச் சிறு பெண்மணியோ, அவளைக் குறித்து எந்தக் கருத்தும் கூறவில்லை, ஆனால் அவள் மரித்துக் கொண்டிருக்கிறாள் என்று நான் எண்ணினேன். அவள் கண்களுக்குக் கீழே கருவளையத்தைப் போன்று காணப்பட்டது, அதைச் சுற்றி முழுவதும் நீலமாக இருந்தது. மேலும்—மேலும் அவள் ஒரு சில ஆடைகளை அணிந்து கொண்டு ஓடி வந்து, “உங்களுக்கு என்ன வேண்டும்?” என்று கேட்டாள்.

98 நான், “நீங்கள் எனக்கு ஒரு இடையீட்டு ரொட்டியும், ஒரு—ஒரு—ஒரு—ஒரு—ஒரு கண்ணாடிக் குடுவை மோரும் கொண்டு வருவீர்களா?” என்று கேட்டேன்.

அவள், “மதுபானமா” என்று ஒருவிதமான ஒரு காரியத்தின் பேரில் கூறினாள்.

99 நான், “இல்லை அம்மா, நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டீர்கள்” என்றேன். நான், “நான் ‘மோர்’ என்றேன்” என்றேன்.

அதற்கு அவள், “ஓ,” என்று கூறி, “நீங்கள் குடிக்க ஏதாவது எடுத்துக்கொள்கிறீர்களா?” என்று கேட்டாள்.

அதற்கு நான், “எனக்கு மோர் வேண்டும்” என்றேன்.

100 மேலும் அவள், “பாருங்கள், நீங்கள் எல்லோரும், நீங்கள் விரும்பவில்லை…இரவில் நாங்கள் *இன்ன-இன்ன* சேவை செய்கிறோம்” என்றாள்.

அதற்கு நான், “நான் ஒரு ஊழியக்காரன்” என்றேன்.

101 அவள், “சரி, நம்முடைய…நல்லது, நம்முடைய கத்தோலிக்க குருமார்கள் இங்கே வந்து குடிக்கிறார்கள்” என்றாள்.

102 நான், “பெண்மணியே, நான்—நான் ஒரு கத்தோலிக்க பாதிரியார் அல்ல. எனக்கு—எனக்கு வேண்டும்…எனக்கு ஒரு கண்ணாடிக் குடுவை மோர் வேண்டும்” என்றேன். அது அந்தப் பெண்ணை அதிர்ச்சிக்குள்ளாக்கியது போன்று தென்பட்டது. அது என்னவாயிருந்தது என்று அவளுக்குத் தெரியவில்லை. பார்த்தீர்களா?

103 உலகம் அப்படிப்பட்ட ஒரு இடத்திற்குள் சென்று விட்டது. இப்பொழுது ஒரு பாதிரியார் வந்து மது அருந்தினால், சபையோர் குடிப்பதற்கு உரிமையுண்டு; இதோ உங்களுக்கான உதாரணம், பாருங்கள். ஓ, என்னே, நாம் என்ன ஒரு சீரழிவில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்! பிரசங்க பீடத்திலிருந்து…ஆம், வீட்டைச் சுத்தம் செய்தல் நமக்குத் தேவை. ஆம் ஐயா, நாம் நிச்சயமாகவே செய்ய வேண்டும். எப்படியாய் உலகத்தின் சீர்கேடு!

104 இவைகள், எந்தப் பயபக்தியும் இல்லை, எந்த மரியாதையும் இல்லை! இன்றைக்கு ஜனங்கள், அவர்கள் தேவனை மதிப்பதில்லை. அவர்களுக்குப் பயபக்தியே கிடையாது. அவர்கள் அவருடைய நாமத்தை வீணாய் எடுத்துக்கொண்டு, அசுத்தமான கேலித்தனங்களைக் கூறுகிறார்கள். மேலும்—மேலும் போதகர்களும் கூட அதைச் செய்கின்றனர். நீங்கள் ஒரு—ஒரு கேலிப் பேச்சைக் கேட்கிறீர்கள், அது பரவாயில்லை என்று நினைக்கிறேன். ஆனால் ஊழியக்காரர்களோ நீதிக்கும் பரிசுத்தத்திற்கும் முன்னுதாரணமாயிருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அந்தக் காரணத்தினால்தான் நாம்—நாம் அதைக் காட்டிலும் அதிக தூரம் செல்வதில்லை என்று நான் நினைக்கிறேன்; நாம் அப்படி இல்லை, நாம் இதில் இருக்க வேண்டிய உத்தமத்தை உடையவர்களாயிருக்கவில்லை. நீங்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கையில், நீங்கள் அந்தச் சிறு உத்தமத்தையும் இழந்துவிடுகிறீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதைக் குறித்த ஒரு காரியம் உண்டு.

105 தேவன் ஒவ்வொரு மணி நேரமும் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். நீங்கள் உறங்கும்போது அவர் உங்களைக் கவனிக்கிறார். இப்பொழுது, ஜனங்கள் அந்தக் காரியங்களைச் செய்வதற்கு காரணம் என்ன என்று நான் நினைப்பதோ அவர்கள்—அவர்கள்—அவர்கள்—அவர்கள்—அவர்கள் அவருடைய பிரசன்னத்தைப் பற்றி உணரவில்லை, பாருங்கள். ஆனால் அதே சமயத்தில் அவர் அங்கிருக்கிறார், அவர் இருக்கிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அல்லது இல்லையோ. அவர் நீங்கள் காணும் ஒவ்வொரு தோற்றத்தையும், நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு—ஒவ்வொரு அசைவையும் காண்கிறார். அவர் அதைக் குறித்த எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். ஆனால் நாம் அதை உணர்ந்தறிய வேண்டும்.

106 நாங்கள் முன்பு ஒரு சிறு பாடலைப் பாடுவதுண்டு, நான்

முதலில் பெந்தேகோஸ்தேயினர் மத்தியில் வந்தபோது, அவர்கள் பாடினார்கள்:

> ஆத்துமாவின் உண்மையான வாசஸ்தலத்திற்கு
> செல்லும் பாதையில்,
> ஒரு கண் உங்களைக் கவனித்துக்
> கொண்டிருக்கிறது;
> நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும்,
> இந்த மகத்தான கண் விழித்துள்ளது,
> ஒரு கண் உங்களைக் கவனித்துக்
> கொண்டிருக்கிறது.

பார்த்தீர்களா? அந்தப் பாடல் உங்களுக்கு நினைவிருக்கிறதா? [சபையோர், "ஆம்" என்கின்றனர்.—ஆசி.] இப்பொழுது அது உண்மை.

107 தேவனுடைய சர்வ வல்லமை நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதையும், உங்களுடைய சிந்தனைகளையும் கூட அறிந்திருக்கிறது. ஒரு சமயம் நான் ஒரு தரிசனத்தில் இருந்தபோது, என் அருகில் நின்று கொண்டிருந்த ஒரு இயற்கைக்குமேம்பட்டவருடன் நான் பேசிக் கொண்டிருந்தேன்; அதற்கு அவர் பதிலளித்தார், "பூமியிலுள்ள சத்தத்தைக் காட்டிலும் பரலோகத்தில் உங்கள் நினைவுகள் அதிக சத்தமிடுகின்றன" என்று அவர் கூறினார். நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அவர் அறிந்திருக்கிறார். நீங்கள்—நீங்கள் *இதைச்* செய்கிறீர்கள், நீங்கள் *அதைச்* செய்கிறீர்கள், மற்றும், ஆனால், நீங்கள் பாருங்கள், என்று நீங்கள் சொல்லலாம், உங்களுடைய இருதயத்தில், நீங்கள் வித்தியாசமாகச் சிந்திப்பீர்களேயானால், நீங்கள்—நீங்கள் ஏதோ ஒரு காரியத்தைத் தவறாய் செய்து கொண்டிருக்கிறீர்கள். பாருங்கள், நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ, அப்படியே இருக்க வேண்டும். இருதயத்தில் உள்ளதை வாய் பேச வேண்டும். பார்த்தீர்களா? ஆகையால் ஜனங்கள் தேவனுடைய பிரசன்னத்தை உணரவில்லை என்பதை நாம் கண்டறிகிறோம்.

108 அவர்கள் தாவீதைப் போலிருக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள், அந்த மனிதன் தேவனுடைய சொந்த இருதயத்திற்கு ஏற்றவனாய் இருந்தான். அவன், "கர்த்தர் எப்பொழுதும் எனக்கு முன்பாக இருக்கிறார்" என்றான். அவன் எங்குச் சென்றாலும், தேவன் எப்பொழுதும் அவனுக்கு முன்பாக இருக்கிறார் என்பதை அவன் நினைவுகூருகிறான். "அவர் என்னுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார், நான் அசைக்கப்படேன்," ஏனெனில் தேவன் அவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார்.

109 பயபக்தி! நாம் சகோதரன், சகோதரி என்ற முறையில் ஒருவரையொருவர் கனம்பண்ண வேண்டும், ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்த வேண்டும். மரிக்காத அன்பினால்

ஒருவரிலொருவர் அன்பு கூருங்கள். நீங்களோ, “பாருங்கள், என்னால் முடியாது” என்று கூறலாம். பாருங்கள், *இங்கே* இன்னும் சிறிது நேரம் தங்கியிருங்கள், அப்பொழுது நீங்களும் கூட ஜனங்களை விரும்புவீர்கள். உங்களை நேசிக்காதவர்களை நீங்கள் நேசிப்பீர்கள். அது உண்மையாகவே கிறிஸ்தவத்தின் ஒரு நல்ல அடையாளமாயுள்ளது: உங்களால் முடிந்தால், உங்களுடைய இருதயத்திலிருந்து, உங்களை நேசிக்காதவர்களை நேசிக்க முடிவது. அன்பு செலுத்த முடியாதவர்களையும் நேசியுங்கள்.

110 இயேசு, “உங்களுக்கு உதவி செய்கிறவர்களுக்கு நீங்கள் உதவி செய்தால், பாருங்கள், ஆயக்காரரும் அதையே செய்கிறார்கள்” என்றார். ஆனால், பாருங்கள், உங்களிடத்தில் இரக்கமற்றவர்களிடத்தில் நீங்கள் இரக்கமாயிருக்க வேண்டும். உங்களுக்குத் தீமை செய்ய விரும்புகிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். அதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். தேவன் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பதை உங்களுக்கு முன்பாக வைத்திருங்கள். நீங்கள் அவருக்குத் தீமையாயிருந்தபோது, தேவன் உங்களுக்கு நல்லவராக இருந்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். “நீங்கள் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து உங்களுக்காக மரித்தார்.”

111 அவர்கள் தேவனுடைய சமுகத்தில் பயபக்தியாயிருந்த காரணத்தால், இந்தச் செட்டைகள் தங்களுடைய முகங்களை மூடிக்கொண்டன என்பதை நாம் இப்பொழுது கண்டறிகிறோம். ஒரு பரிசுத்த சேராபீன் தன்னுடைய முகத்தை விசேஷித்த முக்காடிட்டு மறைத்துக் கொள்ள வேண்டியதாயிருந்தால், பாவம் அறியாத ஒன்று, ஒருபோதும் பாவம் செய்யாதவை, ஆனால் அதே சமயத்தில் பரிசுத்த தேவனுடைய பிரசன்னத்தில் தம்முடைய பரிசுத்த முகத்தைத் தேவனுடைய சமூகத்தில் மறைக்க வேண்டியதாயிருக்கிறது, ஒரு மாய்மாலக்காரன் அந்நாளில் என்ன செய்யப் போகிறான்? பின்வாங்கிப்போனவன் அந்நாளில் என்ன செய்யப் போகிறான்? நீங்கள் வரும்போது, அந்த நாளில் தேவபக்தியற்றவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? நீங்கள் அவரைச் சந்திக்க வேண்டும்.

112 ஒரே ஒரு காரியம் மாத்திரமே உண்டு. நீங்களோ, “ஆனால் என் முகத்தை மறைக்க அவர் ஒருபோதும் எனக்குச் செட்டைகளை உண்டுபண்ணவில்லை” என்று கூறலாம். ஆனால் நீங்கள் உங்களுடைய முகத்தை மறைக்கும்படியாக, அவர் தம்முடைய சொந்த குமாரனின் இரத்தத்தை சிந்தினார். அது உண்மை. மானிட வர்க்கத்திற்காக அவர் கொண்டுள்ள ஒரே மூடி, இயேசு கிறிஸ்துவின் இரத்தமாயுள்ளது.

113 இப்பொழுது, இரண்டாவதாக, அவர்களுடைய பாதங்கள் செட்டைகளினால் மூடப்பட்டிருந்தன. இப்பொழுது அது தாழ்மையை சுட்டிக்காட்டினது. ஓ, இன்றைக்கு அநேக ஜனங்களுக்கு,

ஒரு வார்த்தை இழக்கப்பட்டிருக்கிறது. அவருடைய பிரசன்னத்தில் தாழ்மை. அவருடைய சமுகத்தில் நம்மைத் தாழ்த்துவோம்.

114 பரிசுத்த ஆவியானவர் அறைக்குள் வந்து அவர் செய்வதாக வேதம் கூறியுள்ள காரியங்களைச் சரியாகச் செய்து, பகுத்தறிவதை நான் கண்டிருக்கிறேன், ஜனங்கள் எழுந்து நடந்து செல்வதை நான் கண்டிருக்கிறேன். அது நடந்து கொண்டிருக்கும்போது, ஜனங்கள் உட்கார்ந்து பேசுவதையும், சிரித்து, அதைக் குறித்து பரிகசிப்பதையும் நான் கண்டிருக்கிறேன்.

115 ஓர் இரவு, ஒரு ஊழியக்காரன் தன்னுடைய சபையோர் இருபத்தியெட்டு பேரை அழைத்து வந்து உட்கார்ந்து கொண்டிருந்தது எனக்கு நினைவிருக்கிறது. இது ஆர்கன்சாஸில் உள்ள ஜோன்ஸ்போரோவில் நடந்தது.

116 அவர்கள் காக்காய் வலிப்பு கொண்ட ஒரு பையனை உடையவர்களா யிருந்தனர், அவனுக்குக் காக்காய் வலிப்பு இருந்தது. அது ஒரு பிசாசு. அது ஒரு பிசாசு. அதுதான் அது. அவர்கள் அதை அறிவதில்லை, மருத்துவர்கள் அதன் காரணம் என்ன என்பதை அறிந்திருக்கவில்லை. அது ஒரு—அது ஒரு பிசாசு. மேலும் அவர்கள்…ஒரு துணிக் கொக்கியை வைத்து, அதில் ஒரு—ஒரு—ஒரு கந்தையைச் சுற்றியிருந்தார்கள்; அவனுக்கு இந்தத் வலிப்பு ஏற்படும்போது, அவர்கள் அதை அந்தப் பையனுடைய வாயில் திணிப்பார்கள், ஏனென்றால் அவன் அப்போது தன் நாக்கைக் கடித்துக் கொள்வான். அவர்கள் அந்தப் பையனை மேலே கொண்டு வந்தனர், மேலும்—மேலும் அவன் மேடையின் மேல் இந்தத் தாக்குதலுக்கு உள்ளானான். உண்மையாகவே, அவர்கள் சிறிது உணர்ச்சிவசப்படும்போது அவர்களுக்கு வலிப்பு ஏற்படும். எனவே நாங்கள் அந்தப் பையனுக்காக ஜெபிக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது, நான், “ஒவ்வொருவரும் தங்கள் தலைகளைப் பயபக்தியுடன் வணங்குவார்களா?” என்று கேட்டேன். நான்—நான் அவனுக்காக ஜெபித்தேன், அந்த ஆவி அந்தப் பையனை விட்டுப் போகவில்லை.

117 நான் சுற்றும் முற்றும் பார்த்தபோது, ஒரு சிறு குழு ஒரு இடத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டேன். நான், “நீங்கள் உங்களுடைய தலையை வணங்குவீர்களா?” என்று கேட்டேன். நான், “நீங்கள் கீழ்ப்படிய வேண்டும்” என்றேன். நான், “அதாவது, ‘நீ ஜனங்களை விசுவாசிக்கும்படி செய்து, அதன்பின்னர் நீ ஜெபிக்கும்போது உத்தமமாக இருந்தால்’” என்பது கட்டளையாயிருந்தது. நான், “நீங்கள் உங்களுடைய தலையை வணங்குவீர்களா?” என்று கேட்டேன். அந்த நபர் என்னைப் பார்த்து நகைத்தான்.

118 எனவே நான் திரும்பிப் பார்த்தேன், ஆனால், இது, அது அந்தப் பையனை விட்டு விலகவில்லை. இப்பொழுது இங்கே நூற்றுக்கணக்கான மக்கள் இருந்தனர்; அதாவது இன்றிரவு

இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறவர்களைக் காட்டிலும் ஐந்து மடங்கு, ஆம், பல மடங்கு அங்கே அமர்ந்திருந்தனர். அங்கு இருபத்தெட்டாயிரம் பேர் இருந்ததாக அவர்கள் உரிமை கோரினர். எனவே—எனவே அங்கே—அங்கிருந்த, அவர்கள் யாவரும்…

119 அப்பொழுது நான், "ஐயா, நான்—நான் அதைச் செய்யமாட்டேன்" என்றேன். அவன் வெறுமனே தெய்வீக சுகமளித்தலை குறித்து வெறுமெனச் சாதாரணமாகச் சிரிக்கும் ஒரு—ஒரு ஸ்தாபன சபையைச் சார்ந்தவன், அப்படிப்பட்ட ஒரு காரியம் உண்டு என்று நம்புகிறதில்லை.

120 அதனால் நான் சுற்றிலும் பார்த்தேன், அந்தப் பரிதாபமான சிறுவனின், தொண்டை வறண்டு விட்டது, அவனது தாய் *அப்படி* அழுதுகொண்டு பிடித்துக்கொள்ள முயன்றாள், அந்தச் சிறுவன் விழுங்க முயற்சித்து தொடர்ந்து கொண்டிருந்தான்.

121 நான், "பரலோகப் பிதாவே, இந்த அப்பாவிப் பையன் அந்தக் குற்றவாளி குழுக்களுக்காகப் பாடுபட வேண்டாம், பாரும்" என்றேன். நான், "அது உம்முடைய—உம்முடைய வார்த்தையாயிருந்தது, நான்—நான் நேர்மையாயிருந்து அவர்களிடம் கூறினேன். இங்கே இந்தக் கூட்டத்தில் காக்காய் வலிப்புள்ளவர்கள் அநேகர் சுகமடைந்துள்ளனர்" என்றேன். நான், "இந்த அப்பாவிப் பையன் கஷ்டப்பட வேண்டாம். தாயும் தகப்பனும் அவனை இங்குக் கொண்டு வந்தனர். நான் இரக்கத்திற்காக ஜெபிக்கிறேன்" என்றேன்.

122 அதன்பின்னர் நான் திரும்பி, நான், "கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் விசுவாசத்தினாலே, சர்வவல்லமையுள்ள தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட என்னுடைய கட்டளையினால், இந்தப் பிசாசு இந்தப் பையனைப் பிடித்து வைக்க முடியாது. நீ விடுதலையாயிருக்கிறாய், பார். கீழ்ப்படியாதவர்கள் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், அப்பொழுது நீ அவர்களிடத்திற்குச் செல்ல சுதந்திரம் உண்டு, ஆனால் அந்தப் பையனை விட்டு வெளியே வா" என்றேன்.

123 நான் இருபத்தியெட்டு பேர், அவர்களுடைய போதகரோடு, காக்கை வலிப்பு நோயினால், அந்தவிதமாகத் தரையில் சுற்றி, சுற்றி, சுற்றி, சுற்றி விழுந்ததைக் கண்டேன். எனக்குத் தெரிந்தமட்டில், அவர்கள் இன்னமும் அதைப் உடையவர்களா யிருக்கின்றனர், பாருங்கள்.

124 இப்பொழுது, நீங்கள் பாருங்கள், நீங்கள் பயபக்தியற்றவர்களாய் இருக்கக் கூடாது. நீங்கள் உங்களைத் தாழ்த்த வேண்டும். உங்களில் எத்தனை பேர் கூட்டங்களிலிருந்து, என்னுடைய கூட்டங்களில் இதே போன்ற காரியங்கள் சம்பவித்ததைக் கண்டிருக்கிறீர்கள்? அப்படியே…ஏன், பாருங்கள்? நிச்சயமாக. ஆம், ஐயா.

125 ஒரு சமயம் என்னை வசியம் செய்ய ஒரு மனிதனை அவர்கள் கொண்டு வந்தனர். உங்களில் அநேகருக்கு அது நினைவிருக்கும் என்று நான் நினைக்கிறேன். அவர்கள்—அவர்கள் அவனை இராணுவ முகாம்களுக்குக் கொண்டு செல்வார்கள், மேலும்—மேலும் இந்த வீரர்களைக் கொண்டு சென்று அவர்களை வசியம் செய்து, அவர்களை ஒரு நாயைப் போலக் குரைக்கச் செய்கிறார்கள். அவர்கள் என்னைக் கொண்டு வேடிக்கை பார்க்கப் போவதாக இருந்தனர். எனவே நான் ஒரு அரங்கத்தில் இருந்தேன், அவர்கள் இந்த மனிதனை அழைத்து வந்தனர். மேலும்—மேலும் ஜெப வரிசை துவங்கினபோது, எங்கோ ஒரு பொல்லாத ஆவி இருந்தது என்பதை நான் உணர்ந்தேன்.

126 நீங்கள் எப்போதும் அவைகளையும், அந்தச் சந்தேகத்தையும் தெரிந்து கொள்ளலாம். அவர்கள் அப்படி இல்லை என்று நினைக்கிறார்கள்…அது…நீங்கள் அதை உணர முடியும், அது வித்தியாசமாயுள்ளது.

127 ஆகையால் அது எங்கே இருந்தது என்பதை என்னால் கூற முடிந்தது, ஆனால் அந்த மனிதன் எங்கே இருந்தான் என்பதை என்னால் காண முடியவில்லை. சிறிது நேரம் கழித்து, நான் அதைக் கண்டுபிடித்தேன், அது என்னவென்று நான் கண்டேன். அந்த இருள் அவன்மேல் தொங்கிக் கொண்டிருந்ததை நான் கவனித்தேன். நான் அதைக் கூற விரும்பவில்லை, ஆனால் நான் அவனிடம் திரும்பி, “பிசாசின் பிள்ளையே” என்றேன். பாருங்கள், “அதைச் செய்யும்படி பிசாசு ஏன் உன் சிந்தையில் வைத்திருக்கிறான்? அவன் அதைச் செய்திருக்கிறபடியால்,” ஏதோ ஒன்று எனக்குள்ளாக அதைக் கூறிக்கொண்டிருந்தது, “அவர்கள் உன்னை இங்கிருந்து வெளியே கொண்டு செல்வார்கள்.” அவன் இன்னமும் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறான். பார்த்தீர்களா?

கடிதத்திற்கு கடிதம், “அவரிடம் வாருங்கள்!”

128 நான், “எனக்குத் தெரிந்த ஒரே காரியம் மனந்திரும்புதல். பாருங்கள், நான் அதை ஒருபோதும் செய்யவில்லை. அது தேவனுக்கு முன்பாக நீங்கள் கொண்டிருந்த மரியாதையின்மையாயிருந்தது” என்றேன். பார்த்தீர்களா? இப்பொழுது நீங்கள் அதைச் செய்யாதீர்கள். நாம்…

129 தேவனுக்கு முன்பான இந்தப் பரிசுத்தமானது ஒருவிதமான கேலிக்கூத்து என்று மக்கள் நினைக்கும் காலங்கள் நமக்கு வந்துள்ளன, அல்லது ஏதோ ஒரு விதமான ஒரு—ஒரு கூட்ட அறியாத ஜனங்கள், ஏதோ ஒரு விதமான ஒரு வழிபாட்டு முறையை அல்லது ஒரு குலத்தை, அல்லது ஏதோ ஒரு காரியத்தையே அறியாதிருக்கிறார்கள். ஆனால் சகோதரனே, நான் உங்களுக்கு உறுதியாகக் கூறட்டும்! அங்கே ஏராளமான பரியாசம் இருக்கலாம். இல்லை என்று நான்—நான் கூறவில்லை; என்னால்—என்னால்—

என்னால் அதைக் கூற முடியாது. நான் ஒரு மனிதன். நான் நியாயந்தீர்ப்பளிக்கிறவன் அல்ல. நான் பிரசங்கிக்க மாத்திரமே இருக்கிறேன். ஆனால் ஒரு அசலான பரிசுத்த ஆவி உண்டு, பரிசுத்த ஆவியின் அசலான அப்போஸ்தல வல்லமை. அயல்நாடுகளிலும், சூனியக்காரர்களும் மற்ற காரியங்களும், அந்தப் பிசாசுகள் சவாலிட எழும்புகின்றன. ஓ, நாம் அப்படியே…நான் என் பாடப் பொருளை இங்கே விட்டுவிட்டு, உங்களுக்கு அந்தக் காரியங்களைக் கூற சென்று விட்டேன். பிறகு என்ன? பரிசுத்த ஆவியானவர், ஒரு முறை கூட அவர் அதைச் செய்யத் தவறியதை நான் கண்டதேயில்லை. அவர் ஒவ்வொரு முறையும் அதைச் செய்வார்.

130 இப்பொழுது கவனியுங்கள், அவர்கள் தாழ்மைக்காகத் தங்களுடைய கால்களின் மேல் செட்டைகளை உடையவர்களாயிருந்தனர். நாம் தாமே பணிந்து கொள்ள விரும்புகிறதில்லை. நாம் யாரோ ஒருவர் என்று நாம் நினைக்க விரும்புகிறோம்.

131 அண்மையில் நான் இங்கே ஒரு சிறு அருங்காட்சியகத்தில் இருந்தது எனக்கு நினைவிருக்கிறது. மேலும்—மேலும் அவர்கள் நூற்றைம்பது பவுண்டுகள் எடையுள்ள ஒரு மனிதனுடைய சரீரத்தின் மதிப்பு என்னவென்பதையும், இரசாயனங்கள் என்னவாயிருந்தது என்பதையும் ஆராய்ந்து பார்த்தனர். அது எண்பத்தி நான்கு சென்டுகள் என்று நான் நினைக்கிறேன், ஒரு மனிதன் நூற்றைம்பது பவுண்டுகள் எடையுள்ளவனாயிருந்தான், அவனுடைய—அவனுடைய அவனுடைய சரீரத்தின் இரசாயனங்கள். அவன் கொஞ்சம் கால்சியத்தை உடையவனாயிருந்தான் மேலும் ஒரு கோழிக்கூண்டு, போன்றவற்றிற்கு சுண்ணாம்படிக்க மட்டுமே போதுமானதாயிருக்கலாம். நூற்று எண்பத்தி நான்கு பவுண்டுகள் எடையுள்ள அவன்—அவனுடைய எல்லாமே கிட்டத்தட்ட அவ்வளவுதான்…இல்லை, நான் சொல்ல வருவது எண்பத்தி நான்கு சென்டுகள், நூற்றைம்பது பவுண்டுகள் எடை கொண்டவை.

132 அங்கே இரண்டு வாலிபர் நின்று கொண்டு இதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். நான் அவர்களுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தேன். அவர்களில் ஒருவர், “சரி,” என்று கூறி, “ஜான், நாம் அவ்வளவு மதிப்புள்ளவர்கள் இல்லை, இல்லையா?” என்றான். அவன், “நாம் அப்படியில்லை என்று நான் யூகிக்கிறேன்” என்றான்.

133 மேலும் நான், “பாருங்கள், பையன்களே, அது உண்மைதான், பாருங்கள், நீங்கள் இரசாயனங்களுக்கு அதிக மதிப்புடையவர்கள் அல்ல. ஆனால் உங்களுக்குள்ளே ஒரு ஆத்துமா உள்ளது, பாருங்கள், அது பத்து லட்சம் உலகங்களுக்குச் சமம், பாருங்கள்” என்றேன். அது உண்மை. புரிகிறதா?

134 ஆனால் அதே சமயத்தில் நாம்—நாம் கவனித்துக் கொள்ள விரும்புகிறோம், நாம் இந்த எண்பத்தி நான்கு செண்டுகளிலேயே

பெருமை வைத்துள்ளோம், ஒரு ஐநூறு டாலர்கள் மதிப்புள்ள மென்மையான உரோம கோட்டில் அதைச் சுற்றி, நாம்—நாம் ஏதோ ஒரு காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறோம் என்று எண்ணி, மற்றும்—மற்றும் நம்முடைய மூக்கை உயர்த்திப் பெருமையாக வைத்துக் கொள்கிறோம். நான் கேலி செய்ய வேண்டும் என்று பொருட்படுத்திக் கூறவில்லை, இது கேலி செய்ய அல்ல, இது—இது நாம் என்னவாயிருக்கிறோம் என்பதையே உங்களுக்குக் கூறுகிறது. பாருங்கள், நாம்—நாம்—நாம்…

135 நாம் தாழ்மையைப் பெற்றிருக்கவில்லை. நாம் விரும்புகிறதில்லை, ஜனங்களும் விரும்பவில்லை. நீங்கள் எப்பொழுதாவது சபையில் நன்கு உடுத்தியிருக்கிற ஜனங்களிடம் சென்றால், அவர்கள்—அவர்கள் உள்ளே வருவார்கள்; நீங்கள் சரியாக உடை உடுத்தவில்லையென்றால், அவர்கள் உங்களைப் பார்த்துப் பேசுவார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அது அதனுடைய…அவர்கள் அதைச் செய்யக் கூடாது, கிறிஸ்தவ மார்க்கம் என்று உரிமை கோருகின்றனர். நான்—நான்—நான் நினைக்கிறேன் அது ஒரு தொழில் மட்டுமே, ஒரு உடைமை அல்ல. ஏனென்றால் அது தேவனோடுள்ள ஒரு—ஒரு உண்மையான பண்டைய கால அனுபவம் என்று நான் நம்புகிறேன் ஒரு மாலை நேர அங்கியின் மீது தன்னுடைய கரங்களை ஒரு ஜோடி மேலாடையின் மீது போட்டு, “சகோதரனே” என்று கூறுவான். நான்—நான் அதை உண்மையாகவே விசுவாசிக்கிறேன். அது உண்மை. ஒரு பட்டு ஆடையுடன் கூடிய சொரசொரப்பான ஆடை அணிந்தவர்களையும் “சகோதரி” என்று அழைப்பார்கள். ஆம், ஐயா. ஏனென்றால் அது ஆடைகள் அல்ல, அது அந்த நபர் அல்ல. அது உட்புறத்தில் உள்ள கிறிஸ்துவாய் உள்ளது, நாம் நம்மைத் தாழ்த்த வேண்டும்.

136 இந்தத் தூதர்கள் தங்களுடைய பாதங்களை இல்லை இந்தச் சேராபீன்களை மூடிவிட்டனர் என்பதை நாம் இப்பொழுது கண்டறிகிறோம்.

137 மோசே, அவன் தேவனுடைய சமுகத்தில் இருந்தபோது, அந்த எரிகிற முட்செடியில் பின்னால் இருந்த அந்த அக்கினி ஸ்தம்பத்தின் அருகே அவனைக் கவனிக்கச் சொல், என்று கர்த்தர் உரைத்தார். அக்கினி ஸ்தம்பம் கிறிஸ்து என்றும், அவர் உடன்படிக்கையின் தூதனாயிருந்தார் என்றும் எவரும் அறிவர். “கிறிஸ்துவின் நிந்தையை எகிப்தில் உள்ள பொக்கிஷங்களைப் பார்க்கிலும் மகத்தானதாகக் கருதி எகிப்தை விட்டுப் புறப்பட்டான்.” எனவே, அது உடன்படிக்கையின் தூதனாயிருந்தது. அவர் பக்கத்தில் இருந்த எரிகிற புதரில் பிரசன்னமானபோது, ஏன், மோசேக்கு முன்பாக, “உன் பாதரட்சைகளைக் கழற்று” என்று சத்தம் கேட்டது. உன்னுடைய பாதம், பாருங்கள். “உன்னுடைய பாதரட்சைகளைக் கழற்று, ஏனென்றால் நீ நிற்கிற பூமி பரிசுத்தமாயிருக்கிறது.” மோசே தன்னுடைய பாதரட்சைகளைக் கழற்றி தன்னைத் தாழ்த்தினான்.

138 அதே அக்கினி ஸ்தம்பம் ஒருநாள் தமஸ்குவுக்குப் போகும் வழியில் பவுலுக்குத் தோன்றியது.

139 இயேசுவானவர் பூமியின் மேலிருந்தபோது உங்களுக்கு நினைவிருக்கிறதா…அவர்கள் கூறினர், ஒரு நாள் அவர்கள் கூறினர்…பரிசுத்த யோவான் 6-ம் அதிகாரத்தில் அவர்கள் அந்த ஊற்றிலிருந்து குடித்து, களிகூர்ந்து கொண்டிருந்தனர். மேலும் அவர், “நான்—நான்தான் அந்தக் கன்மலையிலிருந்து வந்த தண்ணீர். நானே வானத்திலிருந்து இறங்கி வந்த ஜீவ அப்பம்” என்றார், அந்தவிதமாக, நீங்கள் பாருங்கள்.

140 அவர்களால் அதை விசுவாசிக்க முடியவில்லை. அவர்கள், “ஏன், இங்கே! உமக்கு ஒரு பிசாசு பிடித்துள்ளது என்றும், நீர் பைத்தியம் பிடித்தவர் என்றும் நாங்கள் அறிவோம்,” என்றனர், அது *பைத்தியம்* என்று பொருள்படுகிறது. “ஏனென்றால், உமக்கு ஐம்பது வயது கூட ஆகவில்லை, நீர் ஆபிரகாமைக் கண்டதாகக் கூறுகிறீரா?”

அவர், “ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே **நான் இருக்கிறேன்.** ஆம், **நான் இருக்கிறேன்”** என்றார்.

141 இப்பொழுது நாம் அதைக் காண்கிறோம், அதாவது இயேசு, “நான் தேவனிடத்திலிருந்து வந்தேன். நான் தேவனிடத்திற்குச் செல்கிறேன்” என்றார். இந்த அக்கினி ஸ்தம்பம் மாம்சமானபோது, தேவன் பிதாத்துவத்திலிருந்து வருகிறார், [ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.]…குமாரத்துவம், அவர் இந்தத் தன்மைக்குள் வந்தபோது. மூன்று தன்மைகள்; பிதா, குமாரன், பரிசுத்த ஆவி. தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டபோது, அவர், “நான் தேவனிடத்திலிருந்து வந்தேன். நான் தேவனிடத்திற்குச் செல்கிறேன்” என்று கூறிவிட்டு, அவர் மேலேறிச் சென்றார்.

142 தர்சு பட்டணத்தானாகிய சவுல், தமஸ்குவுக்குச் செல்லும் தன்னுடைய பாதையில், அவன் ஒரு ஒளியினால் தாக்கப்பட்டான். அவன் அதைச் செய்தபோது, அவன் மேலே நோக்கிப் பார்த்தான். அது அந்த அக்கினி ஸ்தம்பமாய் இருந்திருக்காவிடில், அந்த யூதன் எந்த ஒரு காரியத்தையும் ஒருபோதும் “கர்த்தர்” என்று அழைத்திருக்கமாட்டான். அவன் அங்கே அந்த ஒளியைக் கண்டு, “ஆண்டவரே, நீர் யார்?” என்று கேட்டான்.

அவர், “சவுலே, முள்ளில் உதைப்பது உனக்குக் கடினமாயிருக்கிறது” என்றார்.

அதற்கு அவன், “ஆண்டவரே, நீர் யார்?” என்று கேட்டான்.

அவர், “நானே இயேசு” என்றார். பாருங்கள், மீண்டும் அக்கினி ஸ்தம்பம்.

143 சவுலை நோக்கிப் பாருங்கள், அவன் தேவனுடைய பிரசன்னத்தில் தன்னைத் தரைமட்டமாகத் தாழ்த்திக்கொண்டான், பாருங்கள். தாழ்மை! தள்ளப்பட்டு கீழே விழுந்தான், ஒருவேளை மல்லாந்து படுத்துக்கொண்டு, மேலே பார்த்துக்கொண்டிருந்தான்.

144 அந்த அக்கினி ஸ்தம்பம் அங்கே சுற்றி அசைவதை, அவன் கண்டு அதை அறிந்து கொண்டான், அந்த நாளின் மகத்தான போதகராகிய கமாலியேலின் கீழிருந்து வந்த ஒரு போதகர், தேவன் தம்முடைய ஜனங்களை ஒரு அக்கினி ஸ்தம்பத்தின் ரூபத்தில் வழி நடத்தி வந்தார் என்பதை அவன் அறிந்திருந்தான். அந்த அக்கினி, அக்கினி ஸ்தம்பம் மாம்சமாகி, அவர்களுக்கு மத்தியில் வாசம் செய்து, அவர்களுடைய பாவங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டு, "நான் தேவனிடத்திலிருந்து வந்தேன்; தேவனிடத்திற்குத் திரும்பிப் போகிறேன்," அவர் இன்னமும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் இருந்தார்.

145 அதன் பிறகு, அதற்குச் சற்று முன்பாக, யோவான் ஸ்நானன், தீர்க்கதரிசிகளெல்லாரிலும் மகத்தான தீர்க்கதரிசியாக இருந்தான் என்று நாம் காண்கிறோம். எல்லா தீர்க்கதரிசிகளும் அவர் வருவதைக் குறித்து உரைத்தனர்; யோவான், "இது அவர்" என்றான். அவன்—அவன் அவரை உலகத்திற்கு அறிமுகப்படுத்தினான். யோவான் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தபோது, அங்கே தண்ணீரில் நின்றுகொண்டு, அவன்—அவன், "அன்றாட பலி தேவாலயத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு நேரம் வரும், அப்பொழுது ஒரு மனிதன் பலியாக இருப்பான்" என்று கூறிக் கொண்டிருந்தான். யோவான் தான் மேசியாவைக் காணப்போகிறான் என்பதில் உறுதியாக இருந்தான்.

146 நீங்கள் பாருங்கள், யோவான் அழைக்கப்பட்டபோது, அவனுடைய தகப்பனார் ஒரு ஆசாரியனாக இருந்தார். ஆனால் வழக்கமாக அந்த நாட்களில் ஒரு பையன் பின்தொடர்ந்து, தன் தகப்பனாரின் தொழிலையே இன்னமும் கிழக்கத்திய தேசங்களில் செய்கிறான். சாதாரணமாக அவன் ஒரு ஆசாரியனாக இருந்திருப்பான். ஆனால் ஆசாரியனாக ஒருபோதும் பள்ளிக்குச் செல்லவில்லை. காரணம், யோவான் தன்னுடைய தாயின் கர்ப்பத்திலிருந்து, "பரிசுத்த ஆவியால் நிறைந்தவனாக" பிறந்தான்.

147 எலிசபெத் கர்ப்பவதியானபோது, அவளுடைய வயிற்றில் இருந்த குழந்தை மரித்திருந்தது. காபிரியேல், தூதனால் மரியாள் சந்திக்கப்பட்டபோது, அவளுடைய ஒன்றுவிட்ட சகோதரியாகிய எலிசபெத்தும் கர்ப்பவதியானாள் என்று அவளிடத்தில் கூறப்பட்டது. மரியாள் அவளைச் சந்திக்க ஓடி வந்தாள். அவள் தன்னை மறைத்துக் கொண்டாள், குழந்தை ஆறு மாதங்களாக அசையாமல் இருந்த காரணத்தால் அவள் கவலையடைந்திருந்தாள், அது இயல்புக்கு மாறானது. எனவே அவள் மரியாள் வருவதைக் கண்டு, அவள் ஓடிப்போய் அவளைச் சந்தித்து, அவளைக் கட்டித் தழுவினாள். அவள் பேசத் துவங்கினாள். மேலும்—மேலும் அவள், "அவள் தாயாகப் போகிறாள் என்று எனக்குத் தெரியும்" என்றாள். அவள், "ஆம், நானும்—நானும் கூடத் தாயாகப் போகிறேன்" என்றாள்.

“ஓ, நீயும் யோசேப்பும் விவாகம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று நான் யூகிக்கிறேன்.”

“இல்லை, இல்லை. எங்களுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை.”

“நீ தாயாகப் போகிறாயா?”

148 “ஆம். பரிசுத்த ஆவியானவர் என்மேல் நிழலிட்டார், அந்தப் பரிசுத்தமானவர் என்னிலிருந்து, எனக்குள் பிறப்பார் என்றும், தேவனுடைய குமாரனாயிருப்பார் என்றும், நான் அவருக்கு ‘இயேசு’ என்று நாமம் சூட்டுவேன்” என்றும் கூறினாள்.

149 “இயேசு” என்ற அந்த வார்த்தை முதன்முறையாக ஒரு மனிதனின் உதடுகளிலிருந்து பேசப்பட்டவுடனே, இதுவரை ஜீவனே இல்லாத ஒரு குழந்தை, அதே சமயத்தில், அதனுடைய தாயின் வயிற்றில் ஜீவனைப் பெற்று, சந்தோஷத்தினால் துள்ளிக் குதிக்கத் துவங்கினது. “இயேசு கிறிஸ்துவின்” நாமம் மரித்த ஒரு குழந்தைக்கு ஜீவனை அளிக்குமானால், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டதாக உரிமை கோரும் மீண்டும் பிறந்த சபைக்கு அது என்ன செய்ய வேண்டும்? புரிகிறதா?

150 இப்பொழுது அவன் எந்தவிதமான ஒரு பையனாயிருக்க வேண்டும்? வரப்போகும் மேசியாவை அவன் அறிவிக்க வேண்டியதாயிருந்தது. மல்கியா 3-ல் அவன் அவ்வாறு செய்வான் என்று கூறியது. “இதோ, நான் என் தூதனை எனக்கு முன்பாக அனுப்புகிறேன்.”

151 இப்பொழுது, அவன் வேதபாட கருத்தரங்கிற்கு சென்றிருந்தால், அங்கே இருந்த அந்த ஊழியக்காரர்களில் சிலர், “இப்பொழுது, யோவானே, நீ மேசியாவை அறிவிக்க வேண்டும், ஏன், இங்குள்ள மாமா ஜோ, அல்லது—அல்லது—அல்லது தந்தை ஜிம், அல்லது அவர்களில் சிலரை நீர்—நீர் அறிவீர், மேசியாவாக இருப்பதற்கான எல்லா குணாதிசயங்களையும் அவர் உடையவராயிருக்கிறார் என்பதை நீர் அறிவீர்” என்றனர். அதாவது—அதாவது…பாருங்கள், அவன் மனிதனால் பாதிக்கப்பட்டிருந்திருப்பான்.

152 அவன் வனாந்திரத்திற்குள்ளாகச் சென்று, அவன் தேவனோடு தரித்திருந்தான். எனக்குத் தெரிந்ததில் அதுவே மிகச் சிறந்த வேதபாட கருத்தரங்கு. ஏனென்றால், சில மனிதர்கள் அவனிடம் அறிவுரை சொல்வதற்கும், அவனைப் பெரிய சமூக நிகழ்வுகளுக்கு அழைத்துச் செல்வதற்கும் அவனுடைய வேலை மிகவும் முக்கியமானதாக இருந்தது. பாருங்கள், அவனுக்கு ஒரு—ஒரு வேலை இருந்தது, அவன் ஏதோ ஒரு காரியத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டிருந்தான். யோவான் வெளிவந்து பிரசங்கித்தபோது, மேசியா அப்பொழுது பூமியில் இருந்தார் என்பதை அறிந்திருந்தான்.

153 அந்தச் சாஸ்திரிகள் நிச்சயமாக அறிந்திருந்ததுபோல, அவர்கள் பாபிலோனிலிருந்து நோக்கிப் பார்த்தபோது வரிசையாக மூன்று

நட்சத்திரங்களைக் கண்டனர், அது மேசியா ஏற்கனவே பூமியில் இருந்ததற்கான அடையாளமாயிருந்தது. அந்தக் காரணத்தினால்தான் அவர்கள், “யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?” என்று கதறிக்கொண்டிருந்தனர். சபையோ அதற்குப் பதிலளிக்கவில்லை. இன்றைக்கும் அவர்கள் அதைப் பெற்றிருக்கவில்லை. வேதம் அதைக் குறித்து வைத்துள்ளது. தேவனுடைய வார்த்தை அதைக் கொண்டுள்ளது. அது உண்மை.

154 யோவான் மேசியாவை அறிவிக்க வேண்டியதாயிருந்தது என்பதை நாம் கண்டறிகிறோம். அவர்...அவன் மேசியாவை ஒரு அடையாளத்தின் மூலம் மாத்திரமே அறிந்து கொள்வான். அந்தவிதமாகவே அவன் மேசியாவை அறிந்திருந்தான். அந்த விதமாக மாத்திரமே தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார்; ஒரு வேதப்பிரகாரமான அடையாளத்தினால். அவன் கவனித்துப் பார்த்தான். அவன் அங்கே வெளியே நின்று, அவன் கூறினான்...

அவர்கள், “நீர் தான் மேசியாவா?” என்று கேட்டனர்.

155 அவன், “இல்லை. அவருடைய பாதரட்சைகளைத் தொடக்கூட நான் பாத்திரன் அல்ல” என்றான். அவன், “ஆனால் அவர் ஒருவரே... உங்களுக்கு மத்தியில் ஒருவர் நிற்கிறார்” என்றான்.

156 ஓ, என்னே, நான் உணர்ச்சிவசப்படுகிறேன் என்று நினைக்க வேண்டாம்! நான் எங்கே இருக்கிறேன் என்பதை நான் அறிவேன். இல்லை, ஆனால் நான் அதைக் குறித்து சிந்திக்கும்போது, அது நன்றாக உணருகிறது, பாருங்கள், “உங்களுக்கு மத்தியில் ஒருவர் இருக்கிறார்.” நான் இன்றிரவு அதைக் கூறுகிறேன். கடைசி நாளில் ஊற்றப்படும் என்று வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ள மகத்தான பரிசுத்த ஆவியானவர் உங்கள் மத்தியில் இருக்கிறார். நான் தொடர்ந்து அவருடைய அடையாளத்தைக் காண்கிறேன், அவர் மேசியாவாயிருக்கிறார் என்பதை நான் அறிவேன், ஏனென்றால் அவர் இன்னமும் மேசியாவின் அடையாளத்தையே செய்கிறார்.

157 அங்கே அவர்களுக்கு மத்தியில் அவர் நின்றார். அவன், “உங்களுக்கு மத்தியில் ஒருவர் இருக்கிறார். அவருடைய பாதரட்சைகளைத் தொடவும், அவருடைய பாதரட்சைகளை அவிழ்க்கவும் நான் பாத்திரன் அல்ல. அவர் ஒருவரே பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்” என்றான்.

158 ஒரு நாள், அவர்கள் மத்தியிலிருந்து ஒரு சாதாரண மனிதன், வெளியே நடந்து வந்தார். யோவான் நோக்கிப் பார்த்தான், அவன், “இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி” என்றான். அவன் அதைச் செய்தபோது, அவன் கண்டான். அவன், “அவரைப் பின் தொடரும் ஒரு அடையாளம் இருந்தபடியால், நான் அவரை அறிந்திருந்தேன்” என்றான். இங்கே கவனியுங்கள்,

பூமியில் மகத்தான மனிதர்களில் இருவர் முகமுகமாய் நிற்கிறார்கள். யோவான்...

159 மிஷினரி பாப்டிஸ்டு சபையில் என்னை நியமித்த வேத பண்டிதர் ராய் டேவிஸ் எனக்கு நினைவிற்கு வருகிறது, அவர், “அங்கே என்ன நடந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள், பில்லி”, “என்ன நடந்தது...” என்றார்.

160 யோவான், “நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?” என்று கூறினபோது, யோவானின் தாழ்மையைக் கவனியுங்கள். அவன், “நான்—நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?” என்று கேட்டான். மேசியாவும் அவருடைய தீர்க்கதரிசியும் அந்த நாளின் முக்கியப் பிரமுகர்களாக இருந்தனர். வேதாகமத்தின் முக்கியப் பகுதிகளாக அங்கே நின்று கொண்டிருக்க, ஒருவர் மற்றவரை நோக்கிப் பார்க்கிறார். யோவான் தாழ்மையாய், “நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் ஏன் என்னிடம் வருகிறீர்?” என்று கேட்டான்.

161 இயேசு, “இதற்கு இடங்கொடு, ஏனென்றால் எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது” என்றார். மேலும், யோவான் அவருக்கு இடங்கொடுத்தான் என்று கூறப்பட்டுள்ளது.

162 வேத பண்டிதர் டேவிஸ் எனக்கு ஞாபகம் வருகிறது. அவர் ஒருக்கால் உட்கார்ந்து கொண்டிருக்கலாம். வேத பண்டிதர் டேவிஸ் அவர்களே, இதை உங்கள்மீது பழி சுமத்தவில்லை, ஆனால் நான்—நான்—நான்...அவர், “யோவான், இயேசு முதலில் யோவானுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார், ஏனென்றால் யோவான் ஞானஸ்நானம் பெறவில்லை” என்றார். அதன்பின்னர், “அப்பொழுது யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்” என்றார். அது எனக்குச் சரியாகத் தோன்றவில்லை.

163 ஆகையால் ஒரு நாள் பரிசுத்த ஆவியானவர் அருகில் இருந்தபோது, ஒரு தரிசனத்தில், அது என்னவாயிருந்தது என்பதை நான் கண்டேன்.

164 அங்கே யோவானும் இயேசுவும் முகமுகமாய் நின்று கொண்டிருந்தனர், வார்த்தை தீர்க்கதரிசியினிடத்திற்கு வந்தது. தீர்க்கதரிசியினிடத்தில் வார்த்தை வந்திருந்தது. ஆமென். அவர், “இப்பொழுது இடங்கொடு. அது சரியாயிருந்தது. இடங்கொடு. ஆனால் இவ்விதமாக நமக்கு எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்கு ஏற்றதாயிருக்கிறது.” அது ஆட்டுக்குட்டி என்பதை தீர்க்கதரிசி அறிந்திருந்தான், எனவே ஆட்டுக்குட்டி அளிக்கப்படுவதற்கு முன்னர் கழுவப்பட வேண்டும். ஆமென். எனவே அவன் அதைச் செய்தான். அதைப் பார்த்தீர்களா?

தீர்க்கதரிசி, வார்த்தையாயிருந்தபடியால், அது அவனிடத்தில் வந்திருந்தது.

[ஒரு சகோதரி அந்நிய பாஷையில் பேசுகிறார், ஒரு சகோதரன் அதற்கு அர்த்தம் உரைக்கிறார்—ஆசி.] ஆமென்.

165 தீர்க்கதரிசியாகிய யோவான், வார்த்தை அவருடைய தீர்க்கதரிசியினிடத்தில் வருகிறது, பாருங்கள், வார்த்தை சரியாகத் தீர்க்கதரிசியினிடத்தில் வந்தது. "அது ஏற்றதாய் இருக்கிறது," அது *ஏற்புடையதாய்* இருக்கிறது என்று கூறுகிறது, "எல்லா நீதியையும் நாம் நிறைவேற்றுவது நமக்குத் ஏற்றதாயிருக்கிறது," என்று அது பொருள்படுகிறது.

166 ஓ, எப்படி என்னால் இந்தப் பாடப்பொருளை ஒரு நிமிடம் விட்டுவிட்டுச் செல்ல முடியும், அது எப்படியாய் எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது! இந்த நேரம் இங்கே உள்ளது, ஏதோ ஒன்று, நாம் எல்லா நீதியையும் நிறைவேற்ற வேண்டும். என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் அறிவோம். பாருங்கள், நாம் அதைச் செய்ய வேண்டும், அது உண்மை, நம்முடைய முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறோம்.

167 கவனியுங்கள், அப்படியானால் தேவனுடைய பிரசன்னத்தில் யோவான் தன்னைத் தாழ்த்தினான் என்பதை நாம் கண்டறிகிறோம்.

168 அதைக் குறித்த காரியம் என்னவெனில், ஜனங்களே, என் சகோதரனே, சகோதரியே, நண்பர்களே, உங்களுடைய சிறுமையைக் குறித்து உணர்வுள்ளவர்களாயிருக்க வேண்டும். பார்த்தீர்களா? நீங்கள் எவ்வளவு பெரியவர் என்பதைக் குறித்து உணர்வுள்ளவர்களாய் இருக்காதீர்கள். நீங்கள் எவ்வளவு சிறியவர் என்பதைக் குறித்து உணர்வுள்ளவர்களாயிருங்கள். நீங்கள்—நீங்கள் சிறியவர். நாம் யாவரும் அந்தவிதமாகத்தான் இருக்கிறோம். நாம் இல்லாமல் தேவனால் செய்ய முடியும், ஆனால் அவர் இல்லாமல் நம்மால் செய்ய முடியாது. பார்த்தீர்களா? பார்த்தீர்களா? அவர் இல்லாமல் நம்மால்—நாம் செய்ய முடியாது, ஆனால் நாம் இல்லாமல் அவரால் செய்ய முடியும்.

169 தேவன் தம்முடைய கரங்களில் கிடைக்கக்கூடிய ஒரு நபரை மாத்திரமே கண்டறிய முயற்சித்துக் கொண்டிருக்கிறார். அவர் எப்பொழுதுமே அதைச் செய்ய முயற்சித்திருக்கிறார். அவர் ஒரு ஏசாயாவைக் கண்டபோது, அவர் ஒரு எரேமியாவைக் கண்டபோது, வேதம் முழுவதிலும் நீங்கள் கவனியுங்கள். அதன்பின்னர் அவர் ஒரு நாள் சிம்சோனைக் கண்டார்—அவர் கண்டார்; ஆனால் சிம்சோன் தன்னுடைய பெலனை தேவனுக்கு அளித்தான், ஆனால் அவன் தன்னுடைய இருதயத்தை தெலீலாளுக்குக் கொடுத்தான். பாருங்கள், அவன்…

170 நீங்கள் உங்களுடைய எல்லாவற்றையும் தேவனுக்கு அளிக்க வேண்டும்; உங்களுடைய பயபக்தியையும், உங்களுடைய

மரியாதைகளையும், உங்களுக்கு இருக்கிற உங்களுடைய ஒவ்வொரு காரியத்தையுமே. ஒன்றும் இல்லாதவர்களாக இருங்கள், நீங்கள் எவ்வளவு சிறியவர்களாயிருக்கிறீர்கள் என்று பாருங்கள், அதைத்தான் நாம் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அதுவே உண்மையான தாழ்மையாகும். அந்தவிதமாகத்தான் இந்தச் சேராபீன்களும் அவருடைய பிரசன்னத்தில் இருக்கின்றனர், நீங்கள் பாருங்கள், பயபக்தியுடன் தங்களுடைய முகத்தை மூடிக் கொண்டு; அவர்களுடைய பாதங்கள் தாழ்மையில் இருந்தன.

171 இப்பொழுது, மூன்றாவதாக, அவைகளால் பறக்க முடிந்தது. அவற்றைச் செயல்பட வைத்த இரண்டு செட்டைகளை உடையதாக இருந்தன.

172 தேவன் இங்கே தம்முடைய தீர்க்கதரிசிக்கு எவ்விதமான ஒரு ஊழியக்காரனை, பயபக்தியோடும், தாழ்மையோடும், செயலில் ஆயத்தப்படுத்தியிருக்கிறார் என்பதையும் காண்பித்துக் கொண்டிருக்கிறார். அதாவது, பாருங்கள், அவரை நோக்கிப் பார்க்கிற இவர்கள் ஒரு உண்மையான தேவனுடைய ஊழியக்காரன். அவன் பெருமையினால் உயர்ந்து பின்னர் விழுந்துபோன எசேக்கியாவை நோக்கிக் கொண்டிருந்தான். ஆனால் ஒரு ஊழியக்காரன், அவருக்கு முன்பாக உள்ள அவருடைய ஊழியக்காரன், பயபக்தியுள்ளவனாய், தாழ்மையாய், செயலில் இருக்கிறான். அவருடைய ஊழியக்காரர்கள், அந்தவிதமாகவே அவர்கள் உடை உடுத்த வேண்டும்; பயபக்தியோடும், தாழ்மையோடும், எப்பொழுதும் பிதாவினுடைய வேலையைக் குறித்தும் உடையவர்களாயிருப்பார்கள். ஆம், ஐயா. பயபக்தியாய், தாழ்மையாய், செயலில்.

173 அன்றொரு இரவு கிணற்றண்டையில், இருந்த அந்தச் சிறிய ஸ்திரீயைக் குறித்து நாங்கள் பேசினோம். இப்பொழுது, அவள் தன்னுடைய இருதயத்தில் ஒரு சிறு முன்குறிக்கப்பட்ட வித்தை உடையவளாய் இருந்தாள், ஆனால், அந்த வெளிச்சம் அங்கே பிரகாசித்தவுடனே, அது மேசியாவாயிருந்தது என்பதை அவள் கண்டவுடனே, அவளுக்கு நீண்ட நேரம் ஆகவில்லை. அவள் தன் கையில் வைத்திருந்த குடத்தையும் கூட மறந்துவிட்டாள். அந்த அளவுக்கு அவள் துரிதமாகச் செயல்பட்டாள். அவள் ஜனங்களிடம் கூற வேண்டியதாயிருந்தது. அவள் வேறொருவரிடம் கூற வேண்டியதாயிருந்தது, ஏனென்றால் அவள் மேசியாவைக் கண்டுபிடித்துவிட்டாள் என்று அவள் நிச்சயமாயிருந்தாள். அவள் நகரத்திற்குள்ளாகச் சென்று, துரிதமாகச் செயல்பட்டு, ஜனங்களிடத்தில் கூறினாள்.

174 அது பேதுருவாயிருந்தது, அவன் இரவு முழுவதும் மீன்பிடித்து, அன்று காலைக் கரையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். இயேசு தம்முடைய படகைக் கடனாக வாங்கி, கரையிலிருந்து கொஞ்சம் தள்ளிவிட்டு, ஜனங்களுக்குப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்.

அதன்பின்னர் அவர் சீமோனை நோக்கி, “ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய் மீன் பிடிக்கும்படி வலைகளைப் போடுங்கள். போடுங்கள்” என்றார்.

175 பாருங்கள், சீமோன், “நான் ஒரு மீனவன். சந்திரனும் அடையாளங்களும் எப்பொழுது சரியாக இருக்கும் என்பதை நான்—நான் அறிவேன். மீன் எப்போது கிடைக்கும் என்று எனக்குத் தெரியும். நான்—நான் இங்கே இந்த ஏரியில் பிறந்தவன். நான் இரவு முழுவதும் மீன்பிடித்து ஒரு சிறிய மீன் கூடப் பிடிக்கவில்லை. எனக்கு எதுவும் கிடைக்கவில்லை” என்றான். மேலும், “அங்கு உள்ளே மீன் இல்லை. ஆனால் உம்முடைய வார்த்தையின்படியே,” அங்குதான் காரியம், “நான் வலையைப் போடுவேன்.” ஓ, நீங்கள்…

176 இந்தக் காரியங்களை நம்மால் யூகித்துப் பார்க்க முடியாது, நீங்கள், தேவனைப் புரிந்து கொள்வது இயலாத காரியம், நீங்கள் அதை விசுவாசிக்க வேண்டும், பாருங்கள். தேவன் அறிவினால் அறியப்படுகிறதில்லை, கல்வியினால் அல்ல. அவர் விசுவாசத்தினால், அவர் விசுவாசத்தினால், மாத்திரமே அறியப்படுகிறார்.

177 “உம்முடைய வார்த்தையின்படியே! அங்கே மீன் இல்லை என்பதை நான் அறிவேன். ஆனால் உம்முடைய வார்த்தை, நீர், ‘போடு, அங்கே மீன் உள்ளது’ என்று கூறினீரேயானால், நீர்…விசுவாசம் அதை அங்கே வைக்கும். அவ்வளவுதான். நான் வலையைப் போடுவேன்” என்றான்.

178 இங்கு அமர்ந்துள்ள ஜனங்களுக்குச் சுகவீனமாயும், மேலும்—மேலும் தேவனிடத்திலிருந்து உதவி தேவைப்படுமாயின், நீங்கள், “நான் ஒவ்வொரு ஜெப வரிசையினூடாகவும் வந்திருக்கிறேன், நான்—நான் எல்லாவற்றையும் செய்திருக்கிறேன், ஆனால் உம்முடைய வார்த்தையின்படியே நான் வலையைப் போடப் போகிறேன். நான் இப்பொழுதே வருகிறேன், நான் அதைப் பெற்றுக்கொள்ளப் போகிறேன். நான் அவருடைய பிரசன்னத்தில் இருக்கிறேன் என்று நான் விசுவாசிக்கிறேன். நான்…” என்று கூறுவீர்களேயானால். தாழ்மையோடும், உத்தமத்தோடும், பயபக்தியோடும் அதை அங்கீகரியுங்கள். வலையைப் போடுங்கள். அதைப் பற்றிக் கொள்ளுங்கள். தேவன் அவ்வண்ணமாய்க் கூறினார், அது அவ்வண்ணமாய்ச் செய்கிறது!

179 அவன் ஒரு மீனவனாய் இருந்தபடியால், அவன் ஒரு நல்ல கப்பல் நிறைய மீன்களைப் பிடிப்பது எப்படி என்று அறிந்திருந்ததாலும், அவன் ஒரு ஏழ்மையான மனிதனாயிருந்தான், ஆனால் “இனிமேல் நீ மனுஷரைப் பிடிப்பாய்” என்று இயேசு கூறியபோது, அவன் துரிதமாகச் செயல்பட்டான் என்பதை நாம் கண்டுகொள்கிறோம். அது அவனுக்கு அதிக நேரம் எடுக்கவில்லை. அவன் தன்னைத் தாழ்த்தி, கிறிஸ்துவுக்கு முன்பாக விழுந்து,

“கர்த்தாவே, என்னை விட்டு அகன்று போகும்; நான் ஒரு பாவமுள்ள மனிதன்” என்றான். “என்னால்—என்னால்—என்னால் உம்முடைய சமூகத்தில் தரித்திருக்க முடியாது” என்றான்.

180 ஏசாயாவும் அதே காரியத்தைச் செய்தான். அவன், “நான் பாவமுள்ள உதடுகளையுடைய ஒரு மனிதன், நான் பாவமுள்ள ஜனங்களுக்கு மத்தியில் வாசம் பண்ணுகிறேன்” என்றான். ஓ, அவன் என்ன ஒரு நிலையில் இருந்தான்!

181 பேதுருவும் அதேக் காரியத்தைக் கூறினான், அவன் தன்னைத் தாழ்த்தி, முகங்குப்புற விழுந்து, அவனை விட்டுப் போக வேண்டுமென்று கர்த்தரிடம் வேண்டினான். அவர், “பேதுருவே, பயப்படாதே, இனிமேல் நீ மனுஷரைப் பிடிக்கப்போகிறாய்” என்றார். அவன் துரிதமாகச் செயல்பட்டான்.

182 ஒரு சமயம் குருடான ஒரு மனிதனை இயேசு சுகப்படுத்தினார். அது செயலில் இறங்க அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை; அவன் செயலில் ஈடுபட்டு, அவருடைய கீர்த்தியை எங்கும் பரப்பினான். யாரோ ஒருவர் வந்து, “ஏன், உன்னைச் சுகப்படுத்தியது யார்?” என்று கேட்டான், ஆசாரியர் கேட்டான். அவன்—அவன், தன்னை சுகப்படுத்தினது யார் என்று அவனிடத்தில் கூறினான்.

183 முதலில் அவர்கள் தகப்பனிடமும் தாயிடமும் கேட்டனர். அந்தத் தாயார் கூறினாள்…பாருங்கள், இப்பொழுது, காரணம் யாராவது இயேசுவை அறிக்கை செய்தால், ஏன், அவர்கள் அவர்களை ஜெப ஆலயத்திலிருந்து வெளியேற்றப் போகிறார்கள் என்று அவர்கள் பயமடைந்திருந்தனர். அதை அவர்கள் மீண்டும் தங்களுடைய பரிதாபமான மகன்மீது சுமத்தினார்கள். அவர்கள், “அவன் வயது சென்றவன். அவனைக் கேளுங்கள்” என்று கூறினர்.

184 அவன், “நசரேயனாகிய இயேசு என்னைக் குணமாக்கினார்” என்றான்.

185 அவன், “தேவனுக்கு துதி செலுத்துங்கள்!” என்றான். “நாங்கள்—நாங்கள்…நாங்கள் இந்த நசரேயனாகிய இயேசுவைக் குறித்து ஒன்றுமே அறியோம்” என்றனர். மேலும், “அவர் ஒரு பாவி. அவருக்கு எந்தத் துதியையும் செலுத்த வேண்டாம்; அவை எல்லாவற்றையும் தேவனுக்கு அளிக்க வேண்டும். இப்பொழுது அவர் எங்கிருந்து வந்தார் என்பதை நாங்கள் அறியோம்” என்றனர்.

186 பாருங்கள், இந்தக் குருடான மனிதன் அவர்களிடம் கேட்க ஒரு மிகச் சிறந்த கேள்வியைக் கொண்டிருந்தான். அவன், “அது ஒரு மிக விநோதமான காரியம். நீங்கள் யாவரும் இன்றைக்கு ஆவிக்குரியத் தலைவர்களாயிருக்கிறீர்கள் என்றும், இந்த மனிதன் என்னுடைய குருடாக்கப்பட்ட கண்களைத் திறந்தார், நான் குருடனாகப் பிறந்திருந்தபோதிலும், அவர் எங்கிருந்து வந்தார் என்பதை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள். பாருங்கள், இப்பொழுது அது ஒரு விநோதமான காரியமாயுள்ளது” என்றான்.

187 நானும் அதேக் காரியத்தைக் கூற முடியுமா? இந்தக் கடைசி நாளில், தம்முடைய சபையின் மேல் வருவதாக வாக்குத்தத்தம் செய்த அதே தேவன், அவர்கள் அதற்கான பதிலைப் பெற்றிருக்கவில்லை. பெற்றுக் கொள்கிறவன் பதிலைப் பெற்றுள்ளான்.

188 மேலும், "அவர் ஒரு பாவியாயிருக்கிறாரா அல்லது இல்லையா என்பதை என்னால் கூற முடியாது. ஆனால் ஒன்றை நான் அறிவேன்; அங்கே நான் ஒரு காலத்தில் குருடாயிருந்தேன். இப்பொழுது என்னால் காண முடிகிறது" என்றான்.

189 ஒரு காலத்தில் நான் ஒரு பாவியாயிருந்தேன்; நான் தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். எனக்கு ஏதோ ஒன்று சம்பவித்தது என்பதை நான் அறிவேன். எனக்கு… ஏதோ ஒன்று சம்பவித்துள்ளது. நீங்கள் அதை "பரிசுத்த உருளை" என்று அழைக்கலாம் அல்லது நீங்கள் என்ன வேண்டுமானாலும் அழைக்கலாம், ஆனால் அது முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் என்னை இரட்சித்தது. மேலும் அது எல்லா நேரத்திலும் மேம்பட்டுக் கொண்டே வருகிறது, எனவே நான்—நான் அதில் மகிழ்கிறேன்.

யாரோ ஒருவர், "உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது" என்றார்.

190 நான், "சரி, அப்படியானால் என்னை விட்டுவிடுங்கள். நான் முன்பு இருந்த நிலையை விட இப்போது இப்படியே இருப்பது எனக்கு மேல், எனவே நான் இருக்கிற விதமாகவே நான் இருக்கட்டும். நான் இந்தவிதமாக நன்றாக உணருகிறேன், மேலும் சிறப்பாகச் செயல்படுகிறேன். என்னால் இன்னும் அதிகமாகச் செய்ய முடியும்" என்றேன். ஆம், ஐயா.

191 அவன் உடனே செயலில் இறங்கினான். ஆம் ஐயா, அவன் அவருடைய கீர்த்தியை எங்கும் பரப்பினான்.

192 பெந்தெகொஸ்தே நாளில் இருந்த ஜனங்கள், தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொண்டார் என்பதை அவர்கள் கண்டவுடனே! இயேசு, "இதோ, நான் வாக்குத்தத்தத்தை அனுப்புகிறேன்," வேதவாக்கியம், "என் பிதாவின் வாக்குத்தத்தத்தை உங்களுக்கு அனுப்புகிறேன். ஆனால் நீங்கள் காத்திருங்கள்," அதாவது *காத்திருங்கள்*, "உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் காத்திருங்கள்."

193 முதல் ஜெப வரிசையிலோ அல்லது முதல் முறையினூடாகவோ அல்ல, ஆனால் அது நிகழும் வரை அங்கேயே இருங்கள், பாருங்கள். "அது சம்பவிக்கும் வரை," அது ஒரு நாளோ, இரண்டு நாட்களோ அல்லது பத்து வருடங்களோ, "அது சம்பவிக்கும் வரை". அதுவரை தரித்திருங்கள்!

194 அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டபோது, அவர்கள் துரிதமாகச் செயலில் இறங்கினர்; தெருக்களில் சென்று, கூச்சலிட்டு, நடனமாடி, குடித்த ஜனங்களைப் போல் நடந்து கொண்டு,

அந்நிய பாஷைகளில் பேசுதல், என்ன ஒரு ஆர்ப்பாட்டம்! அவர்கள் துரிதமாகச் செயல்பட்டனர்; அவர்கள் தங்களைத் தாழ்த்தினவுடனே, உள்ளே சென்று கதவை அடைத்துவிட்டு, தேவனுடைய வார்த்தைக்காகக் காத்திருந்தனர்.

195 ஓ, நாம் என்ன கண்டோம், நண்பர்களே! காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது என்பதை நான் அறிவேன், மேலும் நான் உங்களை இதற்கு மேல் வைத்திருக்க விரும்பவில்லை. ஆனால், பாருங்கள்! கடந்த சில வருடங்களாக நாம் கண்டுள்ளவை, நம் ஒவ்வொருவரையும் செயல்பட வைக்க வேண்டியதாயுள்ளது. அது நம்மைச் செயல்பட வைக்க வேண்டும். என்ன? முதலாவது, நம்மைப் பயபக்தியுள்ளவர்களாயும், தாழ்மையாயும், செயலிலும் செய்யச் செய்யும். நம்முடைய இருதயங்களில் அன்பு கொழுந்துவிட்டு எரிகிறது, இழக்கப்பட்ட உலகத்தைக் காணுகையில் நம்மால் முடிந்தளவு முயற்சிக்கிறோம். மேலும் தேவனுடைய அடையாளங்களைக் கண்டு…எனக்குத் தெரிந்தமட்டில், கடைசியில், வானத்திலிருந்து அக்கினி விழுவதற்கு முன்பு, சபையானது கடைசி ஒன்றைப் பெற்றுக் கொள்ளப் போகிறது என்பதை நான் அறிவேன். அங்கே வனாந்திரத்தில் காணப்பட்ட அதே அக்கினி ஸ்தம்பம், பரிசுத்த பவுலை வீழ்த்தின அதே அக்கினி ஸ்தம்பம், அதைக் குறித்த புகைப்படம் எடுக்கப்பட்டுள்ள அதே ஒருவர் கூட, அது அங்கே செய்த அதே காரியத்தை, அதே மேசியா இப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறார்.

196 நீங்கள் ஒரு பூசணிக்காய் கொடியின் ஜீவனை ஒரு தர்பூசணி கொடியில் வைத்தால், அது பூசணிக்காயைத் தரும். நீங்கள் ஒரு திராட்சைக் கொடியின் ஜீவனை ஒரு—ஒரு—ஒரு பேரிக்காய் மரத்திற்குள் செலுத்தினால், அது திராட்சை பழங்களைக் கொடுக்கும், ஏனென்றால் அது அதில் உள்ள ஜீவன்.

197 இதை நாம் காண்கிறோம், அறிந்திருக்கிறோம், உலகத்தைச் சுற்றிலுமுள்ள ஆயிரக்கணக்கானோர் அதை அறிந்திருப்போமானால், விஞ்ஞானம் அதற்குச் சாட்சி பகர்ந்துள்ளது, எங்கும், புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. அது இப்பொழுது இங்கே உள்ளது. அது உண்மை, அவ்வளவு உண்மை. அது இப்பொழுது இங்கே உள்ளது! அது கிறிஸ்து இயேசுவாகிய அந்த நபரில் இருந்தபோது, அது பெற்றிருந்த அதேவிதமான ஜீவனை அது சுமக்கவில்லையென்றால், அது அவருடைய சபையில் அதேக் காரியத்தைச் செய்யவில்லையென்றால், அப்பொழுது அது தவறாகும். ஆனால் அது அதே ஜீவனைப் பெற்றிருந்தால், அது இஸ்ரவேலரை வழிநடத்தின அதே அக்கினி ஸ்தம்பமாய் இருக்க வேண்டும். அது நம்மை வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு வழி நடத்திக் கொண்டிருக்கிறது. "என் பிதாவினுடைய வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு," அவர் நமக்கு அளித்த வாக்குத்தத்தம், அது நம்மை அங்கே வழி நடத்துகிறது. அது

முழுமையாக ரூபகாரப்படுத்தப்பட்டதையும், தேவனுடைய வார்த்தை வெளிப்படுத்தப்பட்டதையும் நாம் காண்கிறோம். ஊனமுற்றோர் நடக்கிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், குருடர் பார்க்கிறார்கள், மரித்தோர் உயிரோடெழுப்பப்படுகின்றனர்; இருதயத்தின் சிந்தனைகள் மறைக்கப்பட முடியாது, அது சரியாக வெளியே அழைக்கப்பட்டிருக்கிறது, அவர் செய்த அதே கிரியைகள். அது என்ன, யாரோ ஒரு மனிதனா? அது மேசியா! அது மேசியா, தேவன், பரிசுத்த ஆவியானவர், அதே ஒருவர். அது வைக்கப்பட வேண்டும்…

198 பெந்தேகோஸ்தே சபையானது, அதைக் குறை கூற முயற்சிப்பதற்கு பதிலாக, அது செயல்பாட்டில் இருக்க வேண்டும், எங்கும், தாழ்மையோடும், அன்போடும், இழந்துபோன, மரித்துக்கொண்டிருக்கிற ஜனங்களுக்கு அதைக் காண்பிக்க முயற்சிக்கிறார். நாம் அதற்கு மதிப்பளிக்க வேண்டும். நாம் அவரை நேசிக்க வேண்டும். நம்மைத் தாழ்த்தி, நம்மைப் பயபக்தியுள்ளவர்களாக்கி, பயபக்தியோடும், தாழ்மையோடும் இந்தச் சேராபீன்களைப் போலச் செயலில் ஈடுபடுவோம். அது தெளிவாக ரூபகாரப்படுத்தப்பட்டு, கடைசி நாட்களில் நமக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது, அது இங்குள்ளது! நாம் அதைக் காண்கிறோம். இயேசு அவ்வாறு கூறினார், அது சம்பவிக்கும் என்று கூறினார். இதோ அது எரிக்கப்படுவதற்கு சற்று முன்பு உள்ளது. அவருடைய வருகையின் அடையாளம், வருகையானது இப்பொழுது சமீபமாயுள்ளது என்பதை நிரூபிக்கிறது. அது எந்த நேரத்திலும் வரலாம். இப்பொழுது சபை எடுத்துக் கொள்ளப்படுதலை தடை செய்வதாக நான் எதையும் காணவில்லை.

199 பாருங்கள், முத்திரை—பாருங்கள், மிருகத்தின் முத்திரை மற்றொரு பக்கத்தில் உள்ளது, நினைவில் கொள்ளுங்கள், பாருங்கள், விசுவாசத்துரோகம், அது சபையாகவே உள்ளே வருகிறது. இப்பொழுது காத்திருங்கள், நான், ஒருக்கால் நான் ஏதோ ஒன்றை கூறியிருக்கலாம். அந்தவிதமாகத்தான் நான் அதைக் காண்கிறேன், பாருங்கள். கவனியுங்கள்.

200 வார்த்தைக்கு வார்த்தை, அது ஏற்கனவே நிறைவேறிவிட்டது. அது நம்மைச் செயல்பட வைக்க வேண்டும். அது முற்றிலும் உண்மை. நாம் ஒவ்வொரு இழக்கப்பட்ட ஆத்துமாவையும், நம்மால் முடிந்த தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். ஏனென்றால், இந்நாட்களில் ஒன்றில் நீங்கள் அவர்களைக் கொண்டு வரப் போகிறீர்கள், அது எந்த நன்மையும் செய்யாது. கதவு அடைக்கப்படும், இனிமேல் இருக்காது. ஓ, அவர்கள் மனதளவில் உழைத்து, உற்சாகமடைந்து, கூச்சலிட்டு, மேலும் கீழும் குதித்து, இதை உரிமை கோரலாம் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் நித்திரை செய்யும் கன்னிகைகள் எண்ணெய் வாங்க வந்தபோது, அவள் அதை ஒருபோதும் பெற்றுக்கொள்ளவில்லை. இந்தக்

கடைசி நாட்களின் சரித்திரம் முழுவதிலும், பிரஸ்பிடேரியன்கள், லூத்தரன்கள், மற்றும் மற்ற அனைவரும் பெந்தேகோஸ்தே செய்தியை ஏற்றுக்கொள்ள முயன்ற ஒரு காலத்தையாவது நீங்கள் எப்போதாவது கண்டதுண்டா? இயேசு என்ன கூறினார்? "அவர்கள் வாங்க வந்தபோது, அது மணவாட்டி உள்ளே பிரவேசித்த நேரமாயிருந்தது," புத்தியுள்ள கன்னிகைகள் உள்ளே சென்றனர். அவர்கள் எண்ணெய்யைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவ்வளவுதான். அது வேத வாக்கியத்தின்படியாயுள்ளது.

201 நீங்கள் இந்த அடையாளங்களையும், இந்த மற்ற காரியங்களையும், அவருடைய வருகைக்கான ஒழுங்கில் ஒவ்வொரு காரியமும் சரியாக அமைந்திருப்பதைக் காண்கிறீர்கள்.

202 ஏழாம் ஜாமத்தில், அவர் உள்ளே வந்தார். சிலர் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் ஜாமங்களில் நித்திரையடைந்தனர். ஏழாம் ஜாமத்தில், "இதோ மணவாளன் வருகிறார்!" என்ற சத்தம் உண்டானது. ஏழாம் சபைக்காலம், அதுவே ஜாமமாக இருக்கிறது, அதைக் கவனித்த காலம். இது லவோதிக்கேயா சபையின் காலம், அதன் முடிவில் உள்ளது. ஆமென். ஓ, அது…முடிவு நெருங்கிக்கொண்டிருக்கிறபோது, கர்த்தருடைய பரிசுத்தவான்களே, நீங்கள் ஏன் விழித்திருக்கக் கூடாது, ஏன் உறங்குகிறீர்கள்?

203 ஆனால், லவோதிக்கேயா சபையானது வெதுவெதுப்பாயிருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர், "நீ 'ஐசுவரியவானென்றும்,' மேலும்—மேலும் நீ 'திரவியசம்பன்னனென்றும்,' சொல்லுகிறபடியால்" என்றார். மேலும், "நீ நிர்வாணியும், குருடனும், தரித்திரனும், பரிதபிக்கப்படத்தக்கவராயுமிருக்கிறதை அறியாமலிருக்கிறாய், அதை அறியாமல் இருக்கிறாய்" என்றார். "உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்" என்றார்.

204 இங்கே நாம் எல்லாக் காரியங்களின் முடிவிலும், சரித்திரத்தின் முடிவிலும், நாகரீகத்தின் முடிவிலும் இருக்கிறோம். உங்களால் காண முடியும். தெருவில் பாருங்கள்.

205 என்னை அழைத்து வந்துகொண்டிருந்த, வாடகைக் கார் ஓட்டுநரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவர், "சரி, என்னால் கூறக்கூடிய ஒரே வழி, இங்கே சுற்றிலும் ஒரு மனிதன் சுயநினைவோடு செயல்படுவதை நான் காணும்போது, அவன் ஒரு அந்நியன் என்பதை நான் அறிவேன்" என்றார். பார்த்தீர்களா? இப்பொழுது, உங்களுடைய வண்டி ஓட்டுநர்களில் ஒருவர் அதைக் கூறினார். அவர்கள்…வழியில்…

206 அது இங்கே மாத்திரமல்ல, அது எல்லாவிடங்களிலும் உள்ளது. எல்லாவற்றின் முடிவும்; எவ்வளவு கொடூரமான, மனிதர்கள்,

எல்லாவிதமான பொல்லாங்கான காரியங்களையும், அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். உலகம் தாறுமாறாக்கப்பட்டிருக்கிறது. வீதிகளில் நோக்கிப் பாருங்கள். ஓ, என்னே, எங்கும் அதை நோக்கிப் பாருங்கள்! அமெரிக்காவில் மட்டுமல்ல; எல்லா இடங்களிலும், ஏன், அது ஒரு—அது ஒரு நவீன சோதோமாக இருக்கிறது.

207 சுட்டெரிக்கப்படுவதைத் தவிர வேறொன்றும் விடப்பட்டிருக்கவில்லை. அவ்வளவுதான், அது சுத்தப்படுத்தப்படும். தேவன் அதைச் செய்வார். அவருடைய சட்டங்கள் அதைக் கோருகின்றன. அது அந்தவிதமாகச் செய்யப்பட வேண்டும். ஒரு சோள தண்டு அதனுடைய ஜீவியத்தை முடித்துக்கொண்டால், அது அழிக்கப்பட வேண்டும். ஒரு மலரானது அதனுடைய ஜீவியத்தை முடித்துக்கொண்டால், அது மரிக்கத்தான் வேண்டும். நாகரீகம் அதனுடைய காலத்தைக் கடந்துவிட்டது. சபைக்காலம் முடிந்துவிட்டது. ஸ்தாபனங்கள் முடிந்துவிட்டன.

208 இது ஒரு இணையும் நேரம். ஐக்கிய நாடுகள், ஒன்றுபட்ட சபை, ஒன்றுபட்ட முயற்சி என்ற ஒன்று உண்டு. அது என்ன ஒரு அடையாளம்? கிறிஸ்துவும் அவருடைய மணவாட்டியும் இணைதல். அதுதான் அது. அவை யாவுமே நிழல்கள், மாதிரிகள். ஒவ்வொரு காரியமும் ஒன்றிணைக்கப்பட விரும்புகிறது, எனவே அது ஒரு அடையாளமாயுள்ளது. கிறிஸ்து தம்முடைய மணவாட்டியுடன் இணைய, வானத்தில் ஒரு கலியாண விருந்து நடைபெற ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார், எனவே அவருடைய அடையாளங்கள் இங்கே சமீபமாயிருப்பதை நாம் காணும்போது, அது சபையைச் செயல்பட வைக்க வேண்டும். ஓ, என்னே! இந்தக் காரியங்கள் யாவும் எங்கும், நமக்கு அடையாளங்களாக இருக்கின்றன. ஓ, நாம் செயலில் இருக்க வேண்டுமே!

209 பண்டைய ஏசாயா தீர்க்கதரிசியைப் போன்றே, தன்னை உயர்த்திக் கொண்ட மனிதர்கள் என்ன நிலைக்கு வருகிறார்கள் என்பதை நாம் காண்கிறோம். “பாருங்கள், நீங்கள் எங்களுடன் சேராததால், உங்களுக்கு இதில் இடமில்லை” என்று எழும்பிக் கூறும் இந்த ஸ்தாபன அமைப்புகளுக்கு என்ன நடக்கிறது என்பதை நாம் காண்கிறோம். அவர்களுக்கு என்ன நடக்கிறது என்பதை நாம் காண்கிறோம். அவர்கள் எதை இழக்கிறார்கள்? அவர்கள் பாவமுள்ள குஷ்டரோகத்தினால் பீடிக்கப்பட்டது போலவே, அவிசுவாசத்தினால், அவர்கள்—அவர்கள் தேவனுடைய வார்த்தையின் பேரில் தங்களுடைய பிடியை இழந்து விடுகின்றனர். இந்த ஜனங்களில் சிலர் முயற்சித்து, அவர்கள் பரிமாற்றம் செய்து, வார்த்தையின் பேரில் தங்களுடைய பிடியை இழந்து, அதைக் கோட்பாடுகளுக்காக மாற்றிக்கொள்கிறார்கள். அவர்கள் தாமாகவே எதைப் பெற்றுக் கொள்கிறார்கள்? ஒரு குஷ்டரோகத்தின் குழப்பம். அது உண்மை.

210 பண்டைய உசியாவைப் போல, அபிஷேகம் பண்ணப்பட்ட

உத்தியோகத்தின் ஸ்தானத்தை எடுக்க முயற்சித்து, ஒரு வேத பாண்டித்திய பட்டத்தை அல்லது அது போன்ற எதையோ தவிர தவிர வேறெதையும் பெற்றிருக்கவில்லை. தேவன் வேத பாண்டித்திய பட்டத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கவில்லை; அவர் தாழ்மையான இருதயங்களை, அவரை விசுவாசிக்கும் யாரோ ஒருவரையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆனால் நாம் புருஷர்களை அழைத்து, அவர்களைப் பேராயர்களிடத்திலும், மற்ற ஒவ்வொரு காரியத்திலும், போப்பாண்டவர் மன்ற உறுப்பினர்களிடத்திலும், இன்னும் என்னவெல்லாம், மாம்சப்பிரகாரமான கல்வியினால் ஒரு தெய்வீக உத்தியோகத்தை வகிக்கும்படியான போதிய கல்வியை அவர்களுக்கு அளித்தோம். அந்த உத்தியோகத்தை எடுத்துக் கொள்ள நமக்குப் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தேவை. பரிசுத்த ஆவியானவரே நம்முடைய போதகராயிருக்கிறார். அவரே இந்த வேளையின், கடைசி நாட்களின் அடையாளமாகத் தம்மை நமக்கு மத்தியில் தெரியப்படுத்துகிறார். ஆனால் நாமோ, எசேக்கியாவைப் போல உயர்த்தப்பட்டோம், அவர்கள் தங்களுடைய ஸ்தானங்களை எடுத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள்.

211 அந்தத் தரிசனத்தின் விளைவுகள் தீர்க்கதரிசிக்கு என்ன செய்தன என்பதைப் பாருங்கள். இப்பொழுது, அவன் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தான். அவன் கர்த்தருடைய வார்த்தை வருவதற்கான ஒரு பாத்திரமாயிருந்தான். அவன் தெரிந்து கொள்ளப்பட்டு, ஒரு தீர்க்கதரிசியாகப் பிறந்தான். முடிவிலே ஒரு ரம்பத்தால் துண்டு துண்டாக வெட்டப்பட்ட தன்னுடைய ஜீவனைக் கொடுத்தான். ஆனால் இந்த மகத்தான தீர்க்கதரிசி, பரலோகத்திலிருந்து வந்த இந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அந்த ஒழுங்கைக் கண்டபோதும், தேவன் எப்படி தம்முடைய மனிதரை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார், ஏன், அது தீர்க்கதரிசி ஒரு பாவி என்று அறிக்கை செய்யக் காரணமாயிருந்தது என்பதை நாம் கண்டறிகிறோம்.

212 நாம் மிகப் பெரியவர்களாயிருந்து, ஒருவிதமான பெரிய திருப்பப்பட்ட கழுத்துப்பட்டையை அணிந்து கொள்ள விரும்புகிறோம், ஒருவிதமான ஆடைகள், நாம் மிகவும் பரிசுத்தமாகவும், பயபக்தியுடனும் காணப்படச் செய்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். நம்மோடு பரிசுத்தம் இல்லை. நம்மால் பரிசுத்தமாக இருக்க முடியாது; பரிசுத்தமானது தேவனால் உண்டானது. பார்த்தீர்களா? நிச்சயமாக. அது ஒரு பரிசுத்த சபையல்ல, ஒரு பரிசுத்த மலையல்ல; அது ஒரு பரிசுத்த தேவன். அது உண்மை. பரிசுத்த ஜனங்கள் அல்ல; ஒரு பரிசுத்த தேவன்! அது ஜனங்களுக்குள் இருக்கும் தேவனாயிருக்கிறது. பேதுரு மறுரூப மலையைக் குறித்து, “பரிசுத்த மலை” என்று குறிப்பிட்டான். அது பரிசுத்த தேவன் மலையின் மேல் இருந்தார் என்று பொருள்படுகிறது.

இப்பொழுது அதைப் பாருங்கள், பாருங்கள். ஆனால் அது ஒரு பரிசுத்த தேவனாய், தேவனுடைய பிரசன்னமாயிருந்தது, அது அதைப் பரிசுத்தமாக்கியது.

213 இப்பொழுது நம் மத்தியில் உள்ள தேவனுடைய பிரசன்னமே பரிசுத்தத்தைக் கொண்டு வருகிறது, என்னுடைய பரிசுத்தம் அல்ல, உங்களுடைய பரிசுத்தம் அல்ல, ஆனால் அவருடைய பரிசுத்தம். அவருடைய பிரசன்னமே பரிசுத்தத்தைக் கொண்டு வருகிறது. நாம் நம்மைத் தாழ்த்தி, பயபக்தியிலும், தாழ்மையிலும் மூடிக்கொண்டு, "கர்த்தராகிய இயேசுவே, உம்முடைய ராஜ்யத்தில் என்னை ஏற்றுக்கொள்ளும்" என்று கூறுங்கள். அவருடைய பரிசுத்தம், நம்முடைய பரிசுத்தம் அல்ல. பரிசுத்த ஆவியானவரே!

214 தீர்க்கதரிசி அறிக்கையிட்டு, "நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்" என்று அவனைக் கூறும்படிச் செய்தது. ஒரு தீர்க்கதரிசி! தேவனே, அதைப் போன்ற மற்றொரு தரிசனம் எங்களுக்குத் தேவை! அவன் அங்கே மேலே பார்த்தபோது…இந்தச் சுத்திகரிக்கும் தேவனுடைய வல்லமையைக் கண்டான்.

215 இப்பொழுது தேவன் எப்படி செய்தார் என்பதைக் கவனியுங்கள். அவர் சேராபீன்களில் ஒருவனை அனுப்பி, அந்தப் பலிபீடத்திலிருந்து தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து, ஏசாயாவின் தலையைப் பின்னால் சாய்த்து, அவனுடைய உதடுகளைத் தொட்டு, "உன் அக்கிரமம் போய்விட்டது" என்றார்.

216 அதன்பின்னர் ஏசாயா மற்றொரு பாடத்தைக் கற்றுக்கொண்டான். நான் இதைச் சேர்த்துவிடலாம். இது மிகவும் பொருத்தமாக இல்லாமலிருக்கலாம், ஆனால் அது அவ்வாறு உள்ளது என்று நான் நினைக்கிறேன். நீங்கள் கவனித்தீர்களா, தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளை அக்கினியினால் சுத்திகரிக்கிறார், வேத சாஸ்திரத்தினாலோ அல்லது ஏதோ ஒரு புத்தகத்தினாலோ அல்ல. புரிகிறதா? அவர் தம்முடைய ஜனங்களை அக்கினியினாலும், பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் சுத்திகரிக்கிறார்; பிரமாணங்களின் அறிவிப்பு, அல்லது புத்தகங்கள் அல்லது நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய ஏதோ ஒரு காரியம், ஒரு கூட்ட ஜெபங்கள் போன்றவற்றினால் அல்ல. அவர் அவர்களைப் பலிபீடத்தின் நெருப்பினால் சுத்தப்படுத்துகிறார். அந்தவிதமாகவே அவர் அவனை ஒழுங்குபடுத்துகிறார். ஆம். ஆம், ஐயா. அந்தவிதமாகத்தான் அவர் தம்முடைய தீர்க்கதரிசிகளை ஆதியிலே சுத்திகரித்தார், நூற்று இருபது பேர் மேலறையில் இருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் விழுந்து, அக்கினி நாவுகள் அவர்கள்மேல் அமர்ந்தன. அவர்கள் சுத்திகரிக்கப்பட்டு ஆராதனைக்கு ஆயத்தமாயிருந்தனர். அந்த விதமாகத்தான் தேவன் சுத்தப்படுத்துகிறார். கற்றுக்கொண்டு, இளங்கலை பட்டம், அல்லது டிடி., பிஎச்.டி., பட்டம் பெறுவதனால் அல்ல;

ஆனால் வானத்திலிருந்து பரிசுத்த அக்கினியைப் பெற்று, அது உங்களுடைய உதடுகளின் பொய்யை எடுத்துப்போட்டு, உங்களிடத்திலிருந்து மாம்சபிரகாரமானத்தை எடுத்துப்போட்டு, உலகத்தின் கசடுகளை, அந்தக் காரியத்தை எரித்து, அங்கே அவருடைய பிரசன்னத்தை வைத்து, அந்த நபரின் மூலமாக ஜீவிக்கிறார். தேவன் தம்முடைய சபையைப் பரிசுத்த அக்கினியால் சுத்தப்படுத்துகிறார். ஏசாயா அதைக் கற்றுக்கொண்டான். தேவன் அறிவினால் சுத்திகரிக்கிறதில்லை என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அவர் அக்கினியால் சுத்தப்படுத்துகிறார்.

217 அவன் எப்படிப்பட்ட, ஒழுங்கில் அமைக்கப்பட்ட ஒரு தீர்க்கதரிசியாக இருக்கிறான் என்பதை நீங்கள் பாருங்கள். இப்பொழுது அவர் அவனுடைய உதடுகளைச் சுத்திகரித்து, அவனுடைய அக்கிரமத்தை எடுத்துப்போட்டார். அதன்பின்னர் அவன் அறிக்கை செய்து, தன்னைத் தாழ்த்தி, அவன் தேவனுடைய பிரசன்னத்தைக் கண்டபோது, “நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்” என்று அவன் கூறினான்.

218 நான் கூறுவதை நீங்கள் புரிந்து கொண்டு வருகிறீர்களா? [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.] நாம் என்ன செய்கிறோம், இப்பொழுது நாம் என்ன அறிந்திருக்கிறோம்? நாம் தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கிறோம். அது உண்மை. நாம் இப்பொழுது உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். நீங்கள்…நாம் அதைக் கிரகித்துக் கொள்ள முடியாது, ஆனால் நாம் இப்பொழுது தேவனுடைய சமுகத்திலிருந்து, தேவனைக் காண்கிறோம். அவர் இங்கே இருக்கிறார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நிச்சயமாகவே, அவர் இங்கே இருக்கிறார். நாம்…[ஒலிநாடாவில் காலி இடம்.]

219 நான் உங்களுடைய சகோதரன். ஆனால் அவரோ, “நான் செய்கிற கிரியைகளை அவரும்…நீங்களும் செய்வீர்கள்” என்றார். அதைத்தான் அவர் கூறினாரா? சரி. அவர் இங்கிருந்தால், அவருடைய ஆவியானவர் இங்கிருக்கிறார். அதுதான் அவரை உருவாக்குகிறது. அப்படியானால் நாம் நம்மை ஒப்புவித்து, நம்முடைய சொந்த சிந்தனைகளை அகற்றிவிட முடிந்தால் நலமாயிருக்கும். இது போன்றே *இதற்குச்* சிந்தனைகளே இல்லாதிருந்தால், அப்பொழுது வேறொரு சத்தம் அதனூடாகப் பேச முடியும். அதுதான் வழி. நாம் நம்மை வெறுமையாக்க முடிந்தால் நலமாயிருக்கும். அதுதான் அந்த இரகசியம், உங்களையே விலக்கிக் கொள்ளுங்கள்! அப்பொழுது தேவன்…உங்களுடைய சொந்த சிந்தனையை அகற்றிவிடுங்கள். உங்களுடைய சொந்த வழிகளை விட்டு விடுங்கள், அதன்பின்னர் தேவன் அசைவாடட்டும். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாத இயேசு கிறிஸ்துவாயிருந்தால், நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் இப்பொழுதே அவரை விசுவாசித்து, அது உண்மையா என்று பாருங்கள்.

220 இந்தச் சிறு நபர் இங்கே எனக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டிருப்பதை நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன். உன்னிடம் ஒரு ஜெப அட்டையை வைத்திருக்கவில்லை. நீ, நீ எதற்காக அங்கே அமர்ந்திருக்கிறாய் என்று தேவன் என்னிடம் கூறினால், அதை நீ விசுவாசிப்பாயா? அது ஒரு ஆவிக்குரிய பிரச்சனையாயுள்ளது, நீ மிகவும் குழம்பிப் போயிருக்கிறாய், நீ என்ன செய்வதென்று அறியாமல் இருக்கிறாய். அது உண்மையானால், உன் கரத்தை உயர்த்து. சரி, எல்லாம் முடிந்துவிட்டது. நான் கூறிய வார்த்தையை எடுத்துக் கொள்; அது எல்லாம் முடிந்துவிட்டது.

நீ அதை விசுவாசிக்கிறாயா?

221 அந்தக் கறுப்பு நிற பெண்மணி அங்கே பின்னால் உட்கார்ந்து கொண்டு அவனை நோக்கிப் பார்க்கிறாள்; இருதயக் கோளாறு ஏற்பட்டுள்ளது. தேவன் உங்களைச் சுகமாக்குவார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நிச்சயமாக. நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? [அந்தச் சகோதரி, "ஆமென்" என்று கூறுகிறாள்.—ஆசி.] சரி, நீங்கள் உங்களுடைய சுகமளித்தலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அவர் நேற்றும் இன்றும்…நீங்கள் விசுவாசிக்கிறீர்களா

222 அந்த மனிதன், தன்னுடைய கரத்தை உயர்த்தியிருக்கும் அந்த வெள்ளை மனிதன், நீங்கள் என்னைத் தேவனுடைய தீர்க்கதரிசி என்றும், அவருடைய ஊழியக்காரன் என்றும் நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? எனக்கு உங்களைத் தெரியாது. நீங்கள் எனக்கு ஒரு அந்நியர். உங்களிடம் ஜெப அட்டை அல்லது வேறு ஏதாவது இருக்கிறதா? நீங்கள் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிற ஒரு மனிதன். சரி, ஐயா, உங்களுடைய தொண்டையில் உங்களுக்கு ஒரு கட்டி உள்ளது. அது சரிதான். அது சரியா? நீங்கள் என்னை அவருடைய தீர்க்கதரிசி என்று விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் உங்களுடைய முழு இருதயத்தோடு என்னை விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் மற்றொன்றைப் பெற்றுள்ளீர்கள், நீங்கள் உங்களுடைய இருதயத்தில் ஒரு பாரத்தைப் பெற்றுள்ளீர்கள். அது ஒரு சிறு பெண்ணைக் குறித்ததாயுள்ளது, உங்களுடைய பேரப்பிள்ளையாகும். அவளுக்கு ஒரு மோசமான கரம் உள்ளது. அது உண்மை. அது உண்மையா? ஒரு நல்ல தொடர்பு உண்டு. ஒரு நிமிடம். நீங்கள் இங்கிருந்து வரவில்லை. நீங்கள் கனெக்டிகட்டிலிருந்து வந்திருக்கிறீர்கள். உங்களுடைய பெயர் வில்சன். உங்களுடைய முதல் பெயர் ஆர்ட். ஆர்ட் வில்சன். அது முற்றிலும் உண்மை. அது உண்மையா?

நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? சரியே!

223 இங்கே பின்னால் ஒரு பெண்மணி அமர்ந்திருக்கிறாள், ஒரு கறுப்பு நிற பெண்மணி, ஒரு மஞ்சள் நிற கோட் போன்ற ஒன்றை அணிந்திருப்பது போன்றும், ஆம், பட்டை தீட்டப்பட்ட பச்சை நிறத்தில் உள்ளது. அவள் ஜெபித்துக் கொண்டிருக்கிறாள். ஜெப

அட்டை இருக்கிறதா? [அந்தச் சகோதரி, “தேவையில்லை” என்கிறாள்.—ஆசி.] நீங்கள் ஒரு ஜெப அட்டையை வைத்திருக்கவில்லையா? நீங்கள் பெற்றிருக்கவில்லை. நீங்கள் என்னை அவருடைய ஊழியக்காரன் என்று விசுவாசிக்கிறீர்களா? நான் முற்றிலும் அந்நியன். நாம் இரண்டு இன ஜனங்கள். நீங்கள், ஆனால் நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள். அது நீங்கள் தான். ஆம். தேவன் உன்னுடைய தொல்லையை என்னிடம் கூற முடியும் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? உங்களுக்கு ஒரு கட்டி உள்ளது. அது உண்மை. நீங்கள் உங்களுடைய இருதயத்திலும் கூட ஏதோ ஒரு காரியத்தை உடையவர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள். அது ஒரு நண்பருக்குச் சிறுநீரக கோளாறு உள்ளது. அது உண்மையானால், உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள். சரி. இப்பொழுது நீங்கள் உங்களுடைய வேண்டுகோளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

224 நான் உங்களுடைய விசுவாசத்திற்கு சவாலிடுகிறேன்! அது என்ன? தீர்க்கதரிசி அவன் தேவனுடைய சமுகத்தில் இருப்பதைக் கண்டபோது, அவன் தன்னைத் தாழ்த்தினான். பாருங்கள், முதலில் அவன் தன்னைத் தாழ்த்தினான், அதன்பின்னர் அக்கினி அவனைச் சுத்திகரித்தது. அக்கினி அவனைச் சுத்திகரித்த பிறகு, அப்பொழுது அது ஒரு சுத்திகரிக்கப்பட்ட ஏசாயாவாகும். அவன், “யார் எனக்காகப் போவான்?” என்று கூறின தேவனுடைய சத்தத்தைச் கேட்டபோது, அவன், “இதோ நான் இருக்கிறேன், என்னை அனுப்பும்” என்று செயல்பாட்டுக்குள் சென்றான். ஓ, என்னே!

அக்கினித் தழல் தீர்க்கதரிசியைத் தொட்டபோது,
அவனை முற்றிலும் பரிசுத்தமாக்கி,
தேவனுடைய சத்தம், “யார் நமக்காகப் போவான்?” என்று கேட்டபோது,
அப்பொழுது அவன், “போதகரே, இதோ நான் இருக்கிறேன், என்னை அனுப்பும்” என்றான்.

225 ஆமென். பரிசுத்த ஆவியானவர் அவனைச் சுத்திகரித்த பிறகு, அது சுத்தமான ஏசாயாவின் அழைப்பாயிருந்தது. அவனுக்கு எந்தப் வேதபாட கருத்தரங்கு அனுபவங்களும் தேவையில்லை, அவனுக்கு எந்தப் புத்தக அனுபவமும் தேவையில்லை. அவன் தேவனுடைய அக்கினியால் சுத்திகரிக்கப்பட்டு, செயல்படும்படி அழைக்கப்பட்டிருந்தான். அது என்னவாயிருந்தது? அவன் தேவனை செயலில் கண்டபோது, அவன் செயலில் இறங்கினான்.

226 நாம் தேவனை கிரியையில் காண்கிறோம். சபையானது கிரியையில் இறங்கி, தேவன் என்னவாயிருக்கிறார் என்பதற்கு முன்னுதாரணமாயிருக்க வேண்டிய நேரமாய் இது உள்ளது. நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? எத்தனைபேர் இப்பொழுது உங்களுடைய எல்லா தவறுகளையும் மற்றும் ஒவ்வொரு

காரியத்தையும் அறிக்கையிட்டு, “தேவனே என்னைச் சுத்திகரியும்” என்று கூற விரும்புகிறீர்கள்?

அந்த வாலிபனை சுகப்படுத்தும்.

227 *(அக்கினித் தழல் தீர்க்கதரிசியைத் தொட்டபோது.)* நாம் எழும்பி நிற்போம். நான் இங்கே நிறுத்திக் கொள்கிறேன், காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது உங்களுடைய முழு இருதயத்தோடு விசுவாசியுங்கள்.

228 நீங்கள் உங்களுடைய தலைகளை வணங்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவன் தேவனைக் கண்ட பிறகு, நினைவிருக்கட்டும்! அது மீண்டும் உள்ளது. ஆமென். இப்பொழுது எதுவும் நடக்கலாம். என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்.

அக்கினித் தழல் தீர்க்கதரிசியைத் தொட்டபோது,
அவனை முற்றிலும் பரிசுத்தமாக்கி,
தேவனுடைய சத்தம், “யார் நமக்காகப் போவான்?” என்று கூறினதைக் கேட்டபோது,
அப்பொழுது அவன், “இதோ நான் இருக்கிறேன், என்னை அனுப்பும்” என்று பதிலளித்தான்.

என் ஆண்டவரே, பேசும்…

இப்பொழுது உங்களுடைய கரங்களை உயர்த்துங்கள்.

…ஓ, என் ஆண்டவரே, பேசும்,
பேசும், அப்பொழுது நான் துரிதமாக உமக்கு உத்தரவு கொடுப்பேன்;
என் ஆண்டவரே, பேசும், என் ஆண்டவரே, பேசும்,
பேசும், அப்பொழுது நான், “ஆண்டவரே, என்னை அனுப்பும்” என்று பதிலளிப்பேன்.

ஓ, இப்பொழுது கோடிக்கணக்கானவர்கள் பாவத்திலும், அவமானத்திலும் மரித்துக் கொண்டிருக்கிறார்கள், (உங்கள் வீதிகளைப் பாருங்கள்.)
ஓ, அவர்களுடைய சோகமான, கசப்பான கூக்குரலுக்கு செவிகொடுங்கள்;
ஓ, சீக்கிரம், சகோதரனே, அவர்களை மீட்க துரிதப்படுங்கள்;
“போதகரே, இதோ நான் இருக்கிறேன்” என்று துரிதமாகப் பதிலுரையும்.

என் ஆண்டவரே, பேசும்…

அது உண்மையாகவே இப்பொழுது பொருட்படுத்துகிறது.

…என் ஆண்டவரே, பேசும்,

பேசும், அப்பொழுது நான் துரிதமாக உமக்கு உத்தரவு கொடுப்பேன்;
என் ஆண்டவரே, பேசும், என் ஆண்டவரே, பேசும்,
பேசும், அப்பொழுது நான், “ஆண்டவரே, என்னை அனுப்பும்” என்று பதிலளிப்பேன்.

229 நாம் முணுமுணுத்துக் கொண்டிருக்கும்போது, நம்முடைய கரங்களை நம்முடைய இருதயத்தின் மேல் வைப்போம். உங்களுடைய அறிக்கையைச் செய்து, “கர்த்தாவே, நான் அசுத்த உதடுகளுள்ள ஒரு மனிதன். நான் அசுத்த உதடுகளுள்ள ஸ்திரீ” என்று கூறுங்கள். நாம் ஒரு உண்மையான அறிக்கையை உடையவர்களாயிருப்போம், அப்பொழுது நமக்கு ஒரு உண்மையான எழுப்புதல் உண்டாயிருக்கும். முதலில் சுத்திகரிக்கப்பட வேண்டும். கவனியுங்கள், தீர்க்கதரிசி முதலில் சுத்திகரிக்கப்பட வேண்டியவனாயிருந்தான். அக்கினி அவனைத் தொட்டது, அப்பொழுது அவன் செயல்பாட்டில் இருந்தான். “கர்த்தாவே, என் இருதயத்தில் வைராக்கியத்தை எனக்குத் தாரும். கர்த்தாவே, நான் பெற்றிராத ஏதோ ஒரு காரியத்தை எனக்குள் வையும். உம்முடைய அன்பையும், அக்கினியையும் எனக்குள் வையும், அதன்பின்னர் என்னை அனுப்பும்.” இப்பொழுது உங்களுடைய அறிக்கையைச் செய்து, உங்களுடைய முழு இருதயத்தோடு தேவனை விசுவாசியுங்கள்.

என் ஆண்டவரே, பேசும், என் ஆண்டவரே, பேசும்,
ஓ, பேசும், நான் சீக்கிரமாய் உமக்கு உத்தரவு அருளுவேன்;
என் ஆண்டவரே, பேசும், என் ஆண்டவரே, பேசும்,
பேசும், அப்பொழுது நான், “ஆண்டவரே, என்னை அனுப்பும்” என்று பதிலளிப்பேன்.

[சகோதரன் பிரான்ஹாம் வாய்திறவாமல் பாடுகிறார்—ஆசி.]

அவனை முற்றிலும் பரிசுத்தமாக்கி,
தேவனுடைய சத்தம், “யார் நமக்காகப் போவான்?” என்று கூறினதைக் கேட்டபோது,
அப்பொழுது அவன், “போதகரே, இதோ என்னை அனுப்பும்” என்று பதிலளித்தான்.

பேசும்…

230 இப்பொழுது தேவன் உங்களுடைய இருதயத்தில் பேசட்டும்; உண்மையாகவே தாழ்மையாய், இனிமையாய், பயபக்தியாய் அவருடைய பிரசன்னத்தில் இருக்க வேண்டும். ஒவ்வொரு பாவியும், ஒவ்வொரு பரிசுத்தவானும், இது

நம் எல்லோருக்குமானதாயுள்ளது. அது எனக்கானது. அது எல்லோருக்குமானதாயுள்ளது. இதோ அவருடைய பிரசன்னம், அவர் என்ன செய்வதாகக் கூறினாரோ, அவர் இங்கே இருக்கிறார். அவர் கூறின அந்த அடையாளத்தை நாம் பெற்றுக்கொள்வோம், இதோ அவர் இருக்கிறார். இனிமையாக இசை இசைத்துக் கொண்டிருக்கையில், நாம் நம்முடைய தவறை அறிக்கையிடுவோம். “கர்த்தாவே, நான் ஒன்றுமில்லை. என் இருதயத்தில் பேசும். கர்த்தாவே, முதலில் என்னைச் சுத்திகரியும். பரிசுத்த ஆவியை அனுப்பி என்னைச் சுத்திகரியும். நான் உம்முடைய பிரசன்னத்தில் இருக்கிறேன் என்பதை நான் அறிவேன். ஏசாயா நீர் அசைவாடுவதைக் கண்டது போன்றே நான் உம்மைக் காண்கிறேன். அந்த இடம் முழுவதும் புகையினால் நிறைந்துள்ளது, இப்பொழுது புகையினால் அல்ல, அது ஒளியினால் நிறைந்துள்ளது, மகிமையினால் நிறைந்துள்ளது.”

231 ஓ தேவனாகிய கர்த்தாவே, வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவரே, இது எங்கள் சிந்தையில் இருக்கிறபடியால், மேட்டிமையாய் உயர்த்திக்கொண்ட ஜனங்களுக்கு என்ன சம்பவிக்கிறது என்பதை நாங்கள் காண்கிறோம். அவர்கள் யாவரும் எங்களுக்கு மாதிரிகளாயிருந்தனர். இரட்சிக்கப்பட்டவர்களுக்கு தாழ்மையும், ஜெபமும் என்ன பொருட்படுத்துகிறது என்பதை நாங்கள் காண்கிறோம்.

232 பரலோகப் பிதாவே, இப்பொழுது இந்தக் கூட்டத்தினருக்காகவும், எனக்காகவும் நான் ஜெபிக்கிறேன். கர்த்தாவே, உம்மைப் போலல்லாத எந்தக் காரியத்தையும் என்னிடத்திலிருந்து எடுத்துப் போடும். கர்த்தாவே, நீர் எனக்குள் ஜீவிக்க வேண்டும் என்று நான்—நான்—நான்—நான் விரும்புகிறேன். முதன்மையோடு கூடிய உம்முடைய ஆவி எனக்கு வேண்டும். நீர் மிகவும் முழுமையாக எனக்குள் ஜீவிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், நான் இனி நானாகவே இல்லாமல், நான்—நான் வெறுமனே நடக்கவும், பேசவும், உமக்குள் ஜீவிக்கவும் விரும்புகிறேன். கர்த்தாவே, அதை அருளும். இதோ நான் இருக்கிறேன். கர்த்தாவே, என்னைச் சுத்திகரியும். இந்தச் சபையைச் சுத்தப்படுத்தும். எங்கள் எல்லோரையும் ஒருமித்து சுத்திகரியும். சுகவீனத்தை எடுத்துப் போடும், பாவத்தை எடுத்துப் போடும், அவிசுவாசத்தை எடுத்துப் போடும், சந்தேகத்தை எடுத்துப் போடும், அவை எல்லாவற்றையும் எடுத்துப் போடும். பரிசுத்த ஆவியானவர் இப்பொழுது பீடத்திலிருந்து ஒரு அக்கினித் தழலுடன் வந்து, ஒரு புதிய பெந்தெகொஸ்தே தீப்பொறியாக, இங்குள்ள ஒவ்வொரு இருதயத்தையும் சுத்திகரியும். கர்த்தாவே, எங்களை ஏற்றுக்கொள்ளும். நாங்கள் உம்முடையவர்களாயிருக்கிறோம். நாங்கள் உம்மை விசுவாசிக்கிறோம். பிதாவே, இதை அருளும்.

…பேசும், என் ஆண்டவரே,

பேசும், அப்பொழுது நான், “ஆண்டவரே,
என்னை அனுப்பும்” என்று பதிலளிப்பேன்.

233 விரும்புகிற, செய்யப்போகிற, மற்றும் தங்கள் வாழ்வை இப்பொழுதே கிறிஸ்துவுக்குப் புதிதாக அர்ப்பணித்திருக்கிற யாவரும், அவருடைய பிரசன்னத்தில் உங்களை அர்ப்பணிக்க விரும்புகிறவர்களே!

234 நான் கண்டுள்ளதை அழைக்கத் துவங்கினால், நான்…அது இங்குள்ள எல்லோரையும், இப்பொழுதே கூப்பிட வேண்டியிருக்கும் என்று நான் நினைக்கிறேன். நான் உங்களை அறிவேன். நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனாக இல்லாமல் இங்கு நின்று இதைச் சொல்லமாட்டேன் என்பதை நீங்கள் அறிவீர்கள், அது எல்லா இடங்களிலும் இருக்கிறது. நீங்கள் இப்பொழுதே ஒரு புதிய பெந்தெகொஸ்தேயைத் துவங்குவதற்கான ஒரு நிலையில் இருக்கிறீர்கள். நண்பர்களே, அது நிச்சயமாகவே உண்மை.

235 உங்களைத் தாழ்த்துங்கள். உங்களுடைய முகத்தை மூடி, உங்களுடைய பாதங்களை மூடி, அவரண்டை நெருங்கி வாருங்கள். பணிந்து, உங்களுடைய அறிக்கையைச் செய்து, விசுவாசியுங்கள். நீங்கள் அதைச் செய்ய விரும்புகிறீர்களா? நீங்கள் விரும்பினால், நாங்கள் *பேசும் என் ஆண்டவரே* என்று பாடுகையில், உங்களுடைய கரங்களை உயர்த்துங்கள்.

பேசும், என் ஆண்டவரே…

இப்பொழுது ஜெபியுங்கள்.

…பேசும், என் ஆண்டவரே,
பேசும், அப்பொழுது நான் துரிதமாக உமக்கு
உத்தரவு கொடுப்பேன்;
ஓ, பேசும், என் ஆண்டவரே, பேசும், என்
ஆண்டவரே…

63-1114 செல்வாக்கு
மார்க் பால்ரூம்
நியூ யார்க், நியூ யார்க் அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

## பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Voice Of God Recordings, India Office
19 (New No: 28) Shenoy Road, Nungambakkam
Chennai 600 034, India
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

Voice Of God Recordings
P.O. Box 950, Jeffersonville, Indiana 47131 U.S.A.
www.branham.org